# த வ ம்

சிவசங்கரி

திருமகள் நிலையம்
55, வெங்கட்நாராயணா ரோடு
தி.நகர், சென்னை-600017.

16978

## BIBLIOGRAPHICAL DATA


| | |
|---|---|
| Title of the Book | THAVAM |
| Author | SIVASANKARI |
| Language | Tamil |
| Date of Publication | Ist Edition Feb 1983 |
| II nd Edition | April 1993 |
| Copyright Holder | SIVASANKARI |
| Paper used | 11.6 kg. D. Crown (White Printing) |
| Size of the Book | 18.5X12.5Cm |
| Printing Points used | 10Point. |
| No of pages | 170 |
| Binding | Card Board |
| Subject | Novel |
| Printer | Sri Rajeswari Printing Works 12, Gajapathy Street Madras - 600 005 |
| Price | 22-00 |
| Publisher | THIRUMAGAL NILAYAM 55. Venkatanarayana Road T. Nagar Madras-600 017 |


3294704

## பதிப்புரை

நடமாடும் மாந்தர்களில் பலர்தான் எந்த நாவலுக்கும் கதாபாத்திரங்கள் ஆகிறார்கள்.

ஆனால் அந்தக் கதாபாத்திரங்களை வைத்துக் கொண்டு உயிரோட்டமுள்ள நாவல்களை எத்தனை பேரால் படைக்க முடிகிறது?

மணிமணியான நாவல்களைத் தருவதில் நிகரற்ற மாணிக்கமாகவே திருமதி சிவசங்கரி அவர்கள் தொடர்ந்து விளங்கி வருகிறார்கள்.

அவருடைய மற்றொரு அரிய படைப்பு! தவம்!

தவத்தை நூல் வடிவில் உங்கள் கையில் சேர்ப்பதில் எல்லையற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

மனநோயைத் தீர்க்கும் நல்ல மருத்துவர் போல எழுத்துலகில் விளங்கும் திருமதி சிவசங்கரி அவர்களுக்கும் நல்லவற்றை என்றும் வரவேற்கும் தமிழக மக்களுக்கும் என் அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அ. இராமநாதன்
திருமகள் நிலையம்

16978
3294/04

# தவம்

## காயத்ரி-1

காயத்ரி நிதானம் இழந்திருந்தாள்.

எழுந்தாள். நடந்தாள். உட்கார்ந்தாள். கையில் அகப்பட்ட புத்தகத்தை எடுத்துப் பிரித்தாள். புத்தியில் எதுவும் பதியாமல் கொஞ்சம் படித்தாள். மூடி வைத்தாள். ஜன்னலருகில் சென்று கம்பியில் முகத்தை அழுத்திக் கொண்டு தெருவைப் பராக்கு பார்த்தாள். நகத்தைக் கடித்தாள். சிந்தனையில் ஆழ்ந்தாள். டேபிள் மேல் வைத்திருந்த கவரைப் பிரித்துப் பார்த்தாள். உதட்டைக் கடித்தாள். பெருமூச்சு விட்டாள். எதுவும் செய்யத் தோன்றாமல் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள்.

என்னாயிற்று இந்தப் பெண்ணுக்கு?

சமையல் கட்டில் அமர்ந்து மாலை டிபனுக்காக தேங்காய் துருவிக்கொண்டிருந்த ராஜத்துக்கு கவலையாய் இருந்தது.

கல்லூரி மூடிவிட்ட இந்த ஒரு மாசமாகவே காயத்ரி எப்படியோதான் இருக்கிறாள்.

அத்தனை சிரிப்பில்லை, அத்தனை பேச்சில்லை, அத்தனை கலகலப்பு இல்லை.

என்றைக்குமே வாரிக் கொட்டி முழக்கும் ரகத்தோடு காயத்ரி சேர்த்தி இல்லை என்றாலும், இந்த மௌனம், இந்த அடங்கல் கொஞ்சம் அதிகம்தான்.

அதுவும் இன்று காலையிலிருந்து எதற்கோ அவள் தனியாய் தவிப்பது அப்பட்டமாக வெளியில் தெரிகிறது.

என்னவாயிற்று?

எதையாவது மனசில் வைத்துக் கொண்டு மருகுகிறாளா?

எதை?

அப்பா இல்லாத பெண் என்பதைத் தவிர காயத்ரிக்கு என்ன குறை?

ஏதாவது கோபமா? இல்லை வருத்தமா?

யார் மேல்? எதற்காக?

வைத்துவிட்டுப் போன காபி சூடாறி ஏடு படிவதைப் புரிந்து கொள்ள முடியாதபடி வேறு எங்கு கவனம்?

பெண்ணின் அவஸ்தைக்குக் காரணம் புரியாவிட்டால் இனி தாங்காது என்பது போல கைக் காரியத்தை அப்படியே வைத்துவிட்டு ராஜம் எழுந்து முன் அறைக்கு வந்தாள்.

''காயத்ரி''

''.........''

''ஏய்...காயத்ரி...''

தோளைத் தொட்டு உசுப்பினதும், அவள் சட்டென்று நிமிர்ந்தாள்.



''என்னம்மா?''

''காபி ஆர்றதுகூட புரியாம அப்படி என்ன யோசனை?''

''ரொம்ப சூடா இருக்குன்னு நான்தான் ஆற வைச்சிருக்கேன்ம்மா...''

''சூடாவா? இதுவா? தொட்டுப் பாரு''

கை நீட்டிக் காபியை எடுத்தவளிடமிருந்து ராஜம் லோட்டாவை வாங்கிக் கொண்டாள்.

''நான் சொல்லிட்டேங்கறதுக்காக, ஐஸா ஜில்லிட்ட காபியைக் குடிக்க வேண்டாம். குடு, சுட வைச்சுண்டு வரேன்...''

இரண்டு நிமிஷங்களில் சுட வைத்த காபியுடன் ராஜம் வந்தாள்.

காபியை மகள் குடித்து முடிக்கும் வரை எதுவும் பேசாமல் நின்று விட்டுத் தணிந்த குரலில் கேட்டாள்.

''ஏன் எப்படியோ இருக்கே காயத்ரி?''

''ம்? இல்லியேம்மா...''

''பொய் சொல்லாதே-கொஞ்ச நாளாவே எதையோ மனசுல வைச்சிண்டு நீ அவஸ்தைப் படறது எனக்குப் புரியலைன்னு நினைச்சியா? அதுவும் கார்த்தாலேருந்து குட்டி போட்ட பூனை மாதிரி ஒரு இடத்திலே பொருந்தி உட்காராம எதுக்காக அல்லாடறே? உனக்கு என்ன வேதனை? என்கிட்ட சொல்லக் கூடாதா?''

''ஒண்ணுமே இல்லம்மா — நீ வீணா எதையோ கற்பனை பண்ணிக்கறே...''

ராஜம் மகளைத் தீர்க்கமாகப் பார்த்தாள். கிட்ட உட்கார்ந்து அவள் தலைமுடியைக் கோதி விட்டாள்.

''ஒண்ணும் இல்லேனு நீ பிடிவாதமா சொன்னா, அப்புறம் நான் என்ன பண்ணட்டும்? நீ நிம்மதியா இருக்கணும்; அதுதான் எனக்கு முக்கியம்—உன்னை விட்டா எனக்கு வேற யாரு? சொல்லு...''

காயத்ரி பதில் எதும் சொல்லாமல் பார்வையை வேறு பக்கமாக வீசினாள்.

கொழுத்த பல்லி ஒன்று கதவிடுக்கிலிருந்து சப்தமில்லாமல் ஓடிவந்து ஏமாந்த சோணகிரியாய் உட்கார்ந்திருந்த விளக்குப் பூச்சியை ஒரே தாவலில் பிடித்து விழுங்கியது.

''என் மேலே உனக்கு ஏதாவது கோபமா காயத்ரி?''

''ச்சே...என்னம்மா நீ?''

''சரி, வேற யார் மேலயாவது...?''

''ம்ஹூம்...''

''உன் மனசு நோகற மாதிரி யாராவது ஏதாவது சொன்னாளா?''

''ஐயோ!— என்னம்மா நீ — தொண தொணனு— ஒண்ணும் இல்லே, நான் சாதாரணமாத்தான் இருக்கேன்னு சொல்றேனே...''

சின்னதாகக் குரலை உயர்த்தி காயத்ரி பேசவும், அரை நிமிஷம் ராஜம் மௌனித்தாள்.

''காலேஜ் முடிஞ்சதுலேருந்தே நீ சரியா இல்லாத மாதிரி மனசுக்குப் பட்டது. அதான் கேட்டேன்-ஒண்ணும் இல்லேன்னா சந்தோஷம்...''

காயத்ரி அம்மா பக்கமாகத் திரும்பி உட்கார்ந்து கொண்டாள்.

''படிப்பை முடிச்சாச்சே — இனிமே என்ன செய்யலாம்கற யோசனைதாம்மா...''



ராஜம் மௌனமாய் சிரித்தாள்.

''இதுலே யோசனை பண்ண என்ன இருக்கு காயத்ரி? வயசு இருபத்திரெண்டு ஆகப் போறது... எம். எஸ்ஸி. படிக்கணும்னு ஆசைப்பட்டே; அதையும் முடிச்சாச்சு... இனிமே காலா காலத்துலே கல்யாணம் பண்ணிண்டு செட்டில் ஆகவேண்டியதுதானே—இதுலே யோசனை என்ன?''

காயத்ரி எழுந்து ஜன்னலருகில் சென்று நின்று கொண்டாள்.

இரட்டையாக மைனாக்கள் பறந்து வந்து நித்திய மல்லிகைப் பந்தலில் உட்கார்ந்தன.

''சேஷு மாமா நேத்திக்கு பார்த்தப்பக்கூட அந்த கோயமுத்தூர் வரனைப் பத்தி சொன்னார். ஜாதகம் நன்னா பொருந்தி இருக்காம். நாம் 'ம்'முனு சொல்லிட்டா பெண் பார்க்க வரத் தயாரா இருக்கானாம். என்ன சொல்லட்டும்? அடுத்த வாரம் உனக்குத் தோதுப்படுமா?''

காயத்ரி அம்மாவைப் பார்க்காமலேயே நிதானமாகப் பேசினாள்.

''இப்போதைக்குக் கல்யாணம் பண்ணிக்கிற உத்தேசம் எனக்கு இல்லேம்மா...''

''ஏன் இல்லே?''

''எம். எஸ்ஸி. படிச்சதை வீணாக்கக் கூடாதுன்னு இருக்கு...''

''வேலை பார்க்கப் போறியா? கல்யாணம் பண்ணிண்டு வேலை பாரேன்...யார் தடுக்கறா?''

''வேலை பார்க்கணும்; மேலே பி. எச். டி. பண்ணணும்னு ஆசையா இருக்கும்மா...கல்யாணம் ஆனா இது நடக்கிற காரியமா?''

''மேல மேல படிச்சு என்ன பண்ணப் போறே காயத்ரி? சிறுசா இருக்குறப்பவே உன்னை ஒருத்தன்கிட்ட ஒப்படைச்சாத்தானே எனக்கு நிம்மதி? ஆண் பிள்ளை இல்லாத குடும்பம், அதான் வயசோட பொண்ணுக்கு கல்யாணம் பண்ணி வைக்கலைன்னு யாரும் சொல்ல இடம் கொடுக்கக்கூடாது பாரு...''

''சொல்றவாளுக்கு என்னம்மா? இப்படியும் பேசுவா, அப்படியும் பேசுவா; அவாளை விடு...எனக்கு இப்ப கல்யாணம் வேண்டாம். கொஞ்ச நாள் வேலை பார்க்கப் போறேன். அப்புறம் பி. எச். டி படிக்கப் போறேன்... அப்புறம்...''

ராஜம் மகளிடம் வந்து ஆதரவுடன் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

''உங்கப்பா நமக்கு எந்தக் குறையும் வைச்சிட்டுப் போகலை. தங்கிக்க விடு, எடுத்துச் செலவழிக்க பாங்கிலே பணம்னு, ஓரளவு வசதியான வாழ்க்கையைக் கொடுத்துட்டுத்தான் போயிருக்கார். நீ சம்பாதிச்சாகணுங்கற விதி நமக்கு இல்லே...வீணா எதையாவது நினைச்சுண்டு குழம்பாதே...''

காயத்ரி ஜன்னல் விளிம்பில் படிந்திருந்த தூசியை ஊதி விட்டாள். புடைவைத் தலைப்பால் கம்பிகளைத் துடைத்தாள். சில நிமிஷங்களுக்கு மைனாக்களை வெறித்தாள்.

''வெளியூருக்குப் போக உனக்கு இஷ்டமில்லேன்னா, அந்தக் கோயமுத்தூர் வரன் வேண்டாம். இங்க ராஜா அண்ணாமலைபுரத்திலே டாக்டர் பையன் ஒருத்தன்...''

காயத்ரி வேகமாகத் திரும்பினாள்.

''ப்ளீஸ்ம்மா...எனக்கு இப்போதைக்குக் கல்யாணம் பண்ணிக்கற உத்தேசம் இல்லே ... எத்தனை தரம்



சொன்னாலும் அதை ஏன் புரிஞ்சிக்க மாட்டேங்கறே? மீறிண்டு நீ யாரையாவது கூட்டிண்டு வந்தா முகத்துக்கெதிர்லியே 'உங்களை எனக்குப் பிடிக்கலை'ன்னு சொல்லுவேன்...அப்புறம் உன் இஷ்டம்...''

தீர்மானமாக மகள் பேசியதும் வளர்ந்து விட்ட பெண்ணிடம் இதற்கு மேல் என்ன பேசுவது என்பது புரியாத மாதிரி கொஞ்சம் விழித்துவிட்டு உள்ளே போகத் திரும்பிய ராஜத்தின் கண்களில் மேஜை மேல் இருந்த வெள்ளைக் கவர் விழ, எடுத்தாள்.

''கல்யாணப் பத்திரிகையா? யாருக்குக் கல்யாணம் காயத்ரி? இது எப்ப வந்தது?''

பிரித்துப் படித்தாள்.

சிரஞ்சீவி சுதாகருக்கு, சௌபாக்கியவதி சாருமதியை பாணிக்ரஹணம் செய்து கொள்வதாய் ஈஸ்வர இருவையை முன்னிட்டு, பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு...

''யார் இந்த சுதாகர்?''

காயத்ரியின் பதில் விரைப்பாக வந்தது.

''எ...என் காலேஜ் மேட்''

''என்னிக்குக் கல்யாணம்? எங்கே?''

''வெள்ளிக்கிழமை...இங்கதான் மீனாக்ஷி கல்யாண மண்டபத்திலே''

அசிரத்தையுடன் பத்திரிகையை ராஜம் மேஜைமேல் வைத்தாள்.

''உங்கூட படிச்ச ஆம்பிளைகூட கல்யாணம் பண்ணிக்கறான். நீதான் மாட்டேன்னு பிடிவாதம் பிடிக்கறே. உனக்கு யாராவது புத்தி சொன்னா தேவலை...ம்... கல்யாணத்துக்குப் போகப் போறியா?''

காயத்ரியால் உடனே பதில் சொல்ல இயலவில்லை.

உதட்டை சரிப்படுத்திக் கொண்டாள். வியர்த்துப் போன உள்ளங்கையைப் புடைவையில் அழுந்தத் துடைத்துக் கொண்டாள்.

சுதாகருக்குக் கல்யாணம்...

அவளுடைய சுதாகருக்கு கல்யாணம்...

சட்டென்று கல்லூரியின் கடைசி நாள் அவளுள் எட்டிப் பார்த்தது.

கூடவே, சரக்கொன்றை மரத்தின் அடியில், கண்கள் பளபளக்க மகா தயக்கத்துடன் "ஆயுசு பர்யந்தம் உன்னைப் பிரியாம வாழ நான் ஆசைப்படறேன் சுதா"—என்று வெட்கத்தை விட்டு அவனிடம் சொன்னதும் நினைவில் மின்ன, ஷ் கூடாது, அடங்கிக் கிட—என்று அடக்கி வைத்திருந்த கண்ணீர் பிடிவாதத்துடன் பிதுங்கிக் கொண்டு எட்டிப் பார்க்க, அந்தக் கண்ணீரை அடக்கும் பாவனையில் எச்சிலைக் கூட்டி விழுங்கி, ஒருவித எரிச்சலுடன் "போகாம? நான் போகாம எப்படி?" என்று அழுத்தமாகப் பதில் சொன்னாள் காயத்ரி.

## காயத்ரி-2

அது கண்டதும் காதலித்த காதல் இல்லை.

முதல் பார்வையிலேயே உள்ளம் உருகி, இவர்தான் என் வாழ்க்கைத் துணைவர் என்று மனசு ஆர்ப்பரித்த சமாசாரம் இல்லை.

சின்ன வித்தாக கண்டும் காணாமல் விழுந்து, தன் இச்சையால் வளர்ந்து, செடியாகி, மரமாகி, நெஞ்சம் முழுவதும் விஸ்வரூபம் எடுத்து அடைந்த பிறகே—ஒஹோ இதுதான் காதலா—என்று காயத்ரியால் இனம் கண்டு கொள்ள முடிந்த விஷயம்.

முதல் வருஷம் ஒன்றுமே இல்லை.

சாதாரண நட்புதான். நிஜமான சந்தோஷத்தில் உதடுகள் விரிய சிரித்த சிரிப்புதான்.

ஆனால், அந்தக் கோடை விடுமுறைக்கப்புறம்—சுதாகர் மேல் கொண்டுள்ள உணர்வுதான் காதல்—என்று அவள் உணர்ந்த பிறகு எல்லாமே மாறிப் போயின.

முதன் முதலில் அவனைக் காயத்ரி சந்தித்தபோது அவன் எம். எஸ்ஸி. முதல் வருஷத்தில் இருந்தான்.

கல்லூரி திறந்து ஒரு மாசத்துக்கும்மேல் ஆகிவிட்ட சமயம்.

பி. எஸ்ஸி.ஐ அந்தக் காலேஜிலேயே படித்து அவளும் அவள் குரல் இனிமையும் அத்தனை பேருக்கும் பரிச்சயமாகி இருந்த காரணத்தால், மத்திய மந்திரி வந்த ஒரு கூட்டத்திற்கு அவளைப் ப்ரார்த்தனைப் பாடல் பாடச் சொல்லி அழைத்த அந்த நாளில்தான் அவனை அவள் சந்தித்தாள்.

பாட்டுப் பாடி, பேச்சுகள் முடிந்து, கூட்டம் கலைந்து அவசரமில்லாமல் அவள் வெளியே வந்தபோது அவன் வாசலில் நின்றிருந்தான்.

''கங்கிராட்ஸ்—பாட்டுப் பிரமாதம்...''

பேசியவனை காயத்ரி நிமிர்ந்து பார்த்தாள்.

அவளுக்கே மேலே ஒரு சாண் உயரத்துக்கு அதிகமாய் அவன் நின்றிருந்தான்.

திடகாத்ரமான தேகவாகு.

ஆரோக்கியமான சிரிப்பு.

பதிலுக்குச் சின்னதாகப் புன்னகைத்து காயத்ரி ''தாங்க்ஸ்'' என்றாள்.

பத்து பதினைந்து நாட்கள் கழித்து லைப்ரரியில் இரண்டாவது சந்திப்பு.

புத்தகங்களை எடுக்கும் சுவாரஸ்யத்தில் கைக்குட்டையை அவள் தவற விட்டிருக்க வேண்டும்.

பின்னாலிருந்து அருகில் வந்து, ''இது உங்களுதா?'' அவன் கிசுகிசுப்பாக வினவ, அவனைப் புரிந்து கொண்டு தலையை ஆட்டி அதே கிசுகிசுப்பான குரலில் ''தாங்க்ஸ்'' என்றாள்.



அப்புறமும் தூரத்தில் அவனை இங்கே அங்கே என்று கல்லூரிக்குள் அவள் பார்த்ததுண்டு. வகுப்பு மாறி இன்னொன்றுக்குச் செல்லும்போது; மாடிப்படிகளில் வேகமாக இறங்கும்போது; பாட்னி லேப்பில் போர் அடித்தால் ஜன்னல் வழியாக பராக்கு பார்க்கும்போது; காண்டீனில் சிநேகிதிகளுடன் அரட்டை அடித்துக் கொண்டு காபி சாப்பிடும்போது...

சரியான அறிமுகம் இல்லாததாலோ என்னவோ ஒரு இளசான புன்னகை இருவரிடமும் ஜனிக்கும்; அதோடு சரி.

மூன்றாவது சந்திப்பு ஒரு எதிர்பாராத சம்பவம்.

கிருஷ்ண கான சபாவில் லால்குடியின் வயலின் கச்சேரி.

முதலில் இவள் போவதாக இல்லை. லால்குடியின் வாசிப்பில் தனி மயக்கம் என்றாலும், மறுநாள் இருந்த டெஸ்ட் பூச்சாண்டி காட்டினதில் கொஞ்சம் தயக்கம் இருக்கவே செய்தது.

''இரண்டு மணிநேரக் கச்சேரி; போயிட்டு வந்து படியேன் காயத்ரி—''

அம்மா தூண்டிவிட, ஆவது ஆகட்டும் என்று கிளம்பி விட்டாள்.

துவக்கத்தில் கானடா அடதாள வர்ணம், கானடா குழைந்தது; தெளிந்தது; இண்டு இடுக்கெல்லாம் புகுந்து புறப்பட்டது; மேடுபள்ளங்களில் ஏறி கொட்டியது. நீர் வீழ்ச்சியாய் ஆர்ப்பரித்தது. ராகதேவதை சர்வாலங்கார பூஷிதையாய் கண்முன்னே ப்ரத்யட்சமாக, காயத்ரிக்கு கண்ணோரங்களில் நீர் துளிர்த்தது.

''அருமையான வாசிப்பு; முதல் பாட்டிலேயே இப்படி தளை கட்ட வைக்கிற வித்தை சிலபேருக்குத்தான் சாத்தியம்...''

ரொம்ப தெரிந்த தினுசில் தலையைச் சாய்த்து பக்கத்து சீட்டுக்காரர் இவளிடம் பேசியதும் காயத்ரி திடுக்கிட்டுப் போனாள்.

விழிகளை நிமிர்த்தி யாரடா இது—என்று பார்த்தால், அவன்!

''ஹலோ...''

''.........''

''திடுக்குனு பேசி, உங்க லயிப்பை கெடுத்திட்டேனா?''

காயத்ரி புன்னகைத்தாள்.

''அதெல்லாம் ஒண்ணுமில்லே...நீங்க பக்கத்திலே உட்கார்ந்ததை நான் கவனிக்கவேயில்லையா, அதான் கொஞ்சம் தூக்கிவாரி போட்டுடுத்து...''

அவன் கண்களை அகல விரித்தான்.

''அடடே...'தேங்க்ஸ்'ங்கற வார்த்தை ஒண்ணுதான் உங்களுக்குத் தெரியும்னு நினைச்சேன். இத்தனை நீளமா பேசத் தெரியுமா, என்ன?''

காயத்ரி சிரிக்க, அவன் ''என் பேர் சுதாகர், ஒரே காலேஜ்லே படிச்சாலும், பேர்கூடத் தெரியாமத் தானே இருக்கோம்...'' என்றான்.

''ஐ'ம் காயத்ரி''

''தெரியும்—நீங்க பாட்னி—எம். எஸ்ஸி. பர்ஸ்ட் இயர்னும் தெரியும்...''

காயத்ரி பதில் எதும் சொல்லாமல் சிரிப்புடன் கவனத்தை லால்குடியிடம் திருப்பினாள்.

பூர்வி கல்யாணியில் மீனாக்ஷி மே முதம்—பாட்டு முடிந்த பிறகு உருகிப் போய் இவள் அமர்ந்திருந்த பாவனையுடனேயே அரை நிமிஷம் உட்கார்ந்துவிட்டு சுதாகர் மெதுவாகச் சொன்னான்.



''இந்தப் பாட்டை பாடறப்பத்தான் தீக்ஷிதர் பிராணன் அவரை விட்டுப் பிரிஞ்சதுங்கற விவரம் உங்களுக்குத் தெரியும் இல்லியா? மீனலோசனி, பாப மோசனி—ங்கற இடத்தைத் திருப்பி திருப்பி சிஷ்யர்களைப் பாடச் சொல்லிட்டு...அப்படியே...அந்த சுகானுபவத்திலே இருக்கறப்பலே அவரோட உயிர் பிரிஞ்சிதாம். வாட் ஏ க்ரேட் ஸோல் ஹி வாஸ்...''

காயத்ரிக்கு ரொம்ப ஆச்சரியமாக இருந்தது.

சங்கீதத்தில் இவனுக்கு இத்தனை ஈடுபாடா?

கச்சேரி முடிந்து கூட்டம் கலைவதற்காகக் காத்திருந்த நிமிஷங்களில் தான் எம்.காம். முதல் வருஷம் படிப்பதையும், பாட்டில் அபார மோகம் என்பதையும் கூடுமான வரையில் லால்குடியின் கச்சேரி என்றால் விட்டுக் கொடுப்பதில்லை என்பதையும் சொன்னான்.

அடுத்து வந்த நாட்களில் நிகழ்ந்த சந்திப்புகள் மூலம் அவனைப் பற்றிக் கொஞ்சம் அதிகமாகவே காயத்ரி தெரிந்து கொண்டாள்.

விவேகானந்தாவில் பி. ஏ. முடித்துவிட்டு இங்கே எம்.காமில் சேர்ந்திருக்கிறான். டென்னிஸ் பிரமாதமாக விளையாடுவான். காலேஜ் டீமில் இருக்கிறான். விளையாட்டோடு படிப்பு, பாட்டிலும் எமகாதகன்.

இன்னும் கொஞ்சம் பழக்கம் அதிகரித்த பிறகு அவன் ஆடும் டென்னிஸ் பந்தயங்களுக்கு இவள் சென்றாள், இவள் பங்கெடுத்த பாட்டுப் போட்டிகளுக்கு அவன் வந்தான்.

பேச்சுவாக்கில் தனக்குத் தந்தை இல்லை. தாய் மட்டும் தான், ஒற்றைப் பெண், மிடில் க்ளாஸ் ஃபாமிலி, என்பதை அவள் சொல்ல—''எனக்கு அம்மாவும் இல்லே காயத்ரி,

கார் ஆக்ஸிடெண்ட்லே பத்து வருஷம் முன்னால இரண்டு பேரும் போயிட்டா ... மாமாதான் எனக்கு இப்ப எல்லாம்'' என்று அவன் சொன்னான்.

சமயம் வாய்த்தால் காண்டீனில் உட்கார்ந்து இன்ன ஸப்ஜெக்ட் என்று இல்லாமல் பொதுவாக அரட்டை அடிக்தார்கள்.

''எம்.எஸ்ஸிக்கு அப்புறம் என்ன செய்ய உத்தேசம் காயத்ரி?''

''ம்? தீர்மானமாத் தெரியலை. பி. எச். டி. பண்ணணும்னு ஆசை இருக்கு...''

''படி, நான் வேண்டாங்கலை, ஆனா, உன் பாட்டை நீ நெக்லட் பண்ணக் கூடாது...உன் குரலுக்கும் ஞானத்துக்கும் நீ பிரமாதமான பாடகியா இருக்கலாம்...ஏனோ, ஆர்வத்தோட ப்ராக்டிஸ் பண்ணி, ரேடியோலே பாட, கச்சேரிகள் கொடுக்க நீ முனைய மாட்டேங்கறே...''

தீவிரமாக சுதாகர் பேசுவது காயத்ரிக்குச் சிரிப்பை எழுப்பும்.

சிரிப்பை அடக்கிக் கொண்டு 'பார்க்கலாம், பார்க்கலாம்' என்று சொல்லிவிட்டு பேச்சை மாற்ற எத்தனிப்பாள்.

''நீ என்ன செய்யப் போறே, சுதா? எம். பி. ஏ. படிக்கப் போறியா?''

''ம்ஹூம்—இல்லே—மாமா பிஸினெஸ்ஸை தனியா கவனிச்சுக்க முடியாம கஷ்டப்படறார்...முடிச்ச கையோடு அவர் கம்பெனிலே சேர்ந்துடுவேன்...''

எத்தனையோ பேர்களிடம் தோன்றியுள்ள நட்பு மாதிரிதான் இந்த சுதாகர்பால் தான் கொண்டிருப்பதும் என்று காயத்ரி நினைத்திருந்தது சுத்தமாய் பொய்த்தது. அந்தக் கோடை விடுமுறையின் போது...



இரண்டு மாசங்கள் முழுசாய் சுதாகரைக் காணாமல், அவனோடு பேசாமல் இருந்த சமயத்தில் அவளுள் புதுசு புதுசாக என்னென்னவோ வேதனைகள், உணர்வுகள்...

தூங்கி எழுந்த உடன் சுதா நினைவு. பாட உட்கார்ந்தால் அவன் ஞாபகம். வாட்டசாட்டமாய் தெருவில் ஒருவனை சந்தித்துவிட்டால் சுதா நினைப்பு. புத்தகத்தைப் பிரித்தால் அவன் சிரித்தது. பேசியது. டென்னிஸ் ஆடியது...

முதல் சில நாட்களுக்கு அவள் எதையும் பெரிதாக எண்ணவில்லை.

ஆனால், நாட்கள் செல்லச் செல்ல, எதிலும் சுதாகரைக் கண்டு, எதையும் சுதாகரோடு மனசு முடிச்சு போடுவதை உணர்ந்த பின்னர் என்ன இது!— என்று அதிர்ந்து போனாள்.

அவனைப் பற்றி அதிகம் நினைக்காமல் இருக்க முயற்சித்தாள்.

வேண்டாம் அவன் ஞாபகம்; அவன் என்ன அப்படி உயர்வு? எதற்காக சதா அவனை நினைக்கிறாய்?— என்று மனசைக் கோபித்துப் பார்த்தாள்.

கவனத்தை வேறு எதிலெல்லாமோ செலுத்த முயற்சித்தாள்.

பிடிவாதமாக எந்த ஸ்நேகிதியிடமும் அவனைப் பற்றி பேசாமல் விழிப்புடன் இருந்தாள்.

என்ன செய்து என்ன?

அந்த இரண்டு மாசங்கள் முடிவதற்குள் எத்தனைக் கெத்தனை சுதாகரை ஒதுக்க முயற்சித்தாளோ அத்தனைக் கத்தனை அவன் முழுக்க முழுக்க அவளை வியாபித்துக் கொண்டது நிஜம்.

கல்லூரி திறந்த பின், முதல் நாள் அவனைச் சந்தித்த நிமிஷத்தில் காயத்ரிக்குத் தொண்டை அடைத்துப் போனது; கை விரல்கள் சில்லிட்டுப் போயின, தெய்வ சன்னிதானத்தில் நிற்கிற நினைப்பில் கண்கள் பனபனக்க முற்பட்டன.

என்ன இது; ஏன் இந்த விநோத உணர்வு?

இதற்குப் பேர் என்ன?

இதுதான் காதலா?

எதுவும் தெளிவாகப் புரியவில்லை.

எதையும் வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் தொடர்ந்து அவனுடன் சாதாரணமாகப் பழகி வந்தாலும், மேற்கொண்டு சில மாசங்கள் போவதற்குள் இது சத்தியமாய் காதல்தான், அதைத் தவிர வேறில்லை என்பது அவளுக்குப் புரிந்து போனது.

சுதாகரின் நிலை என்ன?

அவனுக்கும் என் அவஸ்தைதானா?

அவன் கண்களில், பேச்சில், நடத்தையில் ஏதாவது மாற்றம் தெரிகிறதா?

ஊன்றி ஊன்றிப் பார்த்த வரைக்கும் அதே அன்பு, அதே கரிசனம், அதே சிரிப்பைத் தவிர புதுசாய் எதையும் காயத்ரியால் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஆனாலும்? ஆனாலும்?

இந்த அன்புக்கும், கரிசனத்துக்கும் என்ன அர்த்தம்?

என்னைப் பார்த்தால் முகமும், கண்களும் ஜொலிப்பாய் ஜொலிக்கின்றனவே, அதற்கு என்ன அர்த்தம்?

இப்போது எதுவும் பேச வேண்டாம்; படிப்பு முடியட்டும் என்று காத்திருக்கிறானோ?



கவனத்தைச் சிதற அடிக்கும் வகையில் எந்தப் பேச்சும் வேண்டாம் என்று தீர்மானமாய் இருக்கிறானோ?

இருக்கும்...இருக்கும்...

முதலில் படிப்பு முடியட்டும்...

பிறகு அவனாகப் பேச்சு எடுப்பான், நிச்சயம்...

மனசுக்குள் ஆயிரம் கணக்குப் போட்டுக் கொண்டு எதிர்பார்ப்புகளுடன் இருந்தவள், பரிட்சைகள் முடிந்து கல்லூரியின் கடைசி நாள் வந்த பிறகும் சுதாகர் தனிப்பட்ட ரீதியில் எதுவும் பேசாமல் மௌனித்ததும் தான் என்ன, என்ன என்று பரபரக்க யத்தனித்தாள்.

## காயத்ரி-3

கடைசி நாள்—

கல்லூரியின் வராந்தாக்களிலும், மைதானத்திலும், காண்டீனிலும், மாணவ மாணவியர் முடிச்சு முடிச்சாய் நின்றிருந்தனர்.

ஒவ்வொருத்தர் முகத்திலும் ஒவ்வொரு உணர்ச்சி.

வழக்கத்தைவிட அதிகமாகச் சிரித்துக் கேலி பேசியவர் சிலர். கண்கள் கலங்கி எழும் அழுகையை மென்று விழுங்கி இரண்டு வார்த்தைகூட பேச முடியாமல் அவஸ்தைப் பட்டவர் சிலர், ஆசிரியர்களிடமும், நண்பர்களிடமும் ஆட்டோ க்ராஃப் வாங்கியவர் சிலர், எதுவும் செய்யத் தெரியாமல் இரண்டுங் கெட்டானாகத் தவித்தவர் சிலர்...

—என்னப்பா க்ளாஸ் நிச்சயம் தானே?

—தெரியாதுப்பா...ஸெகண்ட் பேப்பர் கொஞ்சம் காலை வாரி விட்டிடிச்சே!

—மேலே என்ன பண்ணப் போறேடா?

—வேற என்ன? எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்லே ரெஜிஸ்தர் பண்ணிட்டு சிவசிவான்னு காத்திட்டு இருக்கப் போறதுதான்.





—இன்னிக்கு எல்லாரும் சேர்ந்து பிக்சர் போலாமா?

—மாலு-உன்னை இன்னிக் காலைல கார்ல கொண்டு விட்டதுதான் உன் பியான்ஸேயா?

—ம், அடுத்த மாசம் எட்டாம் தேதி கல்யாணம். இப்பவே சொல்லிட்டேன். கண்டிப்பா வந்திடணும்.

—நீ முதல்ல பத்திரிகை மறக்காம அனுப்பு.

—ச்சே...இரண்டு வருஷம் ஒண்ணாபடிச்சிட்டு அப்படிக் கூட மறந்திடுவேனா?

எந்தப் பேச்சிலும் மனசு லயிக்காமல் காயத்ரி வகுப் பறைகளை வளைய வந்தாள்.

எங்கே இந்த சுதா?

எங்கே போய் விட்டான்?

யோசனை மாறாமல் மாடிப்படிகளில் இறங்கிய நிமிஷத்தில் அவனே தன் வகுப்பு மாணவர்களோடு கூட்ட மாய் வருவதைப் பார்த்து விட்டு நின்றாள்.

அவன் ''ஹலோ'' என்றான். அருகில் வந்தான்.

''எங்க போயிட்டே கார்த்தாலேருந்து? உன் க்ளாஸ் பக்கம் கூட போயிருந்தேனே!''

''அதையேதான் நானும் கேட்க நினைச்சேன். மாடி பூரா சுத்தி வந்திட்டேன். உன்னைக் கண்ணுலேயே காணோம்!''

''காண்டீனுக்கு எல்லாருமா காபி சாப்பிடப்போயிருந் தோம்—இப்ப நின்னு பேச எனக்கு நேரமில்லே—லிஸன், காயத்ரி உன்னைக் கண்டிப்பா நான் சந்திச்சாகணும். சொல்லாமக் கொள்ளாம கிளம்பிடாதே. நாலு மணி சுமாருக்கு வாசப்பக்கம் பார்க்கலாமா?''

''கண்டிப்பாய் சந்திக்க வேண்டுமா?''

''ஏன்?''

சட்டென்று கன்னமும், காதும் சூடேறிப் போக மனசு தை தக்கா என்று நாட்டியமாட, சரி என்று தலை அசைத்துவிட்டுக் காயத்ரி கீழே வந்தாள்.

அடுத்துவந்த சில மணி நேரங்களில் அவள் மேகமாய் மிதந்தாள்.

பூவாய் விரிந்தாள். அருவியாய் சலசலத்தாள்.

உள்ளுக்குள் என்னென்னவோ கற்பனைகள்.

எப்படிச் சொல்லுவான்?

எல்லவென்று சொல்லுவான்?

கையைப் பற்றி, இதமாய் பார்த்து 'ஐ லவ் யூ' என்பானா?

உன்னைப் பார்த்த நாளிலிருந்து பித்து பிடித்த மாதிரி இருக்கிறேன். யாருக்கும் தெரியாமல் இருக்க நான் பட்ட கஷ்டம்....அம்மம்மா—என்று தோளைக் குலுக்குவானா?

நீ இல்லாமல் என்னால் இருக்க முடியாது காயத்ரி—உடனே உன் அம்மாவைவந்து சந்திக்கட்டுமா என்பானா?

ஐயோ—என்ன சொல்லுவான்?

எவ்வாறு தன்னை வெளிப்படுத்தப் போகிறான்?

கடைசி நாள் என்பதாலோ என்னமோ, பிற்பகலுக்குள் கல்லூரியில் கூட்டம் குறையத் துவங்கிவிட்டது.

சினிமா, பீச், ரெஸ்டாரண்ட் என்று சின்னச் சின்ன கும்பலாய் கிளம்பிய சிநேகிதிகள் 'நீ வரலியா?' என்று கேட்டபோது 'கொஞ்சம் வேலை இருக்கு' என்று புன்னகையுடன் காயத்ரி சமாளித்தாள்.



ஷூவை முக்காலுக்கு வாச வராந்தாவுக்கு வந்து படி இறங்கி மெதுவாக நடந்து மைதானத்தில் ராட்சஸ கூடாரங்களாய் கவிழ்ந்திருந்த கொன்றை மரங்களை நோக்கிச் சென்றாள்.

நாலு அடித்து ஐந்து நிமிஷங்களுக்கெல்லாம் சுதாகர் வேகமாக முன் வராந்தாவுக்கு வந்து நின்று விட்டு தூரத்து கொன்றை மரத்தடியில் இவள் அமர்ந்திருப்பது புரிய, வேகம் குறையாமலேயே அவளிடம் வந்தான்.

''ஹலோ''
''ஹலோ''

''ரொம்ப நேரமா காத்துண்டு இருக்கியா?''
''ம்ஹூம்''

அவளுக்குச் சற்று தள்ளி, மஞ்சள் சரக்கொன்றை விரித்திருந்த பாய்மேல் சுதாகர் உட்கார்ந்து கொண்டான்.

''ஸோ?''
''ஸோ?''

''காலேஜோட கடைசி நாள்...நம்ப எல்லார் வாழ்கையிலேயும் ஒரு முக்கியமான நாள்...''

மெல்லிய குச்சியை எடுத்து பூக்களை ஒதுக்கிவிட்டு காயத்ரி, மணலில் மூக்கு, புருவம், கண் வரைந்தாள்.

குச்சியைப் பிடித்திருந்த விரல் நடுங்குவதையும் நெற்றியில் வியர்வை துளிர்ப்பதையும், அவனால் உணர முடிந்தது.
''காயத்ரி''
''ம்?''

''நான் உனக்காக ஒரு சின்ன பரிசு கொண்டு வந்திருக்கேன்...''

''பரிசா? எனக்கா?''

அவன் நீட்டியதை வாங்கிப் பார்த்தாள்.

புரந்தரதாஸரின்—கீர்த்தன மாலா

முதல் பக்கத்தில்—நாதத்தின் நடுவிலே ஈசன் உறைகிறான்—என்று எழுதி, அன்புடன் சுதாகர் என்றும் கையெழுத்திட்டிருந்தான்.

''முன்னே ஒரு சமயம் நாம புரந்தரதாஸர் க்ருதிகளைப் பத்தி பேசிண்டிருந்தப்போ, என்ன தேடியும் இந்த புஸ்தகம் கிடைக்கலைனு நீ சொன்னியே, ஞாபகம் இருக்கா?''

''.........''

''அதுக்காகத்தான் நேத்து சாயங்காலம் பூராவும் மூர் மார்க்கெட்ல உட்கார்ந்துண்டு இதைத் தேடிப் பிடிச்சேன். உனக்கு சந்தோஷமா காயத்ரி?''

''ரொ...ரொம்ப....ஆனா, எதுக்காக நீ இத்தனை சிரமப்படணும் சுதா?''

''இதுலே என்ன சிரமம்? காலேஜ் முடிஞ்சாச்சு... இனிமே நாம முன்னே மாதிரி அடிக்கடி சந்திக்க முடியாது...இந்தப் புஸ்தகத்தைப் பார்க்கறப்போவாவது என் நினைவு உனக்கு வராதா? அதுக்காகத்தான்...''

''புஸ்தகத்தைப் பார்த்துத்தான் உன் ஞாபகம் எனக்கு வரணும்னு நீ நினைக்கிறியா, சுதா?''

''அப்படியில்லே காயத்ரி...இனிமே நீ எந்த ஊர்ல இருக்கப் போறியோ? நான் எங்க இருக்கப் போறேனோ? இந்த புஸ்தகத்தை பார்த்ததும், அட, நம்ப ரஸிகன் அவன், 'அவனுக்காகவாவது அஞ்சு நிமிஷம் கூட பாடணும்'னு நீ நினைக்கலாம், இல்லியா?''

காயத்ரியின் பெருங்குடலில் வெட்டுக் கிளிகள் தாவத் துவங்கின.



—நீ எங்கு இருப்பாயோ, நான் எங்கு இருப்பேனோ? —இந்தப் புஸ்தகத்தைப் பார்த்ததும் என் நினைப்பு வர வேண்டும்—கடவுளே...

இந்த வார்த்தைகளுக்கு என்ன அர்த்தம்?

குழப்பமும், பயமும் உடம்பு பூராவும் வியாபிக்க தொடர்ந்து அவன் வேறு ஏதாவது நல்லதாக சொல்ல மாட்டானா என்ற நப்பாசையுடன் அவனை வெறித்தாள்.

ஒரு நிமிஷம் மௌனமாய் சென்றது.

''ஏன் அப்படி பார்க்கறே காயத்ரி? என்கிட்ட ஏதாவது கேட்கணுமா?''

''.........''

''கார்த்தால பார்த்தப்பலே நீ எப்படியோ இருக்கற மாதிரி தோணித்து—வாட் ஈஸ் ராங்? உடம்பு சரியில்லையா?''

''ஓ...ஒண்ணுமில்லே சுதா...''

சுதாகர் மென்மையாய் சிரித்தான்.

''கடைசி நாள் வருத்தமா? ஐ ஸே கமான், ஸியர் அப்.''

எதற்கும் பதில் பேசாமல் பழையபடி குச்சியை விரலால் பிடித்து காயத்ரி, காயத்ரி என்று அவன் எழுதி அழிக்க முற்பட, சுதாகர், ஏதோ நினைப்பு வந்த மாதிரி சொன்னான்.

''அ—சொல்ல மறந்திட்டேனே—மாமா இன்னிக்கு கார்த்தால என்னோட பேசிண்டு இருந்தார். வர்ற ஒண்ணாம்தேதிலேருந்தே நான் கம்பெனிலே சேர்ந்திட்டா தேவலைனு அபிப்ராயப்பட்டார்...தாட் பாட்—படிச்ச

முடிச்சு ரிஸல்ட் வரத்துக்குள்ளே வேலை ரெடி...நான் அதிருஷ்டசாலி தானே காயத்ரி...அப்புறம் வந்து...''

லேசான வஜ்ஜையுடன் பேசுவதை நிறுத்திவிட்டு மீண்டும் அவன் தொடருமுன் சன்ன குரலில் ''சுதா'' என்றாள் காயத்ரி.

''ம்?''

''வந்து...வந்து...என்னைப் பத்தி நீ என்ன நினைக்கறே சுதா?''

இவள் இப்படி கேட்பாள் என்று எதிர்பார்க் காதவன், கண்களை வியப்பில் விரித்தான். கையைத் தட்டி ''ஹெய்'' என்றான்.

''திடீர்னு இப்படிக் கேட்டா?''

''சொல்லு சுதா, ப்ளீஸ்''

''ஓ. கே...ஓ.கே...கெட்டிக்காரி, புத்திசாலி, அழகி, நல்ல பாடகி. எல்லாத்தையும்விட, யு ஆர் எ குட் பர்ஸன்.''

அவ்வளவுதானா?

முழங்கால்களில் முகத்தைப் பதித்துக் கொண்டாள் காயத்ரி.

அந்த முகமும் தவிப்பும் ரொம்ப புதுசாய் இருக்க, தழைந்த குரலில் சுதாகர் ''காயத்ரி'' என்று அழைத்தான்.

பளபளத்த கண்களுடன் நிமிர்ந்தவளைப் பார்த்து ''வாட் ஈஸ் ராங்?''—என்று அந்த தொனியிலேயே வினவினான்.

''சுதா...நா...நான்''



''நீ?''

''உ....உன்னோட...''

''என்னோட?''

காயத்ரி பெருமூச்சு இழுத்து தைரியத்தை வர வழைத்துக் கொண்டாள்.

''நா...நான் உன்னோட ஆயுசு பூராவும் சேர்ந்து வா...வாழ ஆசைப்படறேன் சுதா... புரியலையா?...எ... என் மனசு புரியலையா?'' நினைப்பதைச் சொல்லிவிட்டு மீண்டும் முழங்கால்களில் முகத்தை அவள் பதித்துக் கொள்ள சுதாகர் ரொம்பவும் அதிர்ந்து போனான்.

மெதுவாக எழுந்து நின்றான்.

இப்படியும், அப்படியும் நடந்து கொண்டு வார்த்தை களைத் தேர்ந்தெடுத்துப் பேசினான்.

''ஐம் ஸாரி காயத்ரி...வெரி வெரி ஸாரி...உனக்குள்ளே இப்படியொரு ஆசை வளர்ந்திருக்கும்னு நான் நினைக் கவே இல்லை. இன்னி வரைக்கும் உன்னை ஒரு நல்ல ஸ்நேகிதியா நினைச்சுத்தான் நான் பழகி வந்திருக்கேன். நிஜமா சொல்றேன், வேற எந்தக் கோணத்துலேருந்தும் உன்னை நான் கற்பனை பண்ணிப் பார்க்கக் கூட முனைஞ்சதில்லே...என் ரஸனைகளெல்லாம் உன்கிட்டே அப்படியே இருக்கறதால ஒரு அலாதி ஈடுபாடு, சர்ப்பு... அவ்வளவுதான்—இதைப் போய் நீ...''

காயத்ரி அவசரத்துடன் குறுக்கிட்டாள்.

''நல்ல நட்பு, ஈடுபாடு, சர்ப்புலேருந்து ஜனிக்கிறது தானே சுதா காதல்?''

''இருக்கலாம்... ஆனா, உன்மேல தற்சமயம் எனக்கு நல்ல ஸ்நேகிதிங்கற பிடிப்பு மட்டும்தான் இருக்கு... உண்மையைச் சொல்றதுக்காக நீ வருத்தப்பட கூடாது...

இந்த மாதிரி ஆசை உன்னுள்ளே வளரும்னு எனக்குத் தெரிஞ்சிருந்தா, சத்தியமா உன்கிட்டே இருந்து நான் விலகி நின்னிருப்பேன். என் அப்பா, அம்மா செத்துப் போனதுலேருந்து மாமாதான் எனக்கு எல்லாம்னு உனக்கு நான் முன்னமே சொல்லி இருக்கேன், இல்லியா? அந்த மாமா தன் பெண் சாருவை நான் கல்யாணம் பண்ணிக் கணும்னு எதிர்பார்க்கிறார். இது தெரிஞ்சதுலேருந்து அவதான் எனக்கு மனைவினு நான் தீர்மானம் பண்ணிட் டேன். சாரு பிரமாத அழகி, கெட்டிக்காரி இல்லே, ஆனாலும் நல்லவ. என்னை ஆளாக்கின மாமா பெண். முக்கியமா என்மேல அலாதி அன்பு வைச்சிருக்குறவ... இன் ஃபாக்ட், அடுத்த மாசம் கல்யாணத்தை வைச்சிக்க லாம்னு மாமா கார்த்தால சொன்னதை உனக்கிட்ட கொஞ்சம் முன்னால நான் சொல்ல வந்தேன்–அதுக்குள்ள நீ வேற எதையோ பேசிட்டே—ஐம் ஸாரி காயத்ரி...''

நின்றவனின் கையை காயத்ரி சட்டென்று எட்டிப் பிடித்தாள்.

''சுதா...நான்...நான்...உன்னை..ஓ..ப்ளீஸ்...சுதா...''

கண்களிலிருந்து ஜலஜலவென்று நீர் பெருக, பரிதாப மாய் பேசும் அவளை அரை நிமிஷம் சுதாகர் பார்த்தான். பின், மெல்ல கையை உருவிக்கொண்டு ''வேண்டாம் காயத்ரி. மேலே எதுவும் பேசிடாதே...ப்ளீஸ் வேண்டாம்... வேண்டாததைப்பேசி ஒரு நல்ல நட்பைக் கெடுத்திடாதே. காயத்ரி...ப்ளீஸ்...'' கெஞ்சும் குரலில் பேசியவன் மேற் கொண்டு அங்கு நிற்கப் பிடிக்காதது போல, திரும்பி வேகமாய் நடந்துவிட, ரொம்ப நேரத்துக்கு— 'இருட்டு கவிஞ்சிகிட்டு வருது, இன்னும் ஒண்டியா இங்க என்னம்மா செய்யறீங்க?' என்று வாட்ச்மேன் வந்து அதட்டும் வரையில் அப்படியே அமர்ந்து சப்தமில்லாமல் காயத்ரி அழுது கொண்டிருந்தாள்.

## காயத்ரி-4

போகலாமா? வேண்டாமா?

என் அருமை புரியாமல் என்னை உதாசீனப்படுத்தி யவன் திருமணத்துக்கு நான் ஏன் போக வேண்டும்?

வெட்கத்தை விட்டு 'ஐ லவ் யூ' என்று சொல்லாமல் சொன்ன பிறகும்கூட நிர்தாட்சிண்யமாக மறுத்துவிட்ட வனின் கல்யாணத்துக்கு நான் ஏன் போக வேண்டும்?

இரண்டு வருஷங்களாக கண்ணெல்லாம் அன்பாக, உன்னை மாதிரி புத்திசாலி உண்டா?—உன்னை மாதிரி பாடகி உண்டா? என்று மூச்சுக்கு முன்னூறு தரம் புகழ்ந்துவிட்டு கடைசியில் நீ எனக்கு வெறும் ஸ்நேகிதி தான். வேறு விதமாய் உன்னைக் காண்பது எனக்கு இயலாது—என்று அப்பட்டமாக முகத்தில் அடித்து விட்டுச் சென்றவனின் திருமணத்துக்கு நான் ஏன் போக வேண்டும்?

இன்னும் நான் அத்தனை ரோஷம் கெட்டுப் போய் விடவில்லை, வெட்கம் மானத்தை ஒட்டுமொத்தமாக இழந்து விடவில்லை.

நோ—ஜம் நாட் கோயிங்

அம்மாவிடம் நான் போகாமல்?—என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லி விட்டாலும், திருமண பத்திரிகை வந்த நொடியிலிருந்து காயத்திரியினுள் குழப்பம் தான்.

போவதா? வேண்டாமா?

ஒருநாள் பூராவும் யோசித்துவிட்டு அம்மாவிடம் சொல்லி விட்டால் என்ன...தலைவலி கால்வலி என்று ஏதாவது காரணம் காட்டி தப்பவா முடியாது என்ற அவள் தீர்மானத்தை மறுநாள் சுதாகரிடமிருந்து வந்த கடிதம் அஸ்திவாரத்தில் தாக்கியது.

அன்புமிக்க காயத்ரி—

நேற்று உனக்கு நான் அனுப்பின பத்திரிகை கிடைத்திருக்கும் என்றே நம்புகிறேன். என்னைப் பொறுத்தவரை உனக்கும், எனக்கும் நடுவில் உண்டான ஸ்நேகிதம் ஒரு அற்புதமான சமாச்சாரம். சாதாரணமாக யாருக்கும் கிடைக்காத ஒன்றான அதை எந்த காரணத்துக்காகவும் இழப்பதில் எனக்கு சம்மதமில்லை. அந்த நட்பை அழிய விடமாட்டேன் சுதா—என்று சொல்லும் வகையில் என் திருமணத்தில் நீ கலந்து கொண்டால், நான் அடையும் சந்தோஷம் தனிப்பட்டதாய் இருக்கும்.

என்றும் உன் நல்ல நண்பனாக

இருக்க விரும்பும்

சுதா

ஒவ்வொரு வார்த்தையும் உள்ளுக்குள் சென்று அடிபட்ட காயத்தை வருடிக் கொடுக்க, லெட்டரைப் படித்து விட்டு ஏன் என்று விளக்க முடியாமல் காயத்ரி விசித்து விசித்து அழுதாள்.



சுதாவுக்கு இன்றைக்கும் நான் ஸ்பெஷல்தானா? என் நட்பு அவன் வெகுவாக நேசிக்கும் ஒன்றுதானா?

இல்லாவிட்டால் இப்படி ஒரு கடிதத்தை எழுதுவது அவனுக்கு எப்படி இயலும்?

உடல் ஆசை, திருமண பந்தம் என்ற கட்டுக்குள் அடங்காமல், உயர்ந்ததொரு இடத்தில் எங்கள் நட்பை பிரதிஷ்டை செய்ய அவன் விரும்புகிறானா?

அதுதான், இத்தனை அன்பாக ஒரு கடிதத்தை எழுதி இருக்கிறானா?

கடவுளே...நான் இப்போது என்ன செய்ய வேண்டும்?

எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்?

சுதா என் மேல் காதல் கொள்ளாத போது, நானாக, ஒருதலை பட்சமாக அவன் மேல் ப்ரியம் வைத்துவிட்டு இன்று அவனை நொந்து கொள்வது நியாயமில்லையோ?

நல்ல நட்பை இழக்க மனமில்லை என்று மீண்டும் எனக்குக் கடிதம் எழுத வேண்டும் என்றால்—அவன் மனசு எத்தனை சுத்தமாக இருக்க வேண்டும்? எத்தனை காற்றோட்டமாக இருக்க வேண்டும்?

தன்னைப் பெற்று வளர்த்த தாய், தகப்பனையே பிள்ளைகள் எட்டி உதைக்கும் இந்த நாளில், துணையாய் நின்ற மாமாவின் விருப்பத்தை நிறைவேற்ற சுதா முனைவது எத்தனை உயர்வான காரியம்?

என்ன சொன்னான்—அவன்?

சாரு பிரமாதமான அழகி இல்லை. கெட்டிக்காரி இல்லை, ஆனால் என்னை வளர்த்த மாமா பெண். முக்கியமாய் என் மேல் அலாதி அன்பு கொண்டவள்—என்று தானே?

எத்தனை நன்றி, கடமை உணர்ச்சி இருந்தால் இத்தனை உண்மையான பேச்சு வெளிப்படும்?

சுதா—

வாழ்நாளிலேயே நீ ஒரு உயர்ந்த ஆண் மகன்தான்.

உன்னை அடைய அந்த சாரு கொடுத்துதான் வைத்திருக்க வேண்டும்...

இரவு முழுவதையும் யோசித்து, புலம்பி, அல்லப் போது, அழுது, பெருமூச்சுவிட்டு, எப்படியோ கழித்த காயத்ரி, பொழுது விடியுமுன் கண்டிப்பாய் மாலை ரிஸப்ஷனுக்குப் போவது என்று தீர்மானித்து விட்டாள்.

தூங்கி எழுந்து, பல் தேய்த்து முகம் கழுவின பின் சமையல்கட்டுக்குள் நுழைந்து அம்மாவின் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டாள்.

அடுப்பிலிருந்த பாலிலிருந்து முக்கால் டம்ளர் எடுத்து, இட்டமாய் டிகாக்ஷன்விட்டு ,சர்க்கரை போட்டுக் கலந்து மகள் முன் நீட்டிய ராஜம் ஜிலுஜிலுத்திருக்க அந்த முகத்தைப் பார்த்து திடுக்கிட்டுப் போனாள்.

''என்ன காயத்ரி? உடம்பு கிடம்பு சரியில்லியா?''

''இல்லியேம்மா...சரியாதானே இருக்கேன்?''

''பின்னே, என் மூஞ்சியெல்லாம் சுரந்து சிவந்து இருக்கு?''

காயத்ரி பதில் சொல்லாமல் காபி ஆற்றுவதில் முனைந்தாள்.

''ராத்திரி நீ சரியா தூங்கலியா? புரண்டு புரண்டு படுத்துண்டேயே! ஒண்ணு இரண்டு தடவை வாய்விட்டுப் பேசின மாதிரிகூட இருந்தது...கனவுலே பேத்தினேன்னு நினைச்சு சும்மா இருந்திட்டேன்...என்ன வேதனை



உனக்கு காயத்ரி? வெளிப்படையா சொல்லாம உள்ளுக் குள்ள வைச்சுண்டு மருகினா எப்படிம்மா?''—

''நீ சொல்றது சரிதான். சரியா தூக்கம் இல்லே... என்னென்னவோ நினைப்பு, சொப்பனம்...ரிஸல்ட் என்ன வாகுமோனு பயம்...பி.எச்.டி...க்கு ஸீட் கிடைக்குமானு பயம்...உடனடியா நல்ல வேலை கிடைக்கணுமேனு பயம்...எல்லாம் சேர்ந்துண்டு ஆளைத் தூங்க விடாம பண்ணிடுத்துனு நினைக்கிறேன்.''

ராஜம் பெருமூச்சு விட்டாள்.

''வேண்டாததை நினைச்சுண்டு நீயும் அவஸ்தைப் பட்டு, என்னையும் வேதனைப்பட வைக்கிற காயத்ரி...''

காயத்ரி அம்மாவைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

''ஸாரிம்மா...இனிமே நான் அப்படி குழம்பி இருக்க மாட்டேன்...இன்னிலேருந்து நான் பழையபடி கல கலப்பா இருப்பேன். நீ வேணா பாரேன்...''

பேசியவள் எழுந்து முற்றத்து குழாயில் காபி டம்ளர், டபராவைக் கழுவினாள். ஷெல்பில் அலைகளைச்சவிழ்த்து விட்டு ''அம்மா'' என்றாள்.

''எனக்கு நூறு ரூபா பணம் வேணும்மா...''

ராஜம் புருவங்களை உயர்த்தினாள்.

''என் சிநேகிதனுக்கு இன்னிக்கு கல்யாணம் இல்லியா? நல்லதா கிஃப்ட் வாங்கணும்...''

''நூறு ரூபாய்க்கா?''

சட்டென்று வாயில் பொய் வந்தது.

''பையன், பெண் இரண்டு பேரையும் எனக்கு நன்னா தெரியும். ஆளுக்கு அம்பது ரூபாலு...''

ராஜும் மறுப்பு எதுவும் சொல்லாமல் இருக்க, குளித்து, தயாராகி, பணத்துடன் காயத்ரி கிளம்பினாள்.

என்ன பரிசு வாங்கலாம்?

பரிசைப் பார்த்த உடன் என் நினைப்பு சுதா மனசில் மின்னும்படியாய் ஏதாவது வாங்கினால் தேவலை...

ம்ம்...ம்...

பேனா?

ம்ஹூம்?

ஷர்ட்?

ம்ஹூம்...அவனுக்கு மட்டும் கொடுப்பது சரியில்லை, தவிர நூறு ரூபாய்க்கு என்ன ஷர்ட் கிடைக்கும்?

மவுண்ட் ரோடில் உள்ள பூம்புகாரை அலசியபோது வெள்ளை உடை உடுத்தி, கண்கள் பக்தியில் மயங்க, தம்புராவை மீட்டிப் பாடும் மீரா பொம்மை கவனத்தை ஈர்த்தது.

கிருஷ்ணனிடம் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு, பாட்டின் மூலம் பக்தியை வெளிப்படுத்திய மீரா?

இரண்டாவது யோசனை இன்றி அதைத் தேர்ந்தெடுத்தாள். இது போதாது என்று தோன்ற, அன்னபட்சி வைத்து சாண் உயரத்திற்கு நின்ற வெங்கல விளக்கையும் எடுத்து, தனித்தனியாய் பரிசு காகிதம் சுற்றி கட்ட வைத்து, வீட்டுக்கு எடுத்து வந்து—என்றும் உங்கள் ஸ்நேகிதி காயத்ரி—என்று எழுதி கையெழுத்திட்ட அட்டையை அவற்றில் செருகினாள்.

மாலை ஆறுமணிக்கு பரிசுகளுடன் திருமண மண்டபத்துக்குப் போனாள்.



இவளைக் கண்டதும் சுதாகரின் முகம் பளிச்சென்று பிரகாசமடைந்தது வெளிப்படையாகத் தெரிந்தது.

''கங்க்ராட்ஸ் அண்ட் ஆல் தி பெஸ்ட் சுதா...''

அவன் நீட்டிய பரிசுகளை வாங்கி அட்டையிலிருந்த வாசகத்தைப் படித்து விட்டு அன்போடு ''தாங்க்ஸ் காயத்ரி...'' என்று கூறியவன் மனைவி பக்கம் திரும்பி ''இதுதான் காயத்ரி—பார்க்கறதுக்கு எத்தனை அழகா இருக்காளோ, அத்தனை அழகா பாடுவா...படிப்பிலும் க்ளாஸ்லே முதல்...என் பெஸ்ட் ஃப்ரெண்ட்ஸில் ஒருத்தி'' என்று அறிமுகம்செய்வித்தபோது அந்தக்குரலில் நிஜமான சந்தோஷம் நிரவி இருப்பதை காயத்ரியால் புரிந்து கொள்ள முடிந்தது.

சுதாகர் சொன்னதைவிட சாரு இன்னும் சாதாரணமாகத்தான் இருந்தாள்.

குட்டை—லேசான மொழுமொழுப்பு, மாநிறத்துக்கும் கம்மியான நிறம்— ஆனால் முகம் களையாக இருந்தது; சுதாகரை ஏறிடும் பார்வையில் நீதான் என் உலகம் என்ற பெருமை இருந்தது.

''லால்குடி கச்சேரி காயத்ரி...முன் வரிசைலே உட்கார்ந்துண்டு எனக்கும் சேர்த்து அனுபவிச்சு கேளு...சாப்பிடாம போகக் கூடாது...''

சுதாகர் வெகு சௌஜன்யத்தோடு பேசினாலும், அவனுடைய அருகாமை அடங்கி இருந்த மனசை மீண்டும் சலசலக்க வைக்க அங்கு நிற்கப் பிடிக்காமல் தலை ஆட்டி விட்டு முன்பக்கமாக நடந்தவள் நாலாவது வரிசையில், ஒரு தூண் ஓரமாக உட்கார்ந்து கொண்டாள்.

லால்குடி ஜெயராமன் மோகனத்தில் நன்னு பாலிம்பாவை இழைத்துக் கொண்டிருந்தார்.

''என்னைக் காப்பதற்காக நடந்து வந்தாயா ராமா?-
என்ன அர்த்தம் பார்த்தியா காயத்ரி? நாயகி, நாயகர
பாவம் இந்தப் பாட்டுலே என்னமா ஊடுருவறது, பு
யறதா? என்னைக் காப்பதற்காக நடந்து வந்தாயா, என்
ப்ராண நாதா?—உன் திருமுகத்தைத் தரிசித்து மகிழ்வது
தான் என் வாழ்வின் அர்த்தம் என்று நான் இருப்பது
புரிந்து, என்னைக் காக்க வந்தாயா ராமா?—அடே
யப்பா...அடேயப்பா...என்ன பக்தி, காதல் இருந்தால்
இப்படி வார்த்தைகள் வந்து விழும் காயத்ரி?''

பால முரளியின் மோகன ராகப் பாடலைப் பற்
பேச்சு எழுந்த அன்று சுதாகர் புளகாங்கித்து பேசியது
நினைவுக்கு வர காயத்ரி நெகிழத் துவங்கினாள்.

ரங்கநாயகம் பாவயே...நாயகி ராக, தீக்ஷிதர் கீர்
தனையை அடுத்து லால்குடி எடுத்ததும் இதன் தொட
பாக சுதாகர் கூறியது நெஞ்சைக் கிறிக் கொண்டு தலை
தூக்கியது.

''அருமையான ராகம்...கேட்கறப்ப உருக வைச்சிடு
...அன்னிக்கு ஒரு சங்கீத ரஸிகர் என்ன சொன்னார் தெ
யுமா? மனிதர்களிலே ஆண், பெண் வித்தியாசமும் இரு
குற மாதிரி ராகங்களிலும் இருக்கு. கம்பீரமா நிமிர்ந்த
நடை போடறது, ஆண் ராகங்கள்; குழைஞ்சு தெளிந்
மயக்கறது, பெண் ராகங்கள், தர்பார் கம்பீரமானது
அது ஆண் ராகம், அதையே கொஞ்சம் குழைச்சு
வளைச்சு, மென்மையாக்கிட்டா நாயகியா, பெண் ரா
மாயிடறது. சாரங்காவை ஆண்னு சொன்னா, ஹமீ
கல்யாணியைப் பெண்ணுனு சொல்லலாம். இப்ப
நிறைய ராகங்களைப் பிரிக்கலாம்-னு அவர் சொ
னப்போ, நான் அசந்து போயிட்டேன்...யோசித்துப்
பார்த்தா அவர் சொன்னது நூத்துக்கு நூறு சரினுதான்
தோணறது. என்ன காயத்ரி?''—



எதை நினைப்பது, எதை விடுவது?

எந்தப் பாட்டைக் கேட்டாலும், அது தீக்ஷிதர்
ஆகட்டும், பாபநாசம் சிவன் ஆகட்டும், அம்புஜம்
கிருஷ்ணா ஆகட்டும், கூடவே சுதாகரின் பேச்சும், வியாக்
யானமும் எழாமல் இருப்பது இனி எவ்வாறு சாத்திய
மாகும்?

சுதா...

என் சுதா...

மனசு பரபரத்து, தொண்டை அடைத்துப் போய்,
கண்கள் கலங்குவேன் என்று சண்டி பண்ண முற்பட்ட
தும், கூட்டத்தில் உட்காருவதோ சுதாகரை மீண்டும்
எதிர் நோக்குவதோ தற்சமயம் இயலாத சமாசாரம்
என்று புரிய, சுதாகரின் கவனம் வேறு எங்கோ இருக்கை
யில், சந்தடி செய்யாமல் வெளியில் வந்து, முதலில் கண்
களில் தென்பட்ட ஆட்டோவைப் பிடித்து காயத்ரி ஏறி
உட்கார்ந்தாள்.

## காயத்ரி-5

''என்ன ராஜம்—நிஜமாவா உனக்குத் தெரியா துங்கறே?''

''இதுலே மறைக்கறத்துக்கு என்னண்ணா இருக்கு? தெரிஞ்சா, ஆமா, தெரியும்னு சொல்லிட்டுப் போறேன்?''

''அதானே! வேணும்னா ஒருத்தி மறைக்கப் போறா! அது சரி—எனக்கு கன காரியமா கடிதாசி போட்டவ, உன்கிட்ட அது பத்தி ஒண்ணுமே ப்ரஸ்தாபிக்கலைனா எனக்கு ஆச்சர்யமானா இருக்கு?''

ராஜம் பதில் பேசாமல் உள்ளே போனாள்.

அண்ணாவின் தலையைக் கண்டதும் பொடியைப் போட்டு வெந்நீர் ஊற்றி இருந்தது. டிகாஷனாக அடி பாத்திரத்தில் இறங்கி இருக்க, புதுப்பாலிலிருந்து முக்கால் லோட்டா பாலைக் காய்ச்சி, டிகாஷன் சர்க்கரை கலந்து எடுத்துக் கொண்டு கூடத்துக்கு வந்தாள்.

''தோசை மாவு இருக்கு. வார்த்துத் தரட்டு மாண்ணா?''

''இப்ப காபி போறும். அப்புறமா கைகாலை அலம்பிண்டு சந்தி செய்துவிட்டு பலகாரம் பண்ணறேன்.''





காபியை ஆற்றி ஒரு வாய் குடிக்கும் வரை காத்திருந்த ராஜம் ''சர்க்கரை போதுமாண்ணா?'' என்று கேட்க அவர் 'ம்ம்' என்றபடி குடித்தார்.

ராஜம் யோசனையுடன் சுவரில் சாய்ந்து கொண்டு தமையனை எறிட்டாள்.

கல்யாணசுந்தரம் அவளுடைய சொந்த அண்ணன். அவருக்கும், இவளுக்கும் நடுவில் ஜனித்த இரண்டும் அல்பாயுசில் போய்விட 'அண்ணா' என்று கூப்பிட இவ ளுக்கு அவரும், தங்கை என்று சொல்லிக் கொள்ள அவருக்கு இவளும்தான்.

கல்யாணசுந்தரம் காஞ்சிபுரத்துக்கு அருகில் நாமக் கிராமத்தில் இருக்கிறார். கொஞ்சம் நிலம் நீச்சு உண்டு. நான்பட்டுக் குழந்தை பிறந்ததால், முத்தவளுக்கே இப்போது இருபது வயசுதான் ஆகிறது. அடுத்த படியாய் ஒரு பெண்; இன்னும் ஒரு பிள்ளை. அவ்வளவு தான்.

புருஷன் அகாலமாய் இறந்தபிறகு 'பட்டணத்துலே ஒண்டிப் பொம்பளையாய் என்ன பண்ணுவே? இங்கே வந்திடும்மா...பொண் குழந்தை வேற' என்று கரிசனத் துடன் அவர் கூப்பிட்டது உண்டுதான்.

ராஜம்தான் மறுத்து விட்டாள்.

அப்போது காயத்ரி பி.எஸ்ஸி. முதலாண்டில் இருந் தாள். படிப்பில் சூரப்புலி. மேலே படிக்க வேண்டு மென்ற ஆசை கழுத்துவரை...அங்கே கிராமத்தில்போய் உட்கார்ந்து கொண்டால் பி.எஸ்ஸியும்—எம்.எஸ்ஸியும் நடக்கிற காரியமா? ம்ஹூம் இல்லை.

தவிரவும்—புருஷன் மகாராஜர் குறை ஒன்றும் வைத்துவிட்டுச் செல்லவில்லை.

குடியிருக்க வீடு; மாடி போர்ஷன் வாடகை முன்னூறு பாங்க் டெபாஸிட்டிலிருந்து மாசம் ஐநூற்று அம்பது... இரண்டு பொம்மனாட்டிகள் சாப்பிடவும், உடுத்தவும் இது போதாமல் என்ன?

ஆயிரம் நல்லவர்களாக இருந்தாலும், கிட்டி முட்டிப் போனால் ஏதாவது தகராறு எழலாம். தூரத்துப் பச்சை தானே கண்ணுக்குக் குளிர்ச்சி?

நாலையும் யோசனைப்பண்ண பிறகு "வர்றதைப் பத்தி ஒண்ணுமில்லேண்ணா எங்களுக்கும் உன்னை விட்டா வேறயாரு—சொல்லு? ஆனாலும் காயத்ரி படிப்பை நினைச்சுப் பார்க்கறப்போ இங்க இருக்கறது தான் தேவலைனு தோணறது. காலேஜ் ஃபீஸ் அது இதுனு ஒரு செலவு இல்லே...ஸ்காலர்ஷிப் வந்துடறது. மத்தபடி எங்க இரண்டு பேர் செலவுக்கும் புண்ணியவான் வழி பண்ணிட்டுத் தானே போயிருக்கார்? புரிஞ்சுக் கோண்ணா..." என்று பக்குவமாய் சொல்லி விட்டாள்.

அது நடந்து ஆயிற்று வருஷங்கள் ஐந்து...

என்னமோ ஆசைப்படுகிறாள். படிப்பும் வருகிறது; உபகாரச் சம்பளமும் கிடைக்கிறது. படித்துவிட்டுப் போகட்டும். இந்தக் காலத்தில் படிப்பு இருந்தால் தனி மதிப்பு தானே...அழகாய் இருக்கிறாள், அற்புதமாய் பாடுகிறாள். அடக்கமானவள். அத்தனையும் சேர்ந்திருப்பதால் படிப்பு முடிந்ததும் ஒருத்தனிடம் ஒப்படைப்பதில் கஷ்டம் இருக்காது—என்று மனக் கணக்குப் போட்டது இத்தனை வருஷங்களாய் ஒழுங்காகவே இருந்தது; இப்போது ஆறு மாசங்களாய்த் தான் உதைக்கிறது.

அண்ணாவுக்கு காயத்ரி கடிதம் போட்டு எதற்காக வரவழைத்திருக்கிறாள்?

என்னிடம் ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல்?



மாமாவிடம் அதிகப்படியாக ஒட்டிக் கொள்ளும் மருமகள் இல்லையே!

அப்புறம், மாமாவை வைத்துக் கொண்டு பேசும் படியாக என்ன விஷயம் இருக்கப் போகிறது!

யோசித்த வரைக்கும் ஒன்றும் புரியாமல் போக ராஜம் நிமிர்ந்து தமையனை வெறித்தாள்.

"கடுதாசிலே அவ என்ன எழுதி இருந்தானு சொன்னே, அண்ணா?"

சட்டைப் பையிலிருந்து கல்யாணசுந்தரம் ஒரு இன்லண்ட் லெட்டரை எடுத்தார்.

"இந்தா நீயே படிச்சுக்கோ"—

நாலு வரி கடுதாசுதான்.

சம்பிரதாய விசாரிப்புகள் முடிந்ததும் "இந்தப் பக்கம் வரவேண்டிய வேலை இருக்கிறதா மாமா? இல்லாவிட்டாலும் முடிந்தால் இரண்டு நாட்களில் சென்னைக்கு வர இயலுமா? உங்களோடு முக்கியமாய் பேச வேண்டி இருக்கிறது. உங்களுக்குச் சௌகரியப்படா விட்டால் எழுதுங்கள். நான் ஞாயிறு அன்று அங்கு வருகிறேன்..."

மாமாவுடன் என்ன பேச வேண்டுமாம்?

"எனக்கு கடுதாசு போட்ட விவரம்தான் தெரியாது; சரி—என்கிட்ட என்ன பேசப் போறானாவது..."

அவர் முடிக்கும் முன் ராஜம் வேகமாகத் தலையை ஆட்டினாள்.

"தெரியாதுண்ணா—அவ மனசிலே என்ன நினைச்சுண்டு இருக்காளோ என்னால வரவர ஊகிக்க முடியலை. ஸ்வபாவமாவே அதிகமா வாயைத் திறந்து பேசறரகம் இல்லே; இப்ப வேலைக்குப்போக ஆரம்பிச்சப்புறம்

இன்னும் மோசம். தான் உண்டு, தன் வேலை உண்டு, புஸ்தகங்கள் உண்டு. கேட்டா பதில், இல்லாட்டா ஒருசிரிப்பு. அவ்வளவு தான். இவ வயசு பொண்கள்லாம் குடியும், குடித்தனமுமாகி, இடுப்பு உசர பிள்ளைகளைக் கூடப் பெத்துண்டாச்சு...இவதான்...இவதான்...''

கலங்கிய கண்களை ராஜம் தலைப்பால் துடைத்துக் கொண்டாள்.

''சத்—அசடு...எதுக்கு கண்கலங்கறே? காயத்ரிக்கு இப்ப அப்படி என்ன வயசாயிடுத்து, ம்? இருபத்தி இரண்டு தானே? பகவான் புத்தியை ஏராளமா கொடுத்திட்டான். ஸ்காலர்ஷிப், மெடல், அது, இதுனு வாங்கிப் படிச்ச படிப்பு வீணா போகாம வேலைப் பார்க்கணும்னு ஆசைப் படறா...இதுலே பெரிசா என்ன குத்தம் கண்டுட்டே ராஜம்?...காலம் மாறிண்டு வரது...நீயும் நானும் வளர்ந்த மாதிரி இல்லே இப்போ...''

''அதெல்லாம் எனக்குத் தெரியாதான்னா? நானும் வாயத் திறக்கப்படாதுன்னு எவ்வளவோ அனுசரிச்சுதான் போறேன். இவ கல்யாணம் பண்ணிண்டு வேலை பார்க்கறதை யார் வேண்டாங்கறா? கல்யாணம்ங்கற பேச்சை எடுத்தாலே பசவங்குடி சப்பனாட்டம் ஆயிடறாளே! அதானே கவலையா இருக்கு...''

''ம்ம்?''

கல்யாணசுந்தரம் நெற்றியைத் தேய்த்துக் கொண்டார்.

''ஒரு வேளை யாரையாவது விரும்பறாளோ? அதை உன்கிட்ட சொல்ல வெட்கப்பட்டுண்டு,என்னைக் கூப்பிட்டிருக்காளோ?''

''பொம்னாட்டி என்னை விட்டுட்டு, உன்கிட்ட யாண்ணா சொல்லுவா? எனக்கென்னவோ...''



கேட் ஓசைப்பட ராஜம் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள்.

''வர்றான்னா...அவதான்...''

காயத்ரி படியேறி உள்ளே வந்தாள்.

கூடத்திலிருந்த மாமாவைப் பார்த்து, வந்து விட்டீர்களா? என்ற பார்வை ஒன்றை பார்த்து 'வாங்கோ மாமா...மத்தியான பஸ்லே வந்தேளா?' என்றுகேட்டாள்.

அம்மாபக்கம் திரும்பி''மாமாவ வரச்சொல்லி எழுதிப் போட்டதை உன்கிட்ட சொல்லணும்னு நினைச்சிண்டே இருந்தேன், மறந்துடுத்தும்மா'' என்று இயல்பாகக்கூறி, ஸாரி என்கிற தொனியில் புன்னகைத்து உள்ளே போனாள்...

சென்றவள் ஐந்து நிமிஷங்களில் முகம் கழுவிக் கொண்டு கூடத்தில் வந்து உட்கார்ந்தாள்.

''தோசை வார்க்கட்டுமா காயத்ரி?''

''மாமா சாப்டாச்சா?''

''நான் ராத்திரி பலகாரத்துக்கு சாப்பிடறேன்''

''எனக்கும் இப்ப வேணாம்மா காபி மட்டும் போதும். மாமி, குழந்தைகள் எல்லாரும் சௌக்யமா, மாமா?''

''ம்ம்''

''திடீர்னு வரச்சொல்லி உங்களைத் தொந்தரவு பண்ணிட்டேனா?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே...என்னிக்கும் இல்லாத திருநாளா நீ இப்படி எழுதினதும், என்னவோ ஏதோனு கொஞ்சம் பயந்திட்டேன், அதான்...''

ராஜம் காபியுடன் வந்தாள்.

''எதுக்கு காயத்ரி, என்கிட்டகூட சொல்லாம மாமாவை வரவழிச்சிருக்கே? அப்படி என்ன தலை போற விஷயம்?''

காயத்ரி முழுசாய் ஒரு நிமிஷத்துக்கு மௌனமாய் இருந்தாள்.

அப்புறம் அம்மாவை நிமிர்ந்து பார்த்து, ''கல்யாணம் பண்ணிக்கோ; சரினு சொல்லுனு விடாம தொண தொணக்கறியே, என்னை ஒத்தனுக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுத்திட்டா, நீ என்னம்மா பண்ணுவே? எந்த ஊருக்கு நான் போனாலும் என்கூடவே வந்துடு வியா?'' என்றாள் மெதுவாக...

ராஜாம் திகைத்துப் போய் கண்களை விரித்தாள்.

இது என்ன சம்பந்தா சம்பந்தம் இல்லாத பேச்சு? அண்ணா நினைக்கிற மாதிரி இவள் ஜாதிவிட்டு ஜாதியில் எவனையாவது விரும்புகிறாளா, அதான் இந்தக் கேள்வியா?

சட்டென்று பேசினாள்.

''நன்னாயிருக்குடிம்மா...பொண்ணோட பெத்தவ வந்து இருக்கிறதாவது...ஊர் சிரிக்கும்...''

''இதுலே சிரிக்கறதுக்கு என்னம்மா இருக்கு?''

''அதெல்லாம் வேண்டாத பேச்சு காயத்ரி, உன்னை ஒருத்தன் கையிலே ஒப்படைச்சுட்டா, என் பொறுப்பு விட்டுதுனு நான் நிம்மதியா இருப்பேன். முடிஞ்சா அப்பப்ப வந்து எட்டிப் பார்ப்பேன். கூடவே வர்றதும் தங்கறதுங்கறதும் நடக்கற காரியம் இல்லே...''

''அப்ப, தனியாவா இருப்பே?''

கல்யாணசுந்தரம் அவசரமாய் குறுக்கிட்டார்.



''அவ ஏம்மா தனியா இருக்கணும்? கடா மாடு மாதிரி தமையன் நான் இருக்கறப்போ—கோட்டையா தாத்தா கட்டின வீடு ஊர்ல இருக்கு...அதுல என்னோட தங்கைக்க இவளுக்கு பாத்யதை இல்லையா? உனக்குக் கல்யாணம் ஆனப்புறம் இவ தனியா இருக்க கண்டிப்பா நான் ஒத்துக்க மாட்டேன். அந்தக் கவலையை நீ விடு...ஆமாம்...''

''சரி...சரி...நான் எங்க இருக்கப் போறேங்கறதா இப்ப பெரிய பிரச்சனை? நீ மாமாவ எதுக்காக வரவழிச்சே? முதல்லே அதைச் சொல்லு...''

ராஜம் படபடப்பாகப் பேச, காயத்ரி அம்மாவை நெருங்கி அமர்ந்து அவள் கையைப் பற்றினாள். இதமாகச் சிரித்தாள்.

''சொல்றேம்மா...சொல்லத்தானே லெட்டர் போட்டு வரவழிச்சிருக்கேன்...''

காயத்ரி மாமா பக்கம் திரும்பினாள். சுற்றி வளைக்காமல் தெளிவாகப் பேசினாள்.

''அலிகார் யூனிவர்ஸிடி தெரியும் இல்லையா மாமா? அங்கே எனக்கு ஒரு வேலை கிடைச்சிருக்கு. நல்ல சம்பளம்...சுவாரஸ்யமான வேலை...அம்மாவ தனியா விட்டுட்டு எப்படிடா போறதுனு யோசனை பண்ணிண்டு இருந்தேன். கூட வான்னா வர மாட்டாளே; பாஷை தெரியாது, பழக்க வழக்கம் புரியாதுன்னு சொல்லுவாளே, என்ன செய்யறது-னு நாலு நாளா ஒரே குழப்பம் ...அதான்...''

''எ...என்னது? அலிகார் யூனிவர்ஸிடிலே வேலைக்கு கூப்பிடறாளா? எங்க இருக்கு அது? ஏன்; இப்ப பார்க்கற வேலைக்கு என்ன குறைச்சல்? எ...என்ன காயத்ரி இது? கல்யாணப் பேச்சுதான் எடுக்கப் போறேனு நினைச்சா, நீ...நீ...''

ராஜும் விசும்ப அவள் தோளை அணைத்து காயத்ரி, தட்டிக் கொடுத்தாள்.

"முன் பின் தெரியாத எவனுக்கோ கல்யாணம் பண்ணி வைச்சு வெளி நாட்டுக்குக் கூட அனுப்ப ரெடியா இருக்கே—ஆனா வேலை பார்க்க டெல்லிக்குப் பக்கத்துலே இருக்குற ஊருக்கு அனுப்ப மாட்டேன்னு பிடிவாதம் பிடிக்கறே; கண்கலங்கறே—என்னம்மா நீ?"

"இப்ப பார்க்கற வேலையவிட அது எந்த விதத்துலே உசத்தி காயத்ரி?"

"எல்லாவிதத்துலேயும்தான் மாமா...சம்பளம் கூட, அப்புறம் ரிஸர்ச் பண்ண வசதி உண்டு...ஆறுமாசம் கழிச்சி பி. எச். டி படிக்க ரொம்ப தோதா இருக்கும்..."

"அதுக்காக? அதுக்காக? இது வேண்டாத ஆசை காயத்ரீ..."

"அம்மா...நிதானமா நா சொல்றதைக் கேளு... பதட்டப் படாதே...யோசிச்சா நான் சொல்றது சரினு நீயே ஒத்துப்பே...படிக்கப் போறதா நினைக்காம என்னைக் கல்யாணம் பண்ணி அனுப்பறதா நினைச்சுக் கோயேம்மா...ப்ளீஸ்..."

"அது எப்படிம்மா? அதுவும் இதுவும் எப்படி ஒண்ணாகும்?"

ராஜம் பெரிசாக விசிக்க முற்பட, காயத்ரி மாமா வைப் பார்த்தாள்.

"இதுக்குதான் மாமா நீங்களும்கூட இருக்கணும்னு நான் நினைச்சேன்...கொஞ்சம் எடுத்துச் சொல்லுங்கோ ...படிப்பிலே நான் எவ்வளவு ஆர்வமா இருக்கேன்னு சொல்லுங்க...அடுத்த வாரமே புறப்படணும்... இந்தப்





போர்ஷனை என் காலேஜ் லெக்சரர் ஒருத்தர் நானூறு ரூபாய்க்கு எடுத்துக்கறேங்கறார்... நீங்க இட்ட இருந்து அம்மாவை கூட்டிண்டு போயிட்டா, நானும் தைரியமா கிளம்பிடுவேன்...ப்ளீஸ் மாமா...புரிஞ்சுக்கோங்கோ..."

"படிப்பிலே உனக்கு இருக்கிற வெறி எனக்குத் தெரியும் காயத்ரி... ஆனாலும்... வந்து ஊரைவிட்டுப் போயாவது படிக்கணுமாணுதான்..."

காயத்ரி முழங்கால்களில் முகத்தைப் பதித்துக் கொண்டாள்.

கண் முன் சுதாகர் வந்து நின்றான்.

சிரித்தான்—ஹலோ சொன்னான். பாடு என்றான்.

ஊரைவிட்டுப் போக வேண்டியது; ரொம்ப முக்கியம்; படிப்புகூட ஒரு சாக்குதான்.

போய்விட வேண்டும்...

உடனே...உடனே...

## சுதாகர்-1

உதடுகளை உட்புறமாக மடித்து, வாயை அழுத்தி[...] கொண்ட சுதாகர், ஷேவிங் க்ரீமை ப்ரஷ்ஷில் எடுத்[...] தாவாக் கட்டை, கன்னங்களில் தடவி, குவளையி[...] வைத்திருந்த வெந்நீரில் ப்ரஷ்ஷை முக்கி க்ரீமை சுழட்[...] தேய்த்து, புஸு புஸுவென்று அடர்ந்த நுரை உண்டா[...] தும், இடது ஆட்காட்டி நடு விரல்களால் வலப்பக்[...] கிருதாவை மேலே இழுத்துப் பிடித்து, வலக்கையி[...] ரேஸரை வைத்து மெதுவாக இழுத்தான்.

படுக்கை அறையில் இருந்த ஸ்டீரியோவில் தோ[...] கீர்த்தனையை முடித்த எம். எஸ். மத்யமாவதி ராக ஆ[...] பனையைத் தொடங்கினார்.

பாட்டு நன்றாகக்காதில் விழவேண்டி பாத்ரூம்கத[...] அகல திறந்து வைத்தவன் ஒரு நிமிஷம் ஷேவிங்கை நிறுத்[...] ஸ,ரி, ம என்று ஒவ்வொரு ஸ்வரமாய் நிறுத்தி சஞ்சாரித்[...] மெதுவாய் சுழன்று எம். எஸ்.ஸின் குரல் மேலே ஏறிய[...] ரசித்தான். பின், கைக்காரியத்தைத் தொடர்ந்தான்.

ராக ஆலோபனை முடிந்து க்ருதி தொடங்கியது.

*சரவணபவ குஹனே—சண்முகனே, தயாபர[...]

*சரவணபவ கீர்த்தனை.
—பாபநாசம் சிவன் இயற்றிய கீர்த்தனை.



வார்த்தைகளும், ஸ்வரக் கோர்வைகளும் ஒன்றை ஒன்று மிஞ்சும், கீர்த்தனை.

'சரண கமலம் இரண்டும் சரணம் என்று

இரவு பகல் பசிக்கும் ஏழைக்குள் மால்மருகனே'—

சுதாகர் கன்னங்கள், மேல் உதட்டை தேவைக்கேற்ப உப்பிக்கொண்டு சுத்தமாய் மழித்தான். கண்ணாடிக்கு அருகில் சென்று எங்காவது விடுபட்டுப் போய்விட்டதா என்று பரிசோதித்தான்.

'...அன்னையோடு தந்தை நீ, வாழ்வில்

அனைத்தும் நீயென்று நம்பினேனே!

அகிலலோக நாயகா-வள்ளி

தெய்வானை மணாளா, மயில்வாகனா...'

ஸ்வானுபவத்தோடு, பக்தியில் மெய்சிலிர்த்து, தேனாய் தித்திக்கும் குரலில் பாடிய எம். எஸ். 'அகில லோக நாயகா ஆ...' என்று மேலே பாய்ந்து பஞ்சமத்தை தொட்டு சரேலென்று கீழே நழுவி வந்து 'வள்ளி தெய்வானை மணாளா' என்று குழைந்து கொஞ்சியதும் தன்னை மறந்து 'ஆ.ஹா' என்று தலையை அசைக்க—மோவாய் கட்டைக்குக் கீழே சின்னதாய் ப்ளேட் கீற, பொட்டாய் ரத்தம் பளபளக்க, ரேஸரைக் கீழே வைத்து டவலால் முகத்தைத் துடைத்துக் கொண்டான். எம். எஸ்ஸின் மத்யமாவதி மனசை என்னமோ செய்ய, படுக்கையில் வந்து உட்கார்ந்து கொண்டான்.

பெட்ஸைட் டேபிளில் அலங்காரப் பொருளாக வைக்கப்பட்டிருந்த மீரா பொம்மை மேல் பார்வை விழுந்தது.

மீரா—காயத்ரி—மத்யமாவதி

16978
3294704

''நேத்து செம்மங்குடி கச்சேரிக்குப் போயிருந்தேன், காயத்ரி...மத்யமாவதிய மெயின் ராகமா எடுத்துண்டு அலகலல்ல லலாட சுகநீ' பாட்டை பிச்சு உதறிட்டார். நீ கேட்டிருந்தா சந்தோஷப் பட்டிருப்பே...''

''அந்தக் கீர்த்தனையே ரொம்ப உசத்தியானது சுதா...சிவதனுசை உடைச்சப்போ ராமனுடைய நெத்திலே சுருண்ட முடி வந்து விழும் அழகை விசுவாமித்ரர் ரஸிக் கறதா சொல்ற பாட்டு இது...''

''ஏதேது...அர்த்தம் எல்லாம் அமர்க்களப்படறது!''

''பின்னே? நீதானே பாட்டை மட்டும் ஏனோ தானோனு கத்துண்டா ரசிப்பு வராதுன்னு சொல்லுவே? அர்த்தம் புரிஞ்சு பாடினதானே லயிப்பும்?''

''வெரிகுட்! லயிப்பு வரை வேற என்னென்ன தெரிஞ் சிக்கணும்—சொல்லேன் நானும் கேட்டுக்கறேன்.''

''கொஞ்சம் கொஞ்சம் தியரி தெரிஞ்சிருக்கறதும் அவசியம். இப்ப, இந்த மத்யமாவதியையே எடுத்துக் கலாம்...அன்னிக்கு ஒரு நாள் நாம ஸ்ரீராகத்தை மத்யமா வதியோட ஒப்பிட்டுப் பேசிண்டு இருந்தப்போ இரண்டுத் துக்கும் உள்ள வித்தியாசத்தை நீ கேட்டே; சொல்லறத் துக்கு முன்னால பெல் அடிச்சுடுத்து. அப்புறம் மறந்தே போயிடுத்து—இப்ப சொல்றேன், கேட்டுக்கோ...இருபத்தி ரெண்டாவது மேள கர்த்தா ராகம் கரஹரப்ரியாலேந்து பிறந்ததுதான் இரண்டும். மத்யமாவதி, ஔடவ, ஔடவம் பேத உபாங்க ராகப் பிரிவைச் சேர்ந்தது. இது வக்ர ராக பிரிவு...அப்புறம்...''

''ஹேய்...ஹேய்...ஹோல்டான்...என்னாச்சு உனக்கு இன்னிக்கு? வாய்ல நுழையாத வார்த்தை எல்லாம் சொல்லி என்னை பயமுறுத்தறே? ஔடவ ஔடவமா? அப்படின்னா? மேளகர்த்தா தெரியும்; ஜன்ய ராகம்



தெரியும். இது என்ன புதுப் பிரிவு. என்னைவிட உனக்கு விஷய ஞானம் உண்டுனு காட்டிக்க எதையாவது விளையாட்டுக்குச் சொல்றயா?''

''ச்சே...இதுலே என்ன விளையாட்டு சுதா...தியரிலே படிச்சதைத்தான் சொல்றேன். மத்யமாவதிக்கு ஆரோ கணம் ஸரிமபநி(ஸ்), அவரோகணம் ஸ்நிபமரி(ஸ)-தானே? இதுலே நலா அஞ்சு ஸ்வரம் இருக்கறதால ஔடவ ஔடவ பேதம்னு சொல்லுவா. ஸ்ரீராகத்திலே ஸரிமபநி(ஸ்) ஸ்நிப நிப மரிக ரிஸ-னு, அவரோ கணத்திலே ஸ்வரங்கள் நேரா வராம முன்னும் பின்னுமா மடங்கி வர்றதால அது வக்ர ராகம்...புரியறதா?''

ஒரு புன்னகையுடன், ''சங்கீதம் சாதாரண சமாசாரம் இல்லை; அது சமுத்திரத்துக்கு ஒப்பானது. முங்கி குளிக்க குளிக்க, ஞானம் அதிகரிக்கும், தெரியுமா?''-என்று பெருமை கலந்த புன்னகையுடன், அன்று காயத்ரி பேச, அவனை மடக்க வேண்டும் என்ற ஆசையினாலேயே புஸ்தகங்கள் வாங்கிப் படித்து ராக லட்சணங்களை அலசி ஒரே மாசத்தில் அவளை அதிசயிக்கச் செய்யும் அளவுக்கு சங்கீத அறிவை வளர்த்துக் கொண்டது இப்போது சுதாகருக்கு ஞாபகம் வந்தது.

காயத்ரி...

எத்தனை அற்புதமான, இனிய, நல்ல ஸ்நேகிதி—அவள்!

அந்த இரண்டு வருஷங்களும் தான் எத்தனை சந்தோஷம் நிறைந்தவை!

அப்படி அலாதியாய் பழகியவன், ஏன் வேண்டா தனைக் கற்பனை பண்ணிக் கொண்டான்?

இந்த மாதிரி எண்ணங்கள் ஒரு நல்ல ஸ்நேகிதத்தை தகர்த்துவிடும் என்பதை ஏன் புரிந்துக் கொள்ளாமல் இருந்தாள்?

'இல்லை காயத்ரி—எனக்கு அந்த ஆசையே இல்லை—' என்று சொன்னதைச் சரியாக எடுத்துக் கொண்டாள் என்று நான் நம்பியது என் தவறாகப் போனது?

அந்தப் பேச்சு வார்த்தைக்குப் பிறகு அவள் பழைய காயத்ரியாக இல்லை என்பது நிஜம் தானே?

கோபமா? வருத்தமா? ஏமாற்றமா? இல்லை—சலிப்பா?

சலித்துப் போகக் கூடிய நட்பாகவா எங்களுடையது வளர்ந்தது?

தோளில் சில்லென்று ஸ்பர்ச உணர்வு உண்டாக, சுதாகர் சட்டென்று திரும்பினான்.

சாரு...

உதட்டிலும் கண்களிலும் சிரிப்பு...

''என்ன யோசனை?''

''ம்?—ஒண்ணுமில்லே சாரு''

''ஷேவ் பண்ணிக்கறச்சே வெட்டிண்டதை டெட்டால் போட்டுத் துடைக்காம, இங்கே வந்து உட்கார்ந்துடற அளவுக்கு என்ன யோசனை? காயத்ரி பத்தியா?''

சுதாகர் கண்களை விரித்து அவளை ஏறிட்டான். பதில் பேசாமல் இருந்தான்.

''இதுலே ஆச்சர்யம் என்ன? நல்ல பாட்டை கேக்கறப்போ அவ ஞாபகம் உங்களுக்கு வந்திடும்னு எனக்குத் தெரியுமே...''

''ம்ம்...நீ சொல்றது சரிதான். மத்யமாவதியைக் கேட்டதும், அவ குருவாவும், நான் சிஷ்யனாவும் இருந்த நாள் ஞாபகம் வந்திடுத்து...''

சாரு சரடலல் கொண்டுவந்து கணவனின் காயத்தைத் துடைத்தாள். ஸாவ்லான் கிரீமைத் துளி எடுத்துத் தடவினாள்.



''நான் ஒண்ணு சொன்னா கோபிச்சுக்க மாட்டேளே?''

மனைவி கையிலிருந்த டவலை வாங்கித் தூர எறிந்து விட்டு அவளைத் தன் மடியில் சுதாகர் இருத்திக் கொண்டான்.

''உன்கிட்ட நான் இதுவரைக்கும் எதுக்காவது கோவிச்சிண்டு இருக்கேனா சாரு?''

''நமக்குக் கல்யாணம் ஆறதுக்கு முன்னாலேருந்தே நீங்க என்கிட்ட காயத்ரி பத்தி நிறைய சொல்லி இருக்கேள். அவளைச் சந்திக்கணுங்கற ஆவலை உங்க பேச்சுதான் எனக்குள்ள தூண்டி விட்டது. ஆனா, கல்யாணத்திலே அவளைப் பார்த்தப்போ எனக்கு என்னமோ நீங்க அவ மேலே மதிப்பும், அன்பும் வைச்சிருக்கற அளவு அவ உங்க மேலே வைக்கலை-னு தான் பட்டது...''

''ஏ...என்னது?''

''ஆமா—நிஜமாத்தான் சொல்றேன். உங்க அத்தனை சடுபாடு, இந்த ஸ்நேகிதத்துலே அவளுக்கு இருந்த தில்லேனு தான் தோணறது...''

''ஏன், ஏன் அப்படிச் சொல்றே, சாரு?''

''கல்யாணத்துக்கு அப்புறம், நாம ஹனிமூன்லேர்ந்து வந்த உடனேயே 'நீயும் காயத்ரியும் ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சிண்டு நல்ல ஸ்நேகிதிகளா இருக்கணும்'னு சொல்லி அவாத்துக்கு என்னைக் கூட்டிண்டு போனேள். அப்பவும் சரி, அதுக்கு அப்புறம் இரண்டு மூணுதரம் பார்த்தப்பவும் சரி, அவ விட்டேத்தியாதான் இருந்தா. 'வீட்டுக்கு வா'னு கூப்பிட்டப்ப எல்லாம் என்னென்னமோ காரணம் சொல்லி தட்டி கழிச்சா...''

''காலேஜ்ல லெக்சரர் வேலையை ஒத்துண்டதால, அவளுக்கு ப்ரீ டைம் கிடைக்கலை சாரு...''

''சரி, அப்படியே இருக்கட்டும், அவ வீட்டுக்கு நாம போனப்ப கூட கலகலப்பா எங்க இருந்தா? 'பாடு

காயத்ரி'னு நீங்க பத்து தரம் கேட்டிருப்பேள்-ஒவ்வொ தரமும் தொண்டை கட்டி இருக்கு; பாடி ரொம் நாளாச்சு-னு ஏதேதோ எக்ஸ்க்யூஸ் சொல்லலியா?''

''அன்னிக்கு நிஜமாவே அவளுக்கு உடம்பு சரியில்லா இருந்திருக்கக் கூடாதா?''

''ஒவ்வொரு தரமுமா?''

சாரு தோளைக் குலுக்கி, உதட்டைப் பிதுக்கினாள்.

''உங்க ப்ரெண்டை குறை சொல்லணும்னு நா பேசலை...நம்மகிட்ட ரொம்ப பட்டுக்க காயத்ரி வி பலை-னு தோணித்து—சொன்னேன். அவ்வளவுதா போன வாரம் அவா வீட்டுக்குப் போயிட்டு வ சொல்லாம கொள்ளாம இவ அலிகார் யூனிவர்ஸிடிக் புறப்பட்டுப் போயிட்டாளே! போன் பண்ணி சொல்ல முடியாதபடியா அவசரம்-னு நீங்க வருத்தப்படலையா?

சாரு சொல்வது சரிதான். ஒரு வார்த்தை சொல் மல் காயத்ரி புறப்பட்டுப் போனதில் அவனு வருத்தமே.

பார்த்து ஒரு மாசம் போல ஆயிற்று; 'ஆர். ஆர். ச வில் ரமணி ப்ளுட் இருக்கிறது; வருகிறாயா'—என் கேட்கலாம் என்று சென்றால் வீடு பூட்டி இருந்தது.

விசாரித்தால் மாடி வீட்டுக்காரர் சொல்கிறா காயத்ரி அலிகாருக்கும் ராஜம் கிராமத்துக்கும் போ விட்டதாக.

அத்தனை வெறுப்பா? கோபமா? இல்லை சாரு க சிற ரீதியில் விட்டேத்தி குணமா?

இல்லை, கண்டிப்பாய் விட்டேத்தியான கு இல்லை. காயத்ரியும், நானும் ஆத்மார்த்தமாக பழகி நிஜம். அருமையான ஸ்நேகிதர்களாக இருந்ததும் நி



கோணல், தள்ளி நிற்பது, ஒதுங்குவது எல்லாம் இந்த ஏழுமாசங்களாகத்தான்.

சுதாகர் விழிகளை உயர்த்தி மனைவியைப் பார்த்தான்.

சொல்லி விடலாமா?

நீ பேசுவது தவறு; காயத்ரிக்கு என் மேல் அளவு கடந்த அன்பு உண்டு. ஆனால் மாறியதற்கும் காரணம் உண்டு—என்று கடைசிதான் பேச்சைக் கூறி விடலாமா?

ஒரு நிமிஷ யோசனைக்குப் பின் வேண்டாம் என்று அவன் தீர்மானித்தான்,

இது தேவையில்லாத விவரம்...

கொஞ்சம் கூட உண்மை இல்லாத விஷயம்.

காயத்ரி ஏதோ குழப்பத்தில்தான் அன்று அப்படி பேசி விட்டாள்.

பின், தன் தவறை உணர்ந்து வெட்கி, என்னிடமிருந்து விலகி நின்றாள். அசடு—அதை எல்லாம் மறந்து விடு என்று உணர்த்தும் நிஜத்தில் நான் பழக முற்பட்டேன். ஆனால் அதற்குள் அவள் ஓடி விட்டாள்.

இனி, அவளும் இல்லை, அவள் நட்பும் இல்லை.

வெறும்—நினைப்பு மாத்திரம் இருக்கும். இந்த நிமிஷத்தில் தேவை இல்லாத விவரத்தைச் சொல்லி, காயத்ரி பேரைக் கெடுப்பானேன்; சாருவையும் பயமுறுத்துவானேன்?

பெண்டாட்டியை அணைத்தபடி எழுந்து நின்றவன்,

''நான் குளிச்சிட்டு வரேன்...ட்ரெஸ் எடுத்து வைச்சுடு சாரும்மா...'' என்று கூறி, —குனிந்து அவளை மென்மையாக முத்தமிட்ட பின், பாத்ரூமைப் பார்க்க நடந்தான்.

## சுதாகர்-2

'ம்—அப்புறம்''

''விழுப்புரம்''

''ஜோக்கா? ஐயோ கடவுளே—என் பெண்டாட்டி அடிக்கிற ஜோக்கைப் பாரேன்...சரி, விளையாடாம சொல்லு...''

''என்ன சொல்லணும்?''

''டாக்டர் என்ன சொன்னார்?''

''அதான் சொல்லிட்டேனே...'

''மொட்டை தாத்தா குட்டையிலே விழுந்தார்னு சொல்லாம விவரமா சொல்லு டார்லிங்...''

சாரு கண்களை இடுக்கிக் கொண்டு புருஷனைக் குறும்பாகப் பார்த்தாள்.

''ப்ளீஸ் சொல்லுனு கெஞ்சுங்கோ''

''ப்ளீஸ்...ப்ளீஸ்...ப்ளீஸ்...ப்ளீஸ்...''

''ம்ஹூம், இந்த மாதிரி கடன் எழவேனு சொன்னா எனக்கு சரிபடாதுப்பா...''

''ப்...ளீஸ்... சொல்லுடா சாரு...வேணா முழங்கால்ல நின்னு கெஞ்சட்டுமா?''



முகத்தின் சிரிப்பு மாறாமல் சாரு தலையைச் சுதாகரின் தோளில் சாய்த்தாள். விரலால் மார்பின் முடியைத் திருகியபடி மெதுவாகப் பேசினாள்.

''ஐம்பது நாள் ப்ரெக்னன்ஸி நிச்சயம்தானாம்—நவம்பர் இரண்டாவது வாரத்திலே பிரசவம் ஆயிடுமாம். மாசா மாசம் 'செக் அப்'க்கு வரணுமாம்—சொன்னார்...''

''ம்...''

''மூணாவது மாசத்திலேந்து டயட் குறிச்சி தரேன்னு சொன்னார். வயத்திலே குழந்தை ரொம்ப பெருத்திட்டா, சுலபமா டெலிவரி ஆகாதாம், அதனால எக்ஸசைஸ் பண்ணி குழந்தை ஓவரா பெருத்துடாம வைச்சிக்கணுமாம்...வாக் போகணுமாம்...''

''ம்...''

சாரு விழிகளை நிமிர்த்திக் கணவனைப் பார்த்தாள்.

''நான் என்ன கதையா சொல்றேன். நீங்க 'ம்' கொட்டறதுக்கும், நான் மேலே சொல்றதுக்கும்...''

பேசியவளை இழுத்து மார்புமேல் விட்டுக் கொண்டு சுதாகர் படுக்கையில் சாய்ந்தான்.

ரொம்ப சந்தோஷமாக இருந்தது.

அப்பாவாகப் போகிறோம் என்ற விவரம் நாவை, நெஞ்சை, உடம்பை, மனசை தித்திக்க வைப்பது புரிய குனிந்து சாருவின் லகிட்டில் முத்தமிட்டான். கண்களை மூடி சில நிமிஷங்களுக்குப் படுத்துப் பார்த்தான். இருப்புக் கொள்ளாமல் மனசும், உடம்பும் துருதுருக்க, கண்களைத் திறந்து, பிடியிலிருந்து நழுவி, எழுந்து நின்ற மனைவியைப் பார்த்தான்.

''இங்கே வாயேன்''

''என்ன வேணும்?''

''இங்க, பக்கத்திலே வாடிம்மா''

''ராத்திரி சாப்பாட்டுக்கு இன்னும் ஒண்ணுமே ரெடி பண்ணலை. வேலை இருக்கு...''

''எல்லாம் அம்மா பார்த்துப்பா. நீ என் பக்கத்திலே வந்து உட்காரு...''

உட்கார்ந்தவளிடம் படுத்துக்கொள் என்று சைகை காட்டினான்.

''நன்னாயிருக்கு... படுக்கையா? மணி என்ன தெரி யுமா? ஆறே முக்கால்...''

நண்டு மாதிரி இரண்டு விரல்களை நடத்திக்கொண்டு அவன் கை, தோள்பட்டை என்று கொண்டு போனதும் சாரு ''ஆ... சொல்ல மறந்துட்டேனே'' என்றாள்.

அவன் அவசரமாய் எழுந்து உட்கார்ந்து ''என்ன விஷயம் சாரு?''— என்றதும், அவள் முகத்தில் பழையபடி குறும்பு குடி ஏறியது.

''இன்னும் மூணு மாசத்துக்காவது கட்டிலைப் பிரிச்சு போட்டுடணும்னு டாக்டர் சொன்னதைச் சொல்ல மறந்து போயிடுத்து...''

''மூணு மாசத்துக்கா! அம்மாடியோவ்! விளை யாடாதே சாரு.''

''விளையாடலை... டாக்டர் சொன்னார். நீங்க வேணா அம்மாவைக் கேட்டுப் பாருங்கோ...''

''நிஜமா?''

''நிஜம்மா...''

''பின்னே ஏன் நீ சிரிச்சுண்டே இருக்கே?''

''உங்க மூஞ்சியப் பார்த்தா எனக்கு சிரிப்புவர்றது...''



''க...ழு...தை......'' வேடிக்கையாய் அதட்டியவனின் கைக்கு அகப்படாமல், சிரித்தபடியே சாரு வெளியே ஓடிப் போனாள்.

அன்றிரவு சாப்பாடாகி, வேலை ஒழிந்ததும், அந்த வாரப் பத்திரிகை ஒன்றைக் கையில் எடுத்துக் கொண்டு சாரு படுக்க, சுதாகர் அவள் இடுப்பை அணைத்தவாறு நெருங்கி உட்கார்ந்தான்.

நெற்றியில் விளையாடிய முடிக்கற்றைகளை ஸ்ப்ரிங் போல விரலில் சுற்றினான். ஒரு நிமிஷத்துக்குப் பின் விரலைக் கீழே நகர்த்தி கன்னம், மூக்கு, வாய் என்று அத்தனையிலும் கோடு போட்டான்.

''படிக்க விடமாட்டேளா?

''மாட்டேன்...''

''இப்ப என்ன பண்ணணுங்கறேள்?''

''சொல்லட்டுமா'''

''ப்ளீஸ்''

சின்னக் குழந்தையாய் அவள் சிணுங்கினாள். ''ஓ.கே... படி... இனிமே தொந்தரவு பண்ணமாட்டேன்.''

இரண்டு நிமிஷங்கள் சென்றிருக்கும்.

சாருவின் காதருகில் குனிந்து ''சாரு குட்டி'' என்றான்.

தொடர் கதையில் கவனம் இருக்க சாரு உடனே பதில் சொல்லவில்லை.

''ஸ்...சாரு.''

''ம்'''

''என்ன பேர் வைக்கலாம்னு யோசிக்கலாமா'''

சாரு புத்தகத்தைத் தழைக்காமலேயே ''யாருக்கு''' என்றாள்.

''நம்ம குழந்தைக்குத்தான்''

''அட ராமா!''

''அட ராமாவா! இந்த பேர் அத்தனை நன்னா இருக்கும்னா சொல்றே' அட ராமா, அடேய், அட ராமா... கூப்பிட தோதா இருக்குமா சாரு''

வேண்டுமென்றே தீவிரமாக முகத்தை வைத்துக் கொண்டு அவன் சொல்ல, சாரு புத்தகத்தைச் சுருட்டி அவன் தலையில் செல்லமா தட்டிவிட்டு ''படிக்க விடாம டன் பண்ணிண்டே இருந்தா நான் கூடத்துக்குப் போறேன்'' என்று எழுந்திருக்க, எழுந்தவளின் தலைப் பைப் பற்றி ''எங்கே போறே என்னை விட்டுட்டு'' என்று கேட்டு திரும்ப படுக்கைக்கு இழுக்க, எழுந்த வேகத்திலேயே சாரு சாய்ந்தாள்.

''ஆ...ப்பா...சரியான மொரடு...மொரடு...உங்களை வச்சிண்டு ஆயுசு பூரா நான் என்ன பண்ணப் போறேனோ...''

''என்ன பண்ணறதா அசடு; இது கூடவா தெரியாது... வா... வா... என்ன பண்ணறதுனு நான் சொல்லித் தரேன்...''

''அட ராமச்சந்திரா! உங்ககிட்ட வாய் கொடுக்க நம்மால ஆகாதுப்பா...''

''வாய் கொடுக்க உன்னால ஆகாதா? அப்புறம் நான் எங்க போக? லைசன்ஸ் வாங்கியாச்சம்மா...இப்ப மாட்டேன்னா, ஸாரி, டூ லேட்...எங்க ... வாய் குடு பார்க்கலாம்...''

அன்புடன், ஆனால் முரட்டுத் தனமாய் அவள் முகத்தைத் தன் பக்கம் சுதாகர் திருப்ப, பிறிட்டு எழுந்த சிரிப்பினூடே சாரு 'டாக்டர், டாக்டர்' என்றாள்.



''அவரைத் தூக்கி உடைப்பிலே போடு...எழுபது வயசு டாக்டர் கிட்ட போனா, இதான் வம்பு...''

சிரித்துச் சிரித்துக் கண் ஓரங்களில் நீர் முத்து கட்டி விட, ''பாவம் அவரை ஏன் வையறீங்க...அவர் ஒண்ணுமே சொல்லலை...நானாதான்...அப்''...என்று சாரு தொடங்கியதை முடிக்க விடாமல் சுதாகர் அவளை ஆக்ரமித்தான்.

சாருவுக்கு இரண்டு மாசம் பூர்த்தியானபிறகு தலை சுற்றல், வாந்தி, அவ்வப்போது எட்டிப் பார்த்தன.

காபி குடித்தால் வாந்தி; சாம்பார் கொதித்தால் உமட்டல் என்று கிட்டத்தட்ட ஆறு மாசம் வரையில் அவள் கஷ்டப்பட்ட போதெல்லாம் ரொம்பவும் அனுசரணையாக சுதாகர் இருந்தது நிஜம்...

டாக்டர் குறித்துக் கொடுத்த டானிக், காப்ஸ்யூல் களைக் கையில் கொடுத்து விழுங்கச் சொன்னான். பழக் கடையிலிருந்து கூடையாய் பழங்களை வாங்கி வந்து, இரண்டு டம்ளர் ஜூஸ் குடித்தாக வேண்டும் என்று வற்புறுத்தினான். மாடிப்படி ஏறாதே—என்றான்—ஓடாதே—என்றான்—கனமான பொருட்களை தூக்காதே—என்றான். மாலையில் சீக்கிரம் கம்பெனியிலிருந்து திரும்பி வந்து மனைவியை பீச்சுக்கு அழைத்துச் சென்று காலார நடக்கச் செய்தான்.

இப்படி கண்ணுக்குள் வைத்து கவனிப்பதும், பெருமையாக அன்பைப் பொழிவதும் தாங்க மாட்டாமல் போன ஒரு இரவில்தான் அவன் மார்பில் தலை வைத்து சாரு மெல்ல விசிக்க, என்னவோ ஏதோ என்று சுதாகர் பதறிப் போனான்.

''என்னம்மா' என்ன சாரும்மா''—பத்து தரம் கேட்ட பிறகு விசும்பலூடே பேசினாள்.

''உங்களுக்கு எந்த விதத்திலேயும் நான் ஜோடி இல்லே...உருவத்திலேயோ, புத்திலேயோ...எதிலேயும் பொருத்தம் இல்லே.''

''யார் சொன்னா அப்படி?''

''யாரும் சொல்லலை நானாத்தான் சொல்றேன்... என் மேலே நீங்க எத்தனை ஆசையா இருக்கேள். பதிலுக்கு உங்களுக்குப் பிடிச்ச எதையும் செய்ய எனக்குத் தெரியலையே!''

''பிடிச்சதுனுன்னா என்ன சாரு? உதாரணத்துக்கு ஒண்ணு சொல்லு'...''

''உங்களுக்குப் பாட்டு ரொம்ப பிடிக்கறது. எனக்கு பாடத் தெரியாதது மட்டுமில்லாமல், அதைப் புரிஞ்சிக்கற ஞானம் கூட இல்லையே...''

விசும்பியவளை இறுக மார்புடன் சுதாகர் அணைத்துக் கொண்டான்.

''எனக்குப் பிடிச்சவளா மத்த எல்லாத்துலேயும் நீ இருக்கறப்போ பாடத்தெரியாட்டா என்ன, இல்லை அந்த ஞானம் இல்லாட்டாதான் என்ன? திடீர்னு இது என்ன குறை? ம்?''

''இல்லே ரொம்ப நாளாலே இந்த உறுத்தல் எனக்கு உண்டு. நீங்க அனுபவிக்கற விஷயத்திலே என்னால பங்கு கொள்ள முடியலையேனு வருத்தம் உண்டு. இன்னிக்கு மதுரை மணி அய்யரோட 'நாரினி தெலுசு கொண்டி'... கேட்டுண்டு இருந்தப்போ, 'இந்த ஸங்கதி பிரமாதமா இருக்கு இல்லே''னு கேட்டுட்டு என்னை பார்த்தேள்- நான் ஒண்ணும் புரியாத ஜடமா இருந்தது உங்களை பாதிச்சப்பல முகம் சட்டுனு வாடிப் போச்சு...அதான்...''

அவளைத் தொடர்ந்து பேசவிடாமல் தன் அணைப்பை இன்னும் இறுக்கினான் சுதாகர்.



''அசடு... வடிகட்டின அசடு...தானே எதையோ கற்பனை பண்ணிண்டு...உன்னை என்ன பண்ணா தேவலை...ம்? சாரு நீ இப்படி இருக்கறதுதான் எனக்குப் பிடிக்கறது...சத்தியமா... ஐ லவ் யூ... ஐ...லவ்யூ...ஆல்... யூ...ஆர்...இதை மட்டும் ஞாபகம் வைச்சுக்கோ... போதும்...''

கர்ப்பமாய் இருக்கும் பெண்களிடம் காரணமேயில்லாமல் சின்னச் சின்ன சலனங்கள், பயங்கள் வருவது உண்டு என்பதை உணர்ந்து, அதன் பிறகு வந்த நாட்களில் வேண்டுமென்றே அதிகம் ரேடியோ கேட்காமல், டேப் போடாமல், சங்கீதத்தை முணுமுணுக்காமல் இருக்க சுதாகர் முயற்சித்தான். அந்த வெள்ளிக்கிழமை அன்று, அவர்களுடைய முதல் கல்யாண நாள் அன்று, காயத்ரியிடம் ஒரு வாழ்த்து அட்டை வந்த நிமிஷத்தில் மட்டும் மோகனமும், கல்யாணியும் அவனுக்குள் இனிமையாய் ஜலதரங்கம் வாசித்தன. ஆனால், அதுவும் சரியாய் ஒரு நிமிஷத்துக்குத்தான். அப்புறம் சுத்தமாய் அடங்கி விட்டன.

## சுதாகர்-3

''அம்மா''

''ம்''

''பெட்டிலே எம்மா துணி எடுத்து வைக்கறே' நாம ஊருக்குப் போப்பறோமா?''

''ஆமா கண்ணம்மா...''

''நா''

நீயும் தான். மது குட்டி இல்லாமயா''

''புஸ்ஸி''

''பூனையெல்லாம் அழைச்சுண்டு போக முடியாது மது...''

''ஏம்மா''

''ட்ரெய்ன்ல விட மாட்டா''

''கூடைல போட்டு யாரும் பார்க்காம எடுத்துண்டு போனா?''

''அதெல்லாம் கஷ்டம்...விட மாட்டா''

''நாம போயிட்டா புஸ்ஸிக்கு யார் பால் விடுவா?''

''தாத்தா, இருக்கார்—ஆறுமுகம் இருக்கான் பார்த்துப்பாம்மா''



''எங்க போறோம்மா?''

''ஊட்டிக்கு ராஜம்மா.''

''ஊட்டின்னா?''

''அது ஒரு ஹில் ஸ்டேஷன் மது.''

''இல்டேஷன்னா?''

''வந்து...வந்து...அந்த ஊர் மல மேல இருந்து...குளுகுளு ஜோரா இருக்கு...''

''அதான் ஸ்வெட்டர் எடுத்து வைக்கிறியா?''

''கொஞ்சம் சும்மா இரும்மா. இன்னும் ஊர்பட்ட வேலை இருக்கு-உன்னோட பேசிண்டு இருக்க இப்ப எனக்குப் போது இல்லே''...

''அம்மா''

''என்னம்மா''

''என் டாலிக்கு ஸ்வெட்டர் இல்லியேம்மா...அவளுக்கு குளிராதாம்மா?''

மும்முரமாய் பேக் பண்ணிக் கொண்டிருந்த சாரு நிமிர்ந்தாள்.

''ஹால்ல என்ன பண்றேள்? கொஞ்சம் இவளைப் பார்த்துக்கோங்களேன்...

''ப்ளீஸ்...பாக் பண்ண விடாம நொய் நொய்கறா...''

படுக்கை அறைக்குள் எட்டிப் பார்த்த சுதாகர் மனைவியைப் பார்த்துச் சிரித்தான்.

''புத்திசாலித்தனமா மதுக்குட்டி பேசறதைப் போய் நொய் நொய்கறானு சொல்ல உனக்கு எப்படி மனசு வர்றது, சாரு?''

''என்ன புத்திசாலித்தனமோ, பேச்சோ, ஒரு வேலை பண்ணவிடாம சதா உங்களைப் பிடுங்கினா, அப்பத் தெரியும்.''

''என்ன பிடுங்கினாலும் நான் சலிச்சுக்க மாட்டேன் சாரு.''

வீம்புடன் பேசிய கணவனை நிமிர்ந்து பார்த்த சாரு புன்னகைத்தாள்.

''தான்பூரா கூட வேண்டாம். ஒரு மணி நேரம் சமாளிங்களேன்......ப்ளீஸ்...புண்ணியமாய் போகும்.''

சுதாகர் கட்டிலில் அமர்ந்திருந்த மகளை வாரி அணைத்துக் கொண்டான்.

''அம்மாவைத் தொந்தரவு பண்ணா எப்படிம்மா வேலை ஆகும்? நீ அப்பாகிட்ட வா ராஜாத்தி...''

இரண்டு பேரும் வாச வராந்தாவுக்கு வந்தார்கள்.

''அப்பா''

''என்ன டார்லிங்.''

''நமக்கெல்லாம் அம்மா ஸ்வெட்டர் எடுத்து வைக்கிறா...என் டாலிக்கு?''

''அது யார்ம்மா உன் டாலி?''

''என் டாலி தெரியாதுப்பா? இவதான்.''

கையிலிருந்த பொம்மையை மாதவி அவன் முன் நீட்ட, சுதாகர் பெரிசாய் சிரித்தான்.

''இவளுக்கு ஸ்வெட்டர் வேணுமா? வாங்கினா போச்சு...அப்புறம் இன்னும் என்னென்ன?''

''டாலி தினம் சாப்பிடற தட்டு, டம்ளர் எடுத்து வைச்சுக்கலாம்னா அம்மா வேண்டாங்கறா ... டாலி எப்படிப்பா சாப்பிடுவா'''

''பத்துநாள் சாப்பிடாட்டா டாலிக்கு ஒண்ணும் ஆயிடாதும்மா.''



''இல்லே அவளுக்குப் பசிக்கும்பா...''

''சரி...அங்கே போய் சின்னதா, புதுசா தட்டு வாங்கிக்கலாம். இப்போ, நீ சமர்த்தா இருந்தா நான் உனக்குக் கதை சொல்வேன் ஒகே.''

''என்ன கதை?''

''ரெட் ரைடிங் ஹூட்?''

''ம்ஹூம்...''

''ம்ம்-ஜாக் அண்ட் த பீன்ஸ்டாக்?''

''ம்ஹூம் - தங்கக் கிளி கதைப்பா...''

''ஓ. கே...ஒரே ஒரு ஊர்ல ஒரு ராஜா இருந்தானாம்... அவனுக்கு இரண்டு பிள்ளையாம்...''

''இல்லேப்பா மூணு...''

''சரி மூணு... அந்த மூணு பேர் பேரும் ஜானி, டேனி, போனியாம்...

''இல்லேப்பா...டேனி, போனி, ஜானி...''

''சரி...சரி... ஏதோ ஒண்ணு. ஒருநாள் ராஜா தோட்டத்துல காய்க்கிற தங்க மாம்பழம் காணாமப் போயிடுத்...''

''மாம்பழம் இல்லே...தங்க ஆப்பிள்...''

''அடடா... இரண்டு வரி பேச விடமாட்டேங்கறே, மது...மாம்பழமோ, ஆப்பிளோ ஏதோ ஒண்ணு...''

''ஏதோ ஒண்ணு இல்லேப்பா... தங்க ஆப்பிள். அம்மா அப்படித்தான் சொல்லுவா...''

''வாய மூடிண்டு சொல்றதைக் கேட்கணும் மது. இல்லாட்டா நான் சொல்ல மாட்டேன். மாம்பழம், ஆப்பிள் காணாம போனதும் ராஜா...மூத்த வெரி, பிள்ளையைக் கூப்பிட்டு, ஜானி, ஜானி...''

''ஜானி இல்லே...டேனி...''

''எவனோ ஒருத்தன்...''

''இல்லே டேனி... அம்மா அப்படித்தான் சொல்லுவா...''

உதட்டைப் பிதுக்கிக்கொண்டு மாதவி பதில் சொல்ல ''அம்மா சொல்றதைவிட நான் இன்னும் ஜோரா சொல்லுவேன் மது; இப்ப குறுக்கு பேசாம கேட்கப் போறியா இல்லியா? அந்த ஜானி என்ன பண்ணானாம்...'' சுருசுருத்த எரிச்சலை அடக்கிக் கொண்டு பேச...

''இல்லே...டேனி... டேனி தான் முதல்லே ஆப்பிளை தேடிண்டு போவான்...''

சுதாகர் மகளைத் தூக்கிக் கொண்டு எழுந்து நின்றான்.

''யம்மாடி...கதை சொல்லி, உன்னைச் சமாளிக்க நமக்கு ஆகாது. அதுக்கு உங்க அம்மாதான் சரி...''

பேசிய வண்ணம் படுக்கை அறைக்குள் வந்தவன் புன்னகையுடன் நிற்கும் மனைவியைப் பார்த்து அசட்டுச் சிரிப்பொன்றை சிரித்தான்.

''என்ன, பத்து நிமிஷம் ஆகலை, அதுக்குள்ள கூட்டிண்டு வந்துட்டேள்?''

''ஆ? பாவம் நீதான் ஒண்டியா எத்தனை நாழி பேக் பண்ணுவே? கொஞ்சம் ஹெல்ப் பண்ணலாமேனுதான். இந்தா இவளைக் கவனி...நான் அஞ்சு நிமிஷத்திலே பெட்டி, படுக்கை எல்லாத்தையும் தயார் பண்ணிடறேன்...''

பெண்ணை கைநீட்டி வாங்கிய சாரு கணவனைப் பார்த்து குறும்பாகச் சிரித்து, ''மேல் உதடெல்லாம் மண்; தட்டிக்கோங்கோ'' என்று மெதுவாகச் சொல்ல 'கு...ழு...தை' என்று செல்லமாக அழைத்து அவள் தலையில் சுதாகர் முட்டினான்.

Balu



திட்டமிட்டபடி மறுநாள் மூவரும் ஊட்டிக்குச் சென்றார்கள்.

தாஸ்ப்ரகாஷில் தங்கிக் கொண்டு நாளுக்கு ஒரு இடமாகப் போய் வந்தார்கள்.

ஒருநாள் காலை பொடானிகல் கார்டன்ஸ்...

மாலை லேக்கில் படகு, குதிரைச் சவாரி.

தொட்டபெட்டா கண்ணாடி வீடுக்குள் உட்கார்ந்து சூடாய் டீ குடித்தார்கள் ஒருநாள்.

சாப்பாடு கட்டி கையில் எடுத்துக்கொண்டு குன்னூர் ஸிம்ஸ் பார்க்குக்கு பிக்னிக் போய் வந்தார்கள்.

படகில், புல்வெளியில், பூக்கள் நடுவில் என்று மகளையும், மனைவியையும் நிற்க வைத்து கலர் படங்கள் நிறைய சுதாகர் எடுத்தான்.

ஊருக்குப் புறப்படுவதற்கு முதல்நாள் முதுமலைக்குச் சென்று யானைமேல் உட்கார்ந்து காட்டை ஒரு வட்டம் அடித்துவிட்டு வந்தார்கள்.

சிரிப்பும், துள்ளலும், பூரிப்புமாய் தங்கள் ஐந்தாவது திருமண நாளைக் கழித்துவிட்டு ஊர் திரும்பிய போது அவர்கள் வருகைக்காக காயத்ரியின் வாழ்த்து அட்டை சென்னையில் காத்திருந்தது.

பத்துநாள் போஸ்டையும் கையில் எடுத்து, சோபாவில் சாய்ந்தபடி உட்கார்ந்து புரட்டின சுதாகர் ஏர்மெயில் கவரைப் பார்த்து, அந்தக் கையெழுத்தைப் புரிந்து முதலில் அதைப் பிரித்தான்.

வழக்கம் போல அழகான கார்ட்.

வழக்கம் போல எண்ணி இரண்டு வரிகள்.

சாருவுக்கும், சுதாகருக்கும்—வாழ்த்துகள்.

அன்புடன்,
காயத்ரி.

இவ்வளவுதான்.

முந்தின நாலு வருஷங்கள் போலவே இந்த வருஷமும் இரண்டே இரண்டு வரிகள்தாம்.

மற்றபடி தன் விலாசம்? நீ சௌக்கியமா? நான் சௌக்கியம்? ம்ஹூம், ஒன்றும் இல்லே.

முதல் வருஷம் அலிகாரிலிருந்து வாழ்த்து வந்தது. இரண்டாவதிலிருந்து இங்கிலாந்திலிருந்து வருகிறது. இது ஒன்றுதான் வித்தியாசம். மற்றபடி எழுத்து, விபரம், சேதி, எல்லாம் ஒன்றுதான்.

என்ன ஆயிற்று காயத்ரிக்கு?

அவள் இங்கிலாந்துக்கு ஏன் போனாள்?

நாலு வருஷமாய் அங்கு என்ன செய்கிறாள்?

யாரையாவது மணந்து கொண்டு அங்கு போய் விட்டாளா?

யாரை?

வருஷம் தப்பாமல், மணநாளை நினைவு வைத்துக் கொண்டு வாழ்த்து அனுப்புபவள், ஏன் மற்ற எந்த விபரத்தையும் எழுதாமல் இருக்கிறாள்?

இப்படி பூடகமாக இருப்பதில் அவளுக்கு என்ன சந்தோஷம்?

மனசுள் எழுந்த எந்தக் கேள்விக்கும் பதில் தெரியாமல் சுதாகர் உட்கார்ந்திருக்க காபியுடன் சாரு வந்தாள்.





"ஏதாப்போ க்கியமான லெட்டர் உண்டா?"

"ம்ஹூம். ழக்கம் போல காயத்ரி கார்ட் அனுப்பி இருக்கா..."

"ஓ..." சாரு அதைக் கையில் வாங்கிப் பார்த்தாள்.

ஒரு நிமிஷம் மௌனமாய் இருந்துவிட்டு 'இவ ஒரு புதிரா இருக்கா' என்றபடி வாழ்த்து அட்டையை மேஜையில் வைத்தாள்.

சுதாகர் காபியை மெதுவாக உறிஞ்சினான்.

எஸ். சாரு சஸ் ரைட்.

காயத்ரி ஒரு புதிர் தான்!...

முதல் வருஷம் ஆக்ஸ்வோர்டிலிருந்து கார்ட் வந்ததும், இருப்புக் கொள்ளாமல் என்ன, என்ன என்று மனசு பரபரக்க அவள் வீட்டைத் தேடிப் போனதும், சேட்ஜி ஒருவர் நின்று கொண்டு "க்யா சாஹியே?" என்றதும், வீட்டை விற்று இரண்டு மாசமாகிறது, பழைய ஓனர் களைப் பற்றி விபரம் எதுவும் தெரியாது என்றதும், நினைவுக்கு வர, சுதாகர் சாருவைப் பார்த்து நிதான மாகச் சொன்னான்:

"நீ சொல்றதும் ரொம்ப சரி சாரு—அவ ஒரு புதிர் தான்."

## சுதாகர்-4

சுதாகர் கண்ணாடியைக் கழட்டி வைத்தான். கண்களை விரல்களால் அழுத்தத் தேய்த்தான். கண் எரிச்சல் அடங்காமலே இருக்க, எழுந்து போய் பாத்ரூமில் முகத்தை அலம்பிக் கொண்டு வந்தான். கண்களை உள்ளங்கைகளால் மூடிக்கொண்டு மூன்று நிமிஷங்கள் உட்கார்ந்திருந்தால் நல்லது என்று எங்கோ படித்தது நினைவுக்கு வர, மேஜை மேல் முழங்கைகளை ஊன்றி, உள்ளங்கையை லேசாகக் குழித்து வலக்கையால் இடது கண்ணையும், இடக்கையால் வலது கண்ணையும் மூடினான். ஒன்று, இரண்டு என்று மெதுவாக நூற்றி எண்பது வரை எண்ணி விட்டு, கைகளை எடுத்து, கண்களைத் திறந்தான்.

பச்சை, நீலமாக ஒரு நொடி மயங்கிய கண்கள் நிஜமாகவே குளிர்ச்சியுடன் இருக்கிற மாதிரிதான் தோன்றின.

கண்ணாடியை மாட்டிக் கொண்டு விட்ட இடத்திலிருந்து பைலைப் படிக்க ஆரம்பித்த நிமிஷத்தில் ஆபீஸ் பையன் உள்ளே வந்தான்.

''டீ வாங்கி வரவா ஸார்?''

மணி என்ன?

ஏழா?



''இப்போது டீ குடித்தால் அப்புறம் எப்போது சாப்பிடுவது?''

''வேணாம்பா... இன்னும் கால் மணியிலே நானே கிளம்பிடுவேன்.''

பையன் நகர்ந்து போனான்.

கிட்டத்தட்ட ஒரு வாரமாகவே—சாரு ஊருக்குப் போயிருக்கும் இந்த ஒரு வாரமாகவே தினமும், ஏழரை, எட்டுக்குத்தான் ஆபீஸை விட்டு சுதாகர் கிளம்புகிறான்.

வீட்டுக்குப் போய் என்ன பண்ணப் போகிறோம்? இங்கு உட்கார்ந்து தேங்கிப்போன வேலைகளைக் கவனித்தாலாவது உபயோகமாய் இருக்கும் என்ற நினைப்பில் பைல்களை, கணக்குப் புத்தகங்களைப் பார்த்தபோதுதான் கம்பெனியில் அவன் முதுகுக்கு அடியிலேயே நடக்கும் தில்லுமுல்லு பற்றி லேசாகப் புரிந்து கொள்ள முடிந்தது.

திடுதிடுப்பென்று நாலாம் நாள் ''லெட்ஜரையும், காஷ்புக்கையும் கொண்டுவாங்க, நான் பார்க்கணும்'' என்று சொல்ல ''எதுக்கு சார்? என்ன சந்தேகம் சொல்லுங்கோ. நானே விளக்கம் சொல்றேன், வீணா நீங்க ஏன் சிரமப்படணும்?'' என்று அந்த கிரிசனம், படபடப்புடன் அக்கௌண்டண்ட் பேச யதார்த்தமாக கணக்கு வழக்குகளைப் பார்க்க விரும்பியவனுக்குள் சந்தேகம் பிறந்தது.

என் இப்படி படபடக்கிறார்?

காஷ் புக், லெட்ஜரைக் கொண்டு வருவதில் இவருக்கு என்ன தொந்தரவு?

ஆடிட் காலத்தில்தான் கணக்குகளைப் பார்ப்பது வழக்கம்...சரி; அதற்காக இப்போது காட்ட மாட்டேன் என்றால் எப்படி?

அப்டு டேட் எழுதாமல் இருக்கிறாரா? அதான் உதைப்பா?

கட்டாயமாக புத்தகங்களைக் கொண்டு வரச்சொல்லி என்ன, என்ன என்று இரண்டு நாட்கள் உட்கார்ந்து பார்த்ததில்—தில்லுமுல்லு பிடிபட்டது.

கையிருப்புத் தொகைக்கும், புக் பாலன்ஸுக்கும் நாலாயிரம்போல உதைத்தது.

அறுபது வயசு அக்கௌண்டண்ட் தண்டபாணி, ரிடையர் ஆகவேண்டிய வயசு வந்து விட்டாலும் போனால் போகிறதுப்பா—ரொம்ப வருஷமாய் உழைக் கறார் முடியறவரைக்கும் செய்யட்டும் என்று மாமாவால் சிபாரிசு செய்யப்பட்ட தண்டபாணி, சாது மூஞ்சியும் இறங்கின பார்வையும், அதிராத பேச்சுமாய் இருக்கும் தண்டபாணி...

அவரா?

அவரா இப்படியொரு காரியம் செய்திருக்கிறார்?

இது எத்தனை நாளாக நடக்கிறது?

இன்னும் என்னென்ன நடக்கின்றன?

தண்டபாணியை அழைத்து இதற்கு விளக்கம் என்ன? என்று கேட்டுவிடலாமா—என்று நினைத்த சுதாகர் வேண்டாம், உடனே அவசரப்பட்டு கேட்க வேண்டாம்; மாமா வரட்டும் அவரைக் கலந்து பேசிவிட்டு ஆகவேண்டியதைக் கவனிக்கலாம் என்று தீர்மானித்தான்.

மாமா ஊரில் இல்லை.

பெண், பேத்தியை அழைத்துக் கொண்டு காசிக்குப் போயிருக்கிறார்.

போன மாசத்தில் ஒருநாள் அவன் ஆபிஸிலிருந்து திரும்பியதும் சாரு அந்த கல்யாணப் பேச்சை எடுத்தாள்,



''சித்தி லெட்டர் போட்டிருக்கா''

ரவாலாடுவை முழுசாக வாயில் அடைத்துக் கொண்ட சுதாகர் ''எழ்ந்த சிழ்த்தி?'' என்றான்.

''மென்னிய அடைக்கப் போறது. கொஞ்ச கொஞ்சமா சாப்பிடுங்களேன்... தண்ணி கொண்டு வரட்டுமா?''

''வேழ்ணாம்...வேழ்ணாம்... நீ சொழ்லு எழ்ந்த சிழ்த்தி?''

''மாலதி சித்தி; காசிலே இருக்காளே; அவ பொண்ணுக்கு வர்ற நாலாம் தேதி காசியிலேயே கல்யாணமாம். அவசியம் நாம்ப எல்லாரும் வரணும்னு லெட்டர் போட்டிருக்கா''

''காசிக்கா? அவ்வளவு தூரம் யார் போறது? பேசாம இங்க வந்து கல்யாணத்தைப் பண்ணக் கூடாதோ?''

''அவாவாளுக்கு எங்க சௌகர்யமோ அங்க செய்யாம உங்களுக்காக இங்க வருவாளா? சித்தப்பா பனாரஸ் ஹிண்டு யுனிவர்ஸிடிலே ரொம்ப வருஷமா இருக்கார். அங்கேயே வேண்டியவா எல்லாரும் இருக்கா வசதியா இருக்கும், பண்றார்.''

சுதாகர் பதில் சொல்லாமல் தண்ணீரைக் குடித்தான்.

''அக்கா போனதிலேந்து நமக்குள்ள தொடர்பு விட்டுப் போச்சு; இந்தக் கல்யாணத்துக்கு நீயும் மாப்பிள்ளையும் வந்தா, அக்காவே வந்த மாதிரி சந்தோஷப் படுவேன்'னு சித்தி எழுதியிருக்கா. பத்து நாள் போயிட்டுதான் வருவோமே...ப்ளீஸ்''

''இப்போ முடியாது சாரு...திடும்னு பத்து நாள் ஆபீஸை விட்டுட்டு எப்படி கிளம்பறது? மாமா என்ன சொல்றார்?''

"லெட்டர் வந்ததுமே கேட்டேன்... அவசியம் போக வேண்டிய கல்யாணம்னு சொல்றார். உங்களால வர முடியாட்டா நான் சாருவைக் கூட்டிண்டு அப்பாகூட போயிட்டு வரட்டுமா?"

சுதாகர் தலையைச் சாய்த்து அவளைப் பார்த்தான். மொழு மொழுப்பு உப்பிய கன்னங்கள், லேசாக மேடு தட்டிய வயிறு.

சாருவுக்கு இது ஐந்தாம் மாசம்.

"என்ன பாக்கறேள்?"

"இல்லே... அஞ்சு மாசமாயிடுத்தே... ட்ராவல் பண்ணா ஒத்துக்குமானு யோசிக்கிறேன்..."

"டாக்டர் கிட்ட கேக்கறேன்; அவர் சரினு சொன்னா போறேன்..."

"அப்படியாவது இந்தக் கல்யாணத்துக்குப் போகணுமா சாரு?"

"சித்தி லெட்டரைப் பாத்ததிலேந்து பாவம் அவளுக்கும் நம்மை விட்டா யாருனு இருக்கு...காசியும் பார்த்த மாதிரி இருக்கும், நீங்களும் வாங்களேன்..."

"எனக்கு இப்ப காசி பார்க்க அவசரமில்லேம்மா... இன்னும் பதினைஞ்சு இருபது வருஷம் போகட்டும்..."

சிரித்துக் கொண்டே சுதாகர் அனுமதி கொடுக்க, வகையாய் பெண்ணுக்கும் பள்ளி விடுமுறையாக இருக்க, குஷியாய் சாரு கிளம்பினாள்.

கங்கா காவேரி எக்ஸ்ப்ரஸில் காசி பயணம். அங்கு ஒரு வாரம். அப்புறம் கல்கத்தா. அங்கு இரண்டு நாட்கள்.

தடபுடலாய் திட்டம் தீட்டிக் கொண்டு கிளம்பினாளும் இவனும் கூட வராததில் வருத்தம் தான்.



"கல்யாணமான இந்த அஞ்சரை வருஷத்திலே உங்களை விட்டு நான் பத்துநாள் பிரிஞ்சிருக்கறது இதான் முதல் தடவை. எப்படியோ இருக்கு...நீங்களும் வாங்கோ...ஒரு வாரத்திலே வந்துடலாம்..."

நாலு தரம் மனசாகாமல் கெஞ்சி விட்டு சாரு புறப்பட்டாள்.

"கங்கையிலே குளிக்கறப்போ தம்பதியா குளிச்சாதான் விசேஷமாம். இல்லேன்னா, ஆத்துக்காரர் வேஷ்டிய கூட பிடிச்சிண்டாவது குளிக்கணுமாம். ஒரு வேஷ்டி குடுங்கோ..."

"ராத்திரி ரொம்ப நேரம் முழிச்சிண்டு இருக்காதீங்கோ...ஞாபகமா பால் குடிங்கோ...சனிக்கிழமை ஒரு விரல் எண்ணெய் தேய்ச்சுக்கோங்கோ..."

"கொல்லை கட்டுக் கதவைத் திறந்து போட்டுட்டு படுத்துக்கப் போயிடாதீங்கோ, ஆறுமுகம் ஒரு சோம்பேறி. அவனை நம்பி பொறுப்பை ஒப்படைக்காதீங்கோ..."

ரயில் கிளம்புற வரை நீள நீளமாய் பேசிக்கொண்டிருந்துவிட்டே சாரு கிளம்பிப் போனாள்.

அந்தக் கரிசனமும், அந்தப் பேச்சும் நினைவில் முட்டி சின்னதான புன்னகையை உதடுகளில் தேங்க விட, இன்றைக்கு வேலை பார்த்தது போதும் என்று சுதாகர் எழுந்தான்.

பேப்பர்கள், பைல்கள் எல்லாவற்றையும் ட்ராயரில் வைத்துப் பூட்டினான்.

"ரூமைப் பூட்டு" என்று பையனிடம் சொல்லி விட்டு வெளியில் வந்தான். சாரு இல்லாத வீட்டுக்குப் போக வேண்டும் என்ற நினைப்பே உதைத்தது.

அன்பாலும், விசுவாசத்தாலும் எந்த அளவுக்கு இவன் ஆட்கொண்டு விட்டான்—என்று வியப்புடனேயே காரில் ஏறி சாந்தி விஹாருக்குப் போனான்.

ஹாலில் ஏக்கச்சக்க கூட்டம்.

ஒரு மேஜை காலியானதும் அங்கு போய் உட்கார்ந்து கொண்டான்.

''இரண்டு இட்லி...ஒரு தோசை...சூடா பால்...''

உணவுக்காகக் காத்திருக்கையில் பார்வையைப் பக்கவாட்டில் சுழட்டினான்.

ஒரு வடக்கத்திய குடும்பம்.

குண்டு, சிகப்பு, ஷிபான் புடைவைகள்

இந்தப் பக்கம் நாலு மீசை முளைக்காத இளவட்டங்கள்.

சாயம் போன ஜீன்ஸ். அழுக்கு மாதிரி தோற்றமளித்த பனியன். எண்ணெய் இல்லாத தலைமுடி.

நாலு வயதுப் பெண் ஒன்று மேஜைகளுக்கு நடுவில் ஓடி விளையாடிக் கொண்டிருந்தது.

மதுவும் இப்படித்தான் இங்கு வந்தால் ஒரு நிமிஷம் சும்மா இருக்க மாட்டாள். தோசை வார்க்கும் இடத்தில் நின்று வேடிக்கை பார்ப்பாள். வாசலில் இருக்கும் கண்ணாடிக் கூண்டுக்குள் சென்று ''இது, இது, இது'' என்று எட்டுவித இனிப்புகளை கை காட்டி வாங்கித் தரச்சொல்லுவாள்.

மனைவி, பெண் பற்றின நினைப்புகளுடனே டிபனை சாப்பிட்டு முடித்தவன், பீச்சில் அரைமணி உட்கார்ந்தால் என்ன என்று வண்டியை மரினாவுக்கு விட்டான்.



வண்டியைவிட்டு இறங்காமல், கதவை மட்டும் திறந்து வைத்துக்கொண்டு உட்கார்ந்தவனின் காதுகளில் பக்கத்து காரிலிருந்து 'மோக்ஷமு கலதா' பாடல் விழுந்தது.

டேப்பா? ரேடியோவா?

லால்குடியின் வாசிப்பு. நெஞ்சை நெகிழ்த்தி, கண்களில் வழிய வைக்கும் சாரமதி.

''ஓ! எத்தனை நாட்களாயின—இந்த சுகானுபவத்தை அடைந்து?

பக்தியும் சங்கீத ஞானமும் இல்லாதவர்களுக்கு மோக்ஷம் கிடைக்குமா?

ப்ராணாநல ஸம்யோக முவல்ல

ப்ரணவ நாதமு ஸப்தஸ்வரமுலை பரக

வீணாவாதனா லோலுடௌ சிவ மநோ......

ஐந்து கட்டை சுருதியில் காயத்ரி வெகு இனிமையாக இப்பாடலைப் பாடுவது திடுமென்று காதில் ரீங்கரித்தது.

லால்குடியின் இழைப்பில் அலை அலையாய் வந்த சாரமதி மனசை மயக்கியது. சின்னதாக விசித்து அழ வேண்டும்போல இருந்தது.

ஏன், என்ன என்று சொல்லத் தெரியாமல் கனத்த ஹ்ருதயத்துடன் வீட்டுக்கு வந்து, ரொம்ப நாட்களுக்குப் பிறகு டேப் ரிகார்டரை தட்டித் துடைத்து, காருகுறிச்சியின் டேப்பை மாட்டி, அவருடைய தோடியில் மூழ்கிப் போய், கண்ணீர் மல்க, நீ...ண்...ட நேரத்துக்கு அப்படியே உட்கார்ந்திருந்துவிட்டு, ஓய்ந்து போய் படுக்கையில் விழுந்து தூங்கிய கொஞ்ச நாழிகைக்கெல்லாம் அந்த ட்ரங்கால் வந்தது.

## சுதாகர்-5

பாட்னாவிலிருந்து ''ட்ரங்கால்''

நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தவனை எழுப்பி உட்கார வைத்து 'ட்ரங்கால் வருகிறது—பாட்னாவிலிருந்து' என்றதும் சுதாகர் தூக்கக் கலக்கம் மாறாமல் எனக்கா என்று வியந்தான்.

'பாட்னாவிலிருந்தா?

எனக்தா?

ட்ரங்காலா?

எனக்கு அந்த ஊரில் யாரையும் தெரியாதே!

சில சமயங்களில் உறக்கத்திலிருந்து நடு ராத்திரிகளில் அடித்து எழுப்பி பிறகு ராங் நம்பராகப் போன அனுபவம் உண்டென்பதால் ஒரு தரத்துக்கு இரண்டுதரம் 'விச் நம்பர் டு யூ வாண்ட்?' என்று கேட்டு, தன் நம்பருக்குத்தான் கால் வருகிறதா என்பதை ஊர்ஜிதப்படுத்திக் கொண்டான்.

நாலைந்து நிமிஷங்கள் அவனைக் காக்க வைத்த பின் ''அந்த பக்க நம்பர் கிடைக்கவில்லை. வைத்துவிடுங்கள். திரும்பவும் கூப்பிடுகிறோம்'' என்று ஆபரேட்டர் சொன்னதும், ரிஸிவரை வைத்துவிட்டு மலங்க மலங்க விழித்தான்.

பாட்னாவிலிருந்தா?





எனக்கா?

ட்ரங்காலா?

யார் கூப்பிடுகிறார்கள்?

காசிக்குப் போகும் வழியில்தானே பாட்னா இருக்கிறது? அங்கு மாமா, சித்தப்பா என்று யாருடனாவது தங்கிவிட்டு இன்னும் இரண்டு நாட்கள் தாமதமாக ஊர் திரும்புவோம் என்று சொல்லத்தான் சாரு கூப்பிடுகிறாளா?

அப்படியே வைத்துக் கொண்டாலும் காலையில், மாலையில் கூப்பிடாமல்...இப்படியா? இந்த அகால வேளையிலா?...

மணிக்கட்டைத் திருப்பி மணியைப் பார்த்தபோது அது இரண்டே கால் என்று சொல்ல, திடீரென்று முதுகு தண்டுக்குள் பூரான் ஒன்று நெளிய ஊர்ந்தது.

பாட்னாவிலிருந்து யார் கூப்பிடுகிறார்கள்?

இந்த ராத்திரி நேரத்தில்?

தூக்கம் கலைந்து விட, சுதாகர் பாத்ரூமுக்குச் சென்று வந்தான்.

பாட்டிலில் வைத்திருந்த தண்ணீரைச் சாய்த்துக் குடித்தான்.

யார் கூப்பிடுகிறார்கள்?

யாருக்காவது ஏதாவது ஆகிவிட்டதா?

யாருக்கு?

என்ன?

நாலு தரம் அறையில் குறுக்கும் நெடுக்கும் நடந்தவன் இருப்புக் கொள்ளாமல் ரிஸீவரை எடுத்து என் கொயரியை அழைத்தான்.

தன் நம்பரைச் சொல்லி "எனக்கு பாட்னாவிலிருந்து ஒரு கால் வந்தது; அந்தப் பக்க லைன் கிடைக்கவில்லை என்றார்கள், கொஞ்சம் பார்க்கிறீர்களா?" என்றான்.

திரும்ப தண்ணீர் குடித்தான்.

குட்டி போட்ட பூனை மாதிரி நடந்தான்.

நிச்சியமாக ஏதோ கெட்ட சேதிதான் என்பதை உணர்த்த முடிய உள்ளங்கையில் வியர்க்கத் தொடங்கியது.

என்ன விஷயம்?

மதுவுக்கு ஜுரம், கிரம் வந்திருக்குமோ?

மாமா ஏற்கனவே ஒருதரம் ஹார்ட் அட்டாக் வந்தவராயிற்றே, அவருக்குச் சுகம் இல்லாமல் போயிருக்குமோ?

ஒருவேளை...ஓ...மை காட்! அலைச்சல் தாங்காமல் சாருவுக்கு அபார்ஷன் ஆகி இருக்குமோ?

எதுவானாலும் காசியிலோ, கல்கத்தாவிலிருந்தோ கூப்பிடாமல் பாட்னாவிலிருந்து ஏன் அழைக்கவேண்டும்?

எதுவும் புரியாமல் சுதாகர் நகத்தைக் கடித்தான், பிடரியைத் தடவிக்கொண்டான். உள்ளங்கையில் முஷ்டியால் ஓங்கிக் குத்தினான். ஜன்னலிடம் நின்று இருட்டை வெறித்தான்.

என்ன?

எ...ன்...ன?

இந்தச் சனியன் பிடித்த டெலிபோன் வேறு இப்படி மக்கார் பண்ணுகிறதே!

லைன் கோளாறு சரியாகாமல் இருந்து விட்டால்?



அவர்களால் என்னோடு பேச முடியாது போய் விட்டால்?

எவர்களால்?

என்ன சொல்ல முடியாது போய்விட்டால்?

கால் மணியில் போன் திரும்ப அலறியது.

"ஹலோ?"

சுதாகரின் நம்பரைச் சொல்லி ஆபரேட்டர் வினவ அவன் 'எஸ்' என்றான்.

"பாட்னாவிலிருந்து கால் வருகிறது. அப்படியே லைனில் இருங்கள்..."

"........."

"ஸ்பீக் ஆன் ப்ளீஸ்"

"ஹலோ..."

"........."

"ஹல்லோ..." பெரிசாய் சுதாகர் கத்த, அந்தப் பக்கம் ஒரு புது குரல் 'ஹலோ' என்றது.

"ஹலோ? சுதாகர் ஹியர்"

"சுதாகர்? நான் சாம்பமூர்த்தி பேசறேன்"

"எந்த சாம்பமூர்த்தி?"

"காசி சாம்பமூர்த்தி... ஹிண்டு யுனிவர்ஸிட்டி ப்ரொஃபஸர்"

சாருவின் சித்தி புருஷனா?

அவர் எதற்குக் கூப்பிடுகிறார்?

"சுதாகர் வந்து...மனசை நீங்க ரொம்ப தேத்திக்கணும்...வந்து...வந்து..."

"என்ன ஸார்...வந்து?"

"முந்தா நாள் ராத்திரி காசிலேந்து கல்கத்தா போக அத்திம்பேரும், சாருவும், குழந்தையோட ரயில்லே புறப்பட்டா, வழியிலே...நான் என்னனு சொல்வேன் சுதாகர்..."

குரல் செம்மிப் போய் அவர் கலங்க, அடிவயிற்றில் குபீரென்று என்னவோ பற்றி எரிய, "என்ன ஸார் விஷயத்தைச் சொல்லுங்களேன்" என்று கத்தினான்.

"வழியிலே ஒரு ஆக்ஸிடெண்ட் சுதாகர்...கம்பார்ட்மெண்ட்டுலே கொள்ளக்காரா புகுந்து கொள்ளையடிச்சு கலாட்டா பண்ணதிலே...ஐம் ஸாரி சுதாகர் மனசை கல்லாக்கிக்கோங்கோ...வந்து... சாரு... சாரு ஈஸ் டெட்..."

"எ...என்னது?"

ஹோ என்று சுதாகர் கத்தினான்.

"எ...என்ன ஸார் சொல்றேள்?"

"தூங்கிண்டு இருந்த மது கழுத்து செயினை எடுக்க, முரட்டுத்தனமா கொள்ளைக்காரன் ஒருத்தன் குழந்தையை தூக்கி இருக்கான். பொண்ணை ஏதோ பண்ணப் போறான்ங்கற பயத்திலே சாரு கத்திண்டு முன்னால பாஞ்சிருக்கா; அவ தன்னைத் தாக்க வராளு நினைச்சு துப்பாக்கியால் சுட்டுட்டு...ஓடி...ஓடிட்டான். சுதாகர் நீங்க தைரியமா இருக்..."

பேச முடியாமல் அவர் தவிக்க, சுதாகர் செயலிழந்து நின்றான்.



"ரயில் ஓடிண்டு இருந்த இடம் சரியான அத்வான காடாம்...கூட இருந்த பாசஞ்சர்ஸ் செயினை பிடிச்சு இழுத்திருக்கா. ஆனாலும் ட்ரெயின் நிக்கவேயில்லை யாம்...பாட்னால வந்து நின்னதும்தான் கார்ட்டுக்கும், போலீசுக்கும் விஷயத்தைச் சொல்ல முடிஞ்சுதாம்...அதுக் குள்ள, எக்கச்சக்கமா ப்ளட் ஆனதுலே வர்ற வழியிலே நம்ப சாரு...நான் என்னனு சொல்றது சுதாகர்? தகவல் வந்து ஓடி வந்தேன். அத்திம்பேர் பிரமை பிடிச்சு உட் கார்ந்துட்டார். குழந்தை மது வாய் ஓயாம அழறா... நீங்க உடனே வரணும் சுதாகர்...உடனே..."

ரிஸீவரை வைத்துவிட்டுத் தலையில் ஓங்கி ஓங்கி அடித்துக் கொண்டு சுதாகர் வாய்விட்டு அழுதான்.

கொஞ்சம் சமாளித்துக் கொள்ள முடிந்ததும் பதறி ஆர்ப்பரித்த உடம்பையும், மனசையும் அடக்கி, இனி ஆவதை யோசிக்க வேண்டும் என்று நினைக்கிற விவேகம் தோன்றியதும், ஆபீஸ் மானேஜர் கணேஷுக்கு போன் செய்தான்.

சுருக்கமாக விவரம் சொல்லி உடனே அவனை வீட்டுக்கு வரச் சொன்னான்.

இண்டியன் ஏர் லைன்ஸுடன் தொடர்பு கொண்டு பாட்னாவுக்குப் போக எந்தெந்த விமானங்களைப் பிடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதோடு, தன் நிலைமையைச் சொல்லி முதல் விமானத்திலேயே டிக்கெட் வேண்டும் என்று கெஞ்சினான்.

பீரோவைத் திறந்து எவ்வளவு பணம் இருக்கிறது என்று பார்த்தான்.

ஆயிரத்து சில்லரை...இது எப்படி போதும்...

அரக்க பரக்க வந்து நின்ற கணேசை வாடிக்கையாளர் உத்தம் சேட்டுக்கு போன் பண்ணச் சொன்னான்.

அவர் தேவையான பணத்துடன் நேராக இண்டியன் ஏர்லைன்ஸ் அலுவலகத்துக்கு வந்து விடுவதாகச் சொல்ல, காலை நாலு மணி அளவில் சின்ன கைப்பெட்டி, இரு நம்பர்கள் சகிதம் ஏர்லைன்ஸ் ஆபீஸில் சுதாகர் இருந் தான்.

யார் யாரிடமோ கெஞ்சி எப்படியோ டிக்கெட் வாங்கி விமானங்களை இரண்டு இடங்களில் மாற்றி அவன் பாட்னாவை ஒரு வழியாய் அடைந்தபோது இருள் நன்றாகக் கவிழ்ந்து விட்டது.

எந்த விமானத்திலும் அவன் வந்து விடலாம் என்ற உத்தேசத்துடன் ஏர்போர்டிலேயே காலையிலிருந்து மதுவுடன் பழி கிடந்த மாலதி, சாருவின் சித்தி, இவனைக் கண்டதும் வாய்விட்டுப் புலம்பினாள்.

''கல்யாணத்திலே துள்ளிக் குதிச்சுண்டு, சந்தோஷமா வளைய வந்தவள், இன்னிக்கு நம்மை ஏமாத்திட்டு போயிட்டாளே...என்னால தானே அவ உயிர் அகாலமா பிரிஞ்சுது? கல்யாணத்துக்கு வந்துதான் ஆகணும்னு நான் நிர்பந்திக்காம இருந்திருந்தா அவ ஊர்ல சௌக்கியமா இருந்திருப்பாளே...நான் பாவி மஹா பாவி...''

''அப்பா...அம்மாவை ஒரு முரடன் சுட்டுட்டாம்ப்பா ...ஒரே ரத்தம்ப்பா...அம்மா அம்மானு கூப்பிட்டா என்னே கேக்க மாட்டேங்கறாப்பா...''

விக்கிக் கொண்டே மதுவும் தன் பங்குக்கு இவனைக் கட்டிக் கொண்டு பேசினாள்.

சுதாகர் வாயே திறக்கவில்லை.

மகளை வாரி அணைத்து தூக்கிக் கொண்டு, நேராக மனைவியின் சடலம் இருந்த அரசாங்க வைத்திய சாலைக்குச் சென்றான்.



போடவேண்டிய இடங்களில் கையெழுத்துப் போட்டு விட்டு, போஸ்ட்மார்டம் செய்து, வெள்ளைத் துணியில் பொட்டலம் போல கட்டிக்கொடுத்த சாருவை வாங்கிக் கொண்டான்.

ஜடமாய் உட்கார்ந்திருந்த மாமாவையும், 'அம்மா கிட்ட போகணும்...எங்கம்மா கிட்ட போகணும்' என்று முரண்டு பண்ணி அழுத பெண்ணையும் மாலதியின் பொறுப்பில் விட்டு விட்டுச் சாப்பாட்டை ஏற்பாடு செய் திருந்த வேனில் பிணத்தை ஏற்றி கங்கைக் கரையிலிருந்த மயானத்துக்குக் கொண்டு போனான்.

அடுக்கின விறகு வரட்டிமேல் சடலத்தைக் கிடத்தி முகத்தை மட்டும் விட்டு விட்டு பாக்கி இடங்களில் மீண்டும் வரட்டியை வைத்ததும், வாய்க்கரிசி போட் டான். உள்ளூர் பண்டா, மந்திரங்களைச் சொல்ல, சிதை யைச் சுற்றி வந்து ஐந்தரை வருஷங்களுக்கும் மேலாய் அருமை, பெருமையாய் அன்பாய், சிறப்பாய் தன்னுடன் வாழ்ந்த மனைவிக்குக் கொள்ளி வைத்தான்.

மறுநாள் எலும்புத் துண்டங்களையும், சாம்பலையும் அங்கேயே கங்கையில் கரைத்துவிட்டு மாமா, பெண் ணுடன் ஊருக்குத் திரும்ப விமானம் ஏறினான்.

## காயத்ரி-1

நாலாகவும், எட்டாகவும் புத்தகங்களை எடுத்து பெட்டியில் அடுக்கின நிமிஷத்தில் குட்டியாய் ஒன்று மட்டும் நழுவி கீழே விழ, காயத்ரி குனிந்து அதை எடுத்தாள்.

புரந்தரதாஸரின் கீர்த்தனமாலா.

ஹ்ருதயம் 'சட்'டென்று 'ஹா ஹா' என்று ஆர்ப்பரிக்க முதல் பக்கத்தைப் பிரித்தாள்.

நாதத்தின் மத்தியில்தான் ஈசன் உறைகிறான்.

இனிய நண்பன்,

சுதாகர்.

குழந்தையை மடியில் கிடத்திக் கொண்டு தடவுகிற தினுசில் மென்மையாய் அந்தப் புத்தகத்தை வருடினாள்.

கைக்கு வந்த புத்தகத்தைப் புரட்டினாள்.

'கலியுக தலி ஹரி நாமவ னென தரே
குல கோடிகளும் உத்தரிசுவவோ ரங்கா'

செஞ்சுருட்டியில் குழையும் கீர்த்தனம்.

''இதுலே புரந்தரதாஸர் என்ன சொல்றார் தெரியுமா, காயத்ரி? எனக்கு அர்ச்சனை, பூஜைனு எதுவும்



தெரியாது; ஜபம், தபம்னு ஒன்னும் தெ-ஒன் பெரியவா யார் கிட்டயும் உபதேசம் ஆனதும் கிடையா-து ஆனா உன் பேரைச் சொல்லத் தெரியும். அச்சுதா, அனந்தா, கோவிந்தா, முகுந்தா—னு விடாம மனப்பூர்வமான பக்தியோட சொல்லத் தெரியும். வேறு எதுவும் தெரியாது-னு என்னை துச்சமா நினைச்சு, ஒதுக்கிடாதே ரங்கா-னு பெத்த தகப்பன்கிட்ட ஒரு பிள்ளை சொல்ற பாவத்தோட இருக்கறதை, நிச்சிந்தியா ராத்திரி போதுலே, தனியா உட்கார்ந்துண்டு கேட்டா—வாஸ்தவமா சொல்றேன் காயத்ரி, என்ன பக்தி இது சரணாகதி இது-னு மனசு பொங்கிப் போயிடறது...''

பக்கத்தில் இருந்த நாற்காலியில் அமர்ந்து பாட்டை நிதானமாக ஒருதரம் படித்த நாழிகையில் மளுக், மளுக் கென்று நெஞ்சம் நெகிழ்ந்து போவது புரிந்தது.

சுதா சொன்னது ரொம்ப சரி, பாடிக்கூட கேட்க வேண்டாம். சாதாரணமாய், பாடம் படிப்பது போல அர்த்தம் புரிந்து படித்தாலும் மனசு பொங்கித்தான் போறது!

சுதா இதுவரை சொன்னதில் எது தப்பாக இருந்திருக்கிறது!

அவன் ஒரு ப்ராக்டிகல் ஜென்டில்மேன்.

எதையும் சிந்தித்து இது சரிதானே என்று பத்து தரம் யோசனை பண்ணிவிட்டு வாய் வார்த்தையாய் பேசும் ரகம்; அள்ளிக் கொட்டினதில்லை. அவசரப்பட்டு தனக்குத்தான் தெரியும் என்று பேசினதில்லை......

சுதா......

இப்போது சுதா எப்படி இருப்பான்?

பெருத்து லேசாக தொந்தி விழுந்து......

ஏக்கு சொல்லிக் கொடுப்பா, என்று ஒன்று பக்கத்தி பிடுங்க; கையில் தூக்கி வைத்துக் கொண்டிருக்கும் இன்னொன்று பாலுக்கு அழ......

எப்படி இருப்பான் சுதா?

பார்த்து எத்தனை வருஷங்களாகிவிட்டன?

ஐந்தரை—

ம்ம்...அதற்கும் மேலேயே; ஆல்மோஸ்ட் ஆறு வருஷங்கள்.

அவனுக்குக் கல்யாணமான சில மாசங்களில் நான் அலிகாருக்குப் புறப்படுமுன் சந்தித்தது தானே? ஆயிற்று—இன்னும் இரண்டு வாரங்களில் அவனுடைய ஆறாவது வெட்டிங் ஆனிவர்ஸரி வந்து விடுகிறதே!

எப்படி இருப்பான் இப்போது சுதா?

ஐந்து வருஷங்களாய் ஒரு கடிதம்கூட போடாமல் இருந்ததில் கோபமாய் இருப்பானா?

'சொல்லாமல் கொள்ளாமல் அலிகாருக்குத்தான் போனாய் என்றால், லண்டனுக்குச் சென்றபோதுகூடவா ஒரு நிமிஷம் என்னைப் பார்த்து விவரம் இது என்று சொல்லி விடைபெற முடியாமல் போய்விட்டது?'—என்று வருத்தப்படுவானா?

இல்லை, ஆறு வருட இடையில் அத்தனையும் மறந்து விட்டு, காயத்ரியா? யார்? ஓ! காலேஜில் என்னோடு படித்த காயத்ரியா? எப்படி இருக்கிறாய்? என்று விட்டேத்தியாய், குசலம் விசாரிப்பானா?

விட்டேத்தியாக சுதா இருப்பான் என்பதை ஏனோ காயத்ரியால் எண்ண முடியவில்லை,





இரண்டு வருஷம் ஆத்மார்த்தமாகப் பழகிய நட்பின் நினைவு சுகந்தனை உள்ளத்தில் ஒட்டிக் கொண்டிருந்தால் கூட போதுமே—அப்புறம் விட்டேத்தியாவது மண்ணாங்கட்டியாவது? இல்லை, சுதா கண்டிப்பாய் பழைய சுதாவாகவேதான் இருப்பான்.

தவிர வருஷா வருஷம் திருமண நாளை மறக்காமல் வாழ்த்து அட்டை வேறு அனுப்பி இருக்கிறேன். அப்புறம் எப்படி?

சந்திக்கிறோமோ இல்லையோ, பேசி, கடிதத் தொடர்பு வைத்திருக்கிறோமோ இல்லையோ, சுதா என்றென்றும் என்மேல் அழுத்தமான பிடிப்பு உள்ள நண்பனாகவேதான் இருப்பான், நிச்சயம்...நிச்சயம்...

நான்தான் அவன் அன்று கூறினது போல, ஒருதலை பட்சமாக எதையோ கற்பனை பண்ணிக் கொண்டு...

வேண்டாம், பழைய அசட்டு நினைப்புகள் வேண்டாம்...

தெளிந்த, திட மனசு காயத்ரியாக மாறின பிறகு இனி அந்த எண்ணங்கள் எல்லாம் திரும்ப எதற்கு?

காயத்ரி எழுந்தாள். புத்தகத்தை மேஜையில் வைத்து விட்டு, காஸெட் டேப்புகள் வைத்திருந்த ஸ்டாண்டிலிருந்து எம். எல். வசந்தகுமாரியின் டேப்பை தேடி எடுத்தாள். ரெகார்டரில் பொருத்தி, ஸ்விட்சைப் போட்டாள்.

''பாரோ க்ருஷ்ணையா—நின்னே

பக்தர மனே க்கே''

பலிக்காக வாமனன், பகீரதனுக்காக கங்கை, முசுகுந்தனுக்காக ஸ்ரீ முகுந்தன், விதுரனுக்காக கிருஷ்ணன், விபீஷணனுக்காக ராமன் வந்த மாதிரி,

எனக்காக நீ வரக்கூடாதா—என்று வருத்தத்துடன் துவங்கி ராகமாலிகையில் எம்.எஸ்.வி. காதலாகி, கண்ணீர் மல்க, கசிந்து உருகினார்.

கங்கண காதல்லி ஹொந்தொன்து ஹொணயுதே...

சதங்கை திகதிமி திம்திமி என்று சப்திக்க, தங்க கங்கணங்கள் ஒன்றோடு ஒன்று மோதி கிங்கிணி கிங்கிணி என்று ஓசைப்படுத்த, தங்கக் குழலை ஊதிக்கொண்டு புரந்தரதாஸர் வேண்டியபடியே கண்ணன் பிரத்யட்சமாக, காயத்ரி பிரமித்தாள். கண்களில் நீர் திரண்டது. தொண்டை அடைத்தது. உடம்பின் ஒவ்வொரு நூலிலும் சுத்தமான சங்கீதம் பிரவகித்து ஒட்டுமொத்தமாய் ஆளை என்னமோ செய்தது.

இன்றைக்கு பாக்கிங் அவ்வளவுதான் என்று தீர்மானித்து விட்டது போல படுக்கையில் காலை நீட்டி படுத்துக் கொண்டாள்.

இன்னும் நாலு நாட்கள்—எண்ணி நாலே நாட்கள் அப்புறம் இந்திய மண்ணைத் திரும்ப மிதித்து விடுவோம் என்ற நினைப்பு மனசின் பரவசத்தை அதிகப்படுத்தியது.

ஆக்ஸ்போர்ட்டில் மூணரை வருஷங்களில் டாக்டரேட்டை முடித்ததையும், ஒரு வருஷமாய் மான்செஸ்ட்ரின் பிரபல மருந்து கம்பெனியில் ரிஸர்ச் அஸிடெண்ட்டாக வேலை பார்த்ததையும். போதும் இந்த ஊரின் வாழ்க்கை, சொந்த ஊருக்குப் போக வேண்டும்... என்ற ஏக்கம் பிறந்ததின் காரணமாய் இந்தியாவிலுள்ள மருந்து கம்பெனிகள் சிலவற்றுக்கு அப்ளை செய்ததையும், அதிருஷ்டவசமாக சென்னையில் புதிதாகத் துவங்கி இருக்கும் நிறுவனத்திலேயே அவள் விரும்பும் வகையில் ரிஸர்ச் ஆபீஸராகவே, வேலை கிடைத்து விட்டதையும், ...டை முடிச்சுகளுடன் நாலரை வருஷங்களுக்குப்பின்



புறப்படப் போவதையும் தொடர்ச்சியாய் நினைக்கையில் நானா, தனியாகவா—இத்தனை வருஷங்களாய் அயல் நாட்டில் தங்கி இத்தனையும் செய்தேனா? என்ற மலைப்பு தலை தூக்கியது.

தனியாக—என்பதை மீண்டும் மனசுக்குள் கொண்டு வந்து நிறுத்தியபோது, இரண்டு வருஷங்களுக்கு முன் அம்மா அகாலமாய் தவறிப் போனது நறுக்கென்று குத்தியது.

தீஸிஸ் மும்முரமாக எழுதிக் கொண்டிருந்த சமயம்; நாளில் பதினெட்டு மணி நேரங்களை, ஆராய்ச்சி கூடத்தில், லைப்ரரியில் செலவிட்டுக் கொண்டிருந்த சமயம்.

அவளுக்கு அந்த தினம் நன்றாக நினைவிருந்தது.

மாலை மணி ஏழு இருக்கும்...

தந்தி.

எனக்கா? தந்தியா?

பிரிப்பதற்கு முன்பே சேதியை ஊகிக்க முடிந்து விட்டது.

—ராஜம் நேற்று இரவு உறக்கத்திலேயே இறந்து விட்டாள். உன் வருகைக்காக காத்திருப்பது கஷ்டம்; உடனே பதில் தேவை.

மாமா.

அழுது ஓய்ந்த பிறகு யோசித்தாள்.

போட்டது போட்டபடி கிளம்புவது இயலாத காரியம்.

என் வருகைக்காக காத்திருப்பது கஷ்டம் என்று மாமா சொல்லி விட்டார்.

அப்புறம்?

மனசை கல்லாக்கிக் கொண்டாள். கொடுத்து வைத்தது இவ்வளவுதான் என்று தேற்றிக் கொண்டாள்.

'காரியத்தைக் கவனியுங்கள்'-என்று பதில் தந்தி அடித்து விட்டாள்.

இப்போது ஊருக்குப் புறப்படுகிறோம் என்று ஆகி விட்ட பிறகு 'அம்மா அம்மா' என்று சதா மனசு முனகுகிறது.

அம்மா இல்லை, இனி நாம தனிதான்—என்ற நினைப்பு உட்கார விடாமல் விரட்டுகிறது.

அம்மா இல்லாமல் சென்னையில், தனியாய், தன்னந் தனியாய்...

வேண்டாம்...மனசை அலைகழிக்கும் கற்பனைகள் எதுவும் வேண்டாம்.

கையை மீறிய விஷயங்கள் என்று ஆகிவிட்டவை பற்றி சிந்தித்து வீணாகக் குழம்பிப் போவதில் என்ன அர்த்தம்?

படுக்கை கொள்ளாமல் காயத்ரி எழுந்தாள்.

விட்ட இடத்திலிருந்து பேக்கிங்கைத் தொடர்ந்தாள்.

இரண்டு புத்தகப் பெட்டிகள். ஒரு துணிமணி பெட்டி. இவ்வளவுதான்.

நாளைக்கு மான்செஸ்டரிலிருந்து லண்டனுக்கு ரயிலில் பயணம், அங்கு ஒய்.எம்.ஸி.ஏ.ல் இரண்டு நாட்கள். நாலாம் நாள் காலையில் விமானம் பிடித்தாக வேண்டும்.

பேக் செய்து முடித்தபின் லண்டனில் செய்ய வேண்டிய காரியங்களை குறித்துக் கொள்ள பேப்பரும், பேனாவுமாய் உட்கார்ந்தாள்.



யார் யாருக்கு என்ன வாங்கிப் போவது?

லிஸ்ட் போட்டாள்.

மாமா—இவருக்கு ஒரு கைக்கடிகாரமும் ஷர்டும் வாங்கி விடலாம்,

மாமி-ஒன்பது கஜப்புடைவை கட்டி, இரண்டு மூக்கும் குத்தி, மஞ்சளும், பூவும் மெட்டியுமாய் நிற்கும் மாமிக்கு லண்டனிலிருந்து என்ன வாங்கிச் செல்ல முடியும்?

ஹவ் அபௌட் மிக்ஸி?

இந்தக் காலத்தில் குக்கிராமங்களில் இருக்கிறவர்கள் கூட மிக்ஸி உபயோகிக்கிறார்களே! காபிப் பொடி, மிளகாய்ப் பொடி இதெல்லாம் அரைக்கிற அட்டாச்மெண்டோடு இருந்தால் மாமிக்கு சௌகரியமாய் இருக்காதா?

அடுத்து வாசு—மாமாவின் மூத்த பிள்ளை, இருபத்தி ஐந்து வயசுக்காரன். போன வருஷம் கல்யாணம் ஆனவன்.

வாசுவுக்கு பார்க்கர் பேனா, அவன் மனைவிக்கு புடைவை.

மாமா பெண் லலிதாவுக்கும் ஒரு புடைவை, அவள் கணவனுக்கு பேனா என்று கொடுத்து விடலாம்.

அடுத்த பையன் வெங்கட் காலேஜில் படிக்கிறான். இவனுக்கு?

ஷர்ட், பேனா?

ஓ. கே.

மாமா குடும்பம் ஆயிற்று! அப்புறம்?

இவர்களைத் தவிர நெருங்கின உறவுக்காரர்கள் என்று சொல்லிக் கொள்ள வேறு யாருமே தனக்கு இல்லை என்று நினைத்த போது காயத்ரிக்கு லேசாக வியப்பு எழுந்தது.

வேறு யாரும் இல்லையா?

ஏன் இல்லை?

சுதா—

அட, அவனை மறக்கலாமா? விடலாமா?

கண்டிப்பாய் அவனுக்கும், அவன் குடும்பத்துக்கும் வாங்க வேண்டும்.

கைநிறைய சாமான்களுடன், அவன்முன் போய் நின்று 'ஹலோ சுதா'—என்றால் என்ன பண்ணுவான்?

சுதாவுக்கு ஏதாவது ஸ்பெஷலாய் வாங்க வேண்டும்...

என்ன?

ம்ம்...ம்...ஒரு கால்குலேடர்?

சின்னதாய், ஆபீஸ் மேஜையில் வைத்துக் கொண்டு அன்றாடம் உபயோகிக்கும்படியாய்? ரைட்...

சாருவுக்கு?

புடைவை...செண்ட்...லிப்ஸ்டிக்?

போதும்...வெள்ளம்...

ஆமாம், சுதாவுக்கு இப்போது குழந்தைகள் இருக்க மாட்டார்களா, அவர்களுக்கு எதுவும் வாங்காமல் வெறுங்கையோடா போவது?



ஆனா, பெண்ணா எத்தனை என்ற விவரம்கூடத் தெரியாமல் என்னவென்று வாங்குவது?

சில நிமிஷ யோசனைக்குப் பிறகு பொதுவாக ஒரு விளையாட்டுச் சாமான்கள் சாக்லெட் போன்றவைகளை வாங்கிக் கொள்ளலாம் என்று தீர்மானித்தான்.

திட்டமிட்டபடி மறுநாள் தன் உடமைகளுடன் மான்செஸ்டரிலிருந்து புறப்பட்டு லண்டன் போனான்.

ஆக்ஸ்போர்ட் தெருவில் உள்ள மார்க்ஸ் அன்ட் ஸ்பென்சரில் சில சாமான்களை வாங்கினான். ரஸ்ஸல் ஸ்க்வேருக்குச் சென்று அங்குள்ள இண்டியன் ஸ்டோரில் ஏழெட்டு புடைவைகளை நல்ல டிஸைனில் பொறுக்கி எடுத்தான்.

வாட்ச், கால்குலேட்டர், ட்ரான்ஸிஸ்டர், டூ இன் ஒன், டேப்புகள் என்று லிஸ்டு சாமான்களோடு தனக்கும் தேவையானவைகளைத் தேடித் தேடி வாங்கினான்.

கடைசி நாளன்று, இனி திரும்ப இந்த நகரத்துக்கு வருவோமோ மாட்டோமா என்ற நினைப்பில் ஊர் சுற்றிப் பார்த்தான்.

பக்கிங்ஹாம் பாலஸிக்கு முன்னால் நின்று வாயில் காப்பாளர்கள் மாறும் விதரணையைப் பார்த்தான்! ட்ரஃபால்கர் ஸ்வேருக்குச் சென்று ஆயிரமாயிரத்தில் படபடத்த புறாக்களுக்கு தீனி போட்டான். தேம்ஸ் நதியில் டவர் ஆஃப் லண்டன் வரையில் படகில் போனான். மேடம் டுஸாட் மீயூஸியத்துக்குச் சென்று, தத்ரூபமாய் நின்று, உட்கார்ந்து கொண்டிருந்த மெழுகு உலக த்தலைவர்களைப் பார்த்தான்.

இருட்டும் முன் அறைக்குத் திரும்பி வந்து லிஸ்ட்படி அத்தனையும் வாங்கி விட்டோமா என்று செக் செய்தாள். உதிரியாய் இருந்தவைகளை கச்சிதமாய் பெட்டிகளில் அடுக்கினாள். பாஸ்போர்ட், டிக்கெட்டை சரிபார்த்தாள்.

மறுநாள் நீண்ட நேரம் பயணிக்க தன்னைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டி, பொழுதோடு படுக்கச் சென்றபோது. மனசில் சந்தோஷம் ஏகத்துக்கு உட்கார்ந்திருப்பதை அவளால் உணர முடிந்தது.

16978
3294704

## காயத்ரி-2

கல்யாணசுந்தரம் ஏர் போர்ட்டுக்கு வந்திருந்தார். பம்பாயில் கஸ்டம்ஸ் வேலைகளை முடித்தபின், தொடர்பு விமானத்தைப் பிடித்து சென்னை மீனம்பாக்கத்தில் இறங்கினவள் காத்துக் கொண்டு நின்றிருந்த மாமாவைப் பார்த்து வியந்து போனாள்.

''வா காயத்ரி...சௌக்யமா இருக்கியாம்மா?''

அன்புடன் வரவேற்றவரை நிமிர்ந்து பார்க்கையில், அந்த வளைந்த நெற்றியும், மெல்லிய உதடுகளும் இத்தனை வருஷங்களாக இல்லாத நிறுசில் அம்மாவின் சாயலைக் காட்ட, சட்டென்று இமை ஓரங்களில் நீர் கட்டிக் கொண்டது.

மாமாவின் கைகளைப் பற்றிக் கொண்டாள்.

''நீங்க நன்னா இருக்கேளா, மாமா?'' தெளிவாய் கேட்கமுடியாதபடி குரல் கிசுகிசுத்து அடைத்துப் போனது.

''நான் இருக்கறதுக்கு என்னம்மா? அருமையான தங்கையை வாரி கொடுத்திட்டு நன்னாத்தான் இருக்கேன்''

பொதுஇடம் என்பதையும் லட்சியம் பண்ணாமல் கல்யாணசுந்தரம் கண் கலங்க, காயத்ரி தலையைக்குனிந்து

கொண்டாள். நெஞ்சிலிருந்து சரசரவென்று மேலெழும்பிய கண்ணீரை, உதட்டைக் கடித்து கண்ணுக்குள்ளேயே நிறுத்தினாள்.

''கைப் பைய என்கிட்ட கொடும்மா...''

தோளிலும், கையிலும் சுமந்து வந்த பைகளை வாங்க அவர் கை நீட்ட, ''நீங்க ஏர் போர்டுக்கு வருவேள்னு நா எதிர் பார்க்கலை மாமா...இதுக்காகவா ஊர்லேந்து வந்தேள்? எதுக்கு வீண் சிரமம்?'' என்றபடி காயத்ரி பைகளைக் கொடுத்தாள்.

''இதெல்லாம் நினைக்க ஆரம்பிச்சுட்டா, அப்புறம் பந்தபாசம், உறவுனு சொல்லறத்துக்கெல்லாம் அர்த்தமே இல்லாம போயிடும். கடுதாசு பார்த்ததிலேந்து, ஊர்ல எனக்கு இருப்புக் கொள்ளவே இல்லே...பார்த்து நாலரை வருஷம் ஆறதா—நல்ல படியா வந்து சேரணுமேனு ஆதங்கம்...வேற...''

காயத்ரி பதில் சொல்லாமல் அந்த அன்பை, கரிசனத்தை ரசிக்கும் நினைப்பில் ஒரு நிமிஷம் அப்படியே நின்றாள். பின் 'நீங்க இந்த நாற்காலில் உட்கார்ந்துக்கோங்கோ, நான் பெட்டிகளை எடுத்துண்டு வந்துடறேன், என்று சொல்லி சுழல ஆரம்பித்து விட்ட கன்வேயர் பெல்ட் சமீபம் சென்றாள்,

மூன்று பெட்டிகளையும் போர்ட்டர் ஒருவர் சுமந்து வர, மாமாவுடன் வெளியில் வந்தாள்.

''இப்ப நாம எங்க போறோம், மாமா? ஏதாவது ஹோட்டல்லே ரூம் எடுத்துக்கலாமா?''

''வீடு இருக்கறப்போ ஹோட்டல் எதுக்கு காயத்ரி? வாசு இங்க டி.வி.எஸ்.லே ஆபிஸரா இருக்கானே ஞாபகமில்லையா? வீடு டி. நகர்ல...அவனும் ஆபீஸுக்கு அரைநாள் லீவு போட்டுட்டு ஏர்போர்ட்டுக்கு வர்றதா





தான் இருந்தான்; பிளேன் ஏகத்துக்கு லேட்டானதும் இரண்டுங்கெட்டானா வர முடியாம போயிடுத்து-நம்மாத்துக்கு அழைச்சிண்டு வந்துடுங்கோனு நூறு தரம் சொல்லிட்டுப்போயிருக்கான், அவன் வந்து கூப்பிடலைனு நீ ஹோட்டலுக்குப் போயிடாதே...'' 'இந்தாப்பா, இந்த டாக்ஸிலே சாமான்களை ஏத்து...'

டாக்ஸி புறப்பட்டதும் காயத்ரி கேட்டாள்:

''மாமி, லலிதா, வெங்கட் எல்லாரும் சௌக்கியமா, மாமா?''

''ம்ம், மாமிக்கும் உன்னை அழைக்க மெட்ராஸ் வரணும்னுதான். பிரஷர் ஜாஸ்தியா இருக்கறதுலே திடும்னு தலைசுற்றல் வந்துடறது...அதுவும் ராஜம் நினைச்ச நினைப்பு இல்லாம போய்ச் சேர்ந்ததுல இவ ரொம்ப ஆடிப்போயிட்டா...''

தங்கையின் நினைப்பு வந்துவிட கல்யாணசுந்தரத்தின் குரல் செம்மி போனது.

''ராஜத்துக்கு கிடைச்ச மாதிரி ஒரு சாவு லேசுல யாருக்கும் வராது. காயத்ரி—முந்த நாள் சாயங்காலம் கோவில்ல உபன்யாசம் கேட்டுட்டு ராத்திரி மோரும் பழமும் சாப்டுட்டு படுத்துண்டதுதான்; கார்த்தால வழக்கத்துக்குமாறா அஞ்சரை ஆகியும் எழுந்திருக்காம இருக்க, 'என்னடிம்மா ராஜம், உடம்பு சரியில்லையா?-னு கேட்டுண்டே போய் கையைத் தொட்டேன். கை ஜில்லா இருந்தது. பதறிண்டு வெளக்கைப் போட்டுப் பார்த்தா எல்லாம் முடிஞ்சு எத்தனையோ நாழி ஆயிருந்தது. கையை, தலைக்கு மடிச்சு வைச்சு, ஒருக்களிச்சு படுத்துண்டிருந்ததைப் பார்த்தா—தூங்கறானுதான் யாரும் சத்தியம் பண்ணுவா. மூஞ்சிலே அலாதி அமைதி...அப்படி ஒரு சாவை யாரும் பார்த்ததில்லேனு ஊரே பேசிண்டது. புண்ணியவதி யாருக்கும் எந்தத் தொல்லையும் கஷ்டமும்

இல்லாம நிமிஷமா தன் காரியத்தை முடிச்சுண்டு போயிட்டா...நா...நான் இருக்கேன், மூத்தவன்...கல்... கல்லாட்டம்...''

கல்யாணசுந்தரம் கண்ணில் வழிந்த நீரை துடைக்கத் தெரியாமல் உட்கார்ந்திருக்க, சப்தமில்லாமல் காயத்ரியும் விசிக்க முற்பட்டாள்.

''நீ வரணும், வந்தப்புறம்தான் எடுக்கணும்னு நான் ஆசைப்பட்டேன். இருக்குறவ ஒரே பொண். அவளுக்கு முகமுழி கிடைக்காம பண்ணக் கூடாது. ஆனவரைக்கும் முயற்சி பண்ணேன். முடியலை, ராத்திரிலே பிராணன் போயிடுத்து, அக்ரகாரம். நம்மாத்துல காரியம் ஆனாலே ஒழிய, மத்த வீடுகளில் அடுப்பு எரியாது. குழந்தை களையும், வயசானவாளையும் பட்டினி போட்டுட்டு, உனக்காக இரண்டு நாளோ, மூணு நாளோ காத்துண்டு இருக்கறது எப்படி சாத்தியம்? சொல்லு? அம்மா முகமுழி கிடைக்காம இவன் பண்ணிட்டானேனு உனக்கு என்மேல கோபமா காயத்ரி? நா வந்து, என் நிலமை...''

எதுவும் பேசாமல் மாமாவின் கையைப் பற்றி 'அலட்டிக் கொள்ளாதீர்கள். எனக்குப் புரியாதா—'என்று சொல்கிற மாதிரி லேசாக அமுக்கினாள்.

கண்களைத் துடைத்துக் கொண்டு தன்னை ஆஸ்வாசப்படுத்திக் கொள்ள முயற்சித்தாள்.

சைதாப்பேட்டையைத் தாண்டுவதற்குள் நன்றாக சமாதானமாகி விட்டவளாய் பேச்சை மாற்றும் உத்தேசத்துடன் ''லலிதா, வெங்கட் எல்லாரும் எப்படி இருக்கா மாமா? நிலத்திலே விளைச்சல் எல்லாம் சரியா இருக்கா?'' என்றாள்.

''எல்லாரும் சௌக்கியம்தான். அவ போயிட்டாங் கறதைத் தவிர குறை எதுவும் இல்லே...வெங்கட் வாசு வாத்துல தங்கிண்டு எம்.ஸி. ஸிலே படிக்கிறான். ஸி.ஏ.



பண்ணனும்னு ஆசைப்பட நான். லலிதா, அவ ஆத்துக் காரர், குழந்தை சௌக்கியம். ஆமா, நீ என்னோட ஊருக்குத்தானே வரப்போறே?''

காயத்ரி யோசனையுடன் மாமாவை ஏறிட்டாள்.

''இப்ப உடனே வரது கஷ்டம். நாளைக்கு கம்பனி எம்.டியைச் சந்திக்கறதா தகவல் கொடுத்திருக்கேன். என்னைப் பார்க்காமலேயே, என் படிப்பு,மத்த அனுபவ விவரங்களை வைச்சுண்டே, இந்த வேலையை எனக்கு கொடுத்திருக்கா. நாளைக்கு அவரைப் பார்த்து வேலை எப்ப ஜாயின் பண்றது, மத்த விவரங்கள் என்னனு பேசிடறது நல்லதுங்கறதால, இப்ப உடனடியா ஊருக்கு வர முடியும்னு எனக்குத் தோணலை மாமா. "வேலை பிடிமானம் ஆகி, ஸெட்டில் ஆனப்புறம் கண்டிப்பா வரேன். ப்ளீஸ் புரிஞ்சுக்கோங்கோ...''

''நீ வரலைன்னா மாமி ரொம்ப ஏமாந்து போவா, காயத்ரி''

''என் நிலைமையைச் சொல்லுங்கோ மாமா; எவ்வளவு சீக்கிரம் வர முடியுமோ, வரேன்னும் சொல் லுங்கோ...''

உஸ்மான் ரோடில் டாக்ஸி திரும்பிவிட, ''ரைட்ல திரும்பு, அங்க லெஃப்டிலே...அந்த பச்சை பெயிண்ட் அடிச்சிருக்கிற கேட்தான்'' என்று வழி சொல்லி கல்யாண சுந்தரம் வீட்டு வாசலில் வண்டியை நிற்கச் செய்தார்.

அன்று முழுவதும் மாமா, மற்றவர்களுடன் பழங் கதை பேசுவதில் காயத்ரி நேரத்தைச் செலவழித்தாள்.

வாங்கி வந்த பொருட்களை அவரவர்களுக்கு எடுத்துக் கொடுத்தாள்:

மிக்ஸியையும், லலிதாவுக்குப் போக வேண்டிய சாமான்களையும் மாமாவிடம் தந்தாள்.

''நீ வரச்சே கொண்டு வாயேன் காயத்ரி''

''இருக்கட்டும் மாமா, நீங்க எடுத்துண்டு போனா என்ன, நான் கொண்டு வந்தா என்ன? வாங்கிண்டு வந்ததை கையோடு கொடுத்தனுப்பிச்சாதான் திருப்தி...''

வெங்கட்டும், வாசுவும் மாறி மாறி அவளுடைய ஆக்ஸ்போர்ட், மான்செஸ்டர் வாழ்க்கை பற்றி கேள்விகள் கேட்க, அத்தனைக்கும் ரொம்ப நேரத்துக்கு இரவு பதில் சொல்லிக் கொண்டிருந்துவிட்டுப் படுத்தவள், காலையில் சீக்கிரம் எழுந்து, குளித்து, தயாரானாள்.

''நான் ஸ்கூட்டர்ல ஆபீஸ் போறச்சே உன்னை ட்ராப் பண்ணட்டுமாக்கா?''

''வேணாம் வாசு...நீ புறப்படு...எனக்குபத்து மணிக்கு தான் அபாய்ண்ட்மெண்ட்... ஐ'ல் டேக் எ காப் (Cab)''

ஒன்பதே முக்காலுக்கு டாக்ஸி ஒன்றை அழைத்து வரச் செய்து, தன்னைப் பற்றின குறிப்புகள், லெட்டர்கள் அடங்கிய பைலுடன் காயத்ரி நுங்கம்பாக்கத்திலிருந்த அலுவலகத்துக்குச் சென்றாள்.

நிர்வாக ஆபீஸ் இங்கு; ஆராய்ச்சிக் கூடங்கள் இருப்பது வேளச்சேரியில்.

மானேஜிங் டைரக்டர் ஐம்பது வயசைத் தாண்டின வடக்கத்தியகாரர், நல்லவராகத் தெரிந்தார்.

மரியாதையுடன் காயத்ரியை வரவேற்று ''உங்களைப் போன்ற திறமைசாலிகள் எங்கள் ஸ்தாபனத்தில் வேலை ஏற்பதைப் பெருமையாக நினைக்கிறோம்'' என்று வாயா ரபேசினார்.

காயத்ரி மேற்கொள்ளப்போகும் வேலையைப் பற்றி, ராய்ச்சியின் முக்கியத்துவத்தைப்பற்றி நீளமாய் கூறி



விட்டு ரீஸர்ச் டைரக்டர், மற்ற உயர் அதிகாரிகளிடம் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தினார்.

வேளச்சேரி தொழிற்சாலை காம்பௌண்டுக் குள்ளேயே, கெஸ்ட் ஹவுஸ் இருப்பதாகச் சொல்லி, வீடு கிடைக்கிறவரைக்கும் அதில் வசதியாய் தங்கிக்கொள்ள லாம் என்றும் கூறினார்.

இரண்டு மணி சுமாருக்கு அவருடன் மதிய உணவை முடித்துக் கொண்டபின், காயத்ரி வீட்டுக்கு வந்தாள்.

கல்யாண சுந்தரம் கதவைத் திறந்து விட்டார்.

''என்னம்மா, சந்திக்க வேண்டியவாளை சந்திச் சாச்சா?''

''ஆச்சு மாமா... எம்.டி.யும் மத்த டைரக்டர்களும் ரொம்ப நல்ல மாதிரியா தெரியறா...நாளைக்கு ஜாயின் பண்ணறதா சொல்லிட்டு வந்துட்டேன்...''

''காமாட்சி க்ருபையிலே எல்லாம் நல்லா நடக்கணும். உங்கம்மா தெய்வமா கூடவே உனக்கு எல்லாத்திலேயும் துணையா இருக்கணும்''

வாசுவின் மனைவி காபி டிபனுடன் வந்தாள்.

''டிபன் வேணாம். இப்பத்தான் சாப்பிட்டேன். காபி மட்டும் போறும்...''

''நான் நாலு மணி பஸ்லே ஊருக்குப் போலாம்னு இருக்கேன், காயத்ரி. இன்னும் பத்து நாள்ல நீ ஊருக்கு வருவேன்னு மாமிகிட்ட சொல்லட்டுமா?''

''சொல்லுங்கோ... அப்புறம் வந்து மாமா...''

''என்னம்மா?''

''எனக்கு வேலை வேளச்சேரிலே...லேப், ஆபீஸ் ...ாம் அங்கதான் இருக்கு. நினைச்சு நினைச்சு போக

வேண்டி வரும்; அதனால, அங்கேயே இருக்கற கெஸ்ட் ஹவுஸ்லே தங்கிக்கலாமானு யோசனை. இங்கேயிருந்து போயிட்டு வர்றது கஷ்டமா இருக்கும்னே தோணறது. நீங்க தப்பா எடுத்துக்கலைனா, நான் நாளைக்கு அங்க போயிடறேன்...என்ன மாமா?''

கல்யாண சுந்தரம் அவளைத் தீர்க்கமாய் பார்த்தார்.

ரொம்ப ஈஷிக்கொள்ள விரும்பாமல் தன்னிச்சையாய், சுதந்திரமாய் இருக்க விருப்பப்படும் அவள் குணம் ஏற்கனவே புரிந்த விஷயமானதால், மேற்கொண்டு விவாதிக்காமல் 'உன் இஷ்டம்மா...ஆனா, இங்க வந்துண்டு போயிண்டு இரு...நல்ல சாப்பாடு கிடைக்காம அவஸ்தைப் படாதே' என்று மட்டும் சொன்னார்.

மறுநாள் வேலைக்குப் புறப்படும்போது, காயத்ரி, தன் உடமைகளை எடுத்துக்கொண்டே கிளம்பினாள்.

கெஸ்ட் ஹவுஸில் பர்ஸனல் ஆபீஸர் இவளுடைய வருகைக்காகக் காத்திருந்தார். அறை வசதியாய் இருந்தது. பெரிசு, ஏ.ஸி. அட்டாச்ட் பாத்ரூம். பெல் அடித்தால் ஓடிவரும் பணியாள். சாப்பாட்டுக்கு திண்டாடாத வகையில் கெஸ்ட் ஹவுஸோடு கூடிய சமையல்கூடம்,

அன்றைக்கு அலுவலகம், ஆராய்ச்சிக் கூடம் எல்லாம் சுற்றி வந்து எங்கெங்கு என்னென்ன இருக்கின்றன என்று தெரிந்துகொண்டாள். சக ஊழியர்களை அறிமுகப் படுத்திக் கொண்டாள்.

இரண்டாம் நாள் ஓரளவுக்கு எல்லாம் பிடிபட்டு விட, தான் செய்ய வேண்டியவைகளைக் குறிப்பெடுத்துக் கொண்டு படிப்படியாய் வேலையில் இறங்கினாள்.

ஒரு வாரத்துக்குள் ரொடீன் நன்றாகவே வேலையும் மனசுக்குப் பிடித்துப் போக, சுத பார்த்து வருவதைப்பற்றி நினைக்கத் துவங்கினாள்.



வரும் புதன்கிழமை அவர்களுடைய ஆறாவது வெட்டிங் ஆனிவர்ஸரி டே...அன்றைக்குச் சென்று அவர்களைச் சந்தித்து வாழ்த்தி விட்டு வந்தால் என்ன?

நான் பழைய காயத்ரி இல்லை சுதா; மனசு தெளிந்து, நிலைமையைப் புரிந்து கொண்டு விட்ட காயத்ரி-என்பதை புரிய வைக்கும் தினுசில் நேரில் போய் நின்றால் என்ன?

திட்டமிட்டபடி புதன் காலையில் ஆறுக்கு எழுந்து தயாராகி, லண்டனிலிருந்து வாங்கி வந்திருந்த சாமான் களுடன், சொந்த வீடு, அதனால் விலாசம் மாறி இருக்காது என்ற நம்பிக்கையில் டாக்ஸி ஏறி, சுதாவின் விலாசத்தை வண்டியோட்டியிடம் கூறிய நிமிஷத்தில், கட்டுப்பாட்டை மீறிக்கொண்டு ஒருவித பரபரப்பு அவளுள் எழவே செய்தது.

## காயத்ரி-3

இதே வீடுதான்.

கொஞ்சம் உயரமான காம்ப்பௌண்ட் சுவர், கறுப்பு பெயிண்ட் அடித்த கேட், ஒரு பக்கம் ஸ்கந்தாஸ்ரமம்— என்று வீட்டுப் பெயர். இன்னொரு பக்கம் 'சுப்ரமணியம்' என்று சுதாகரின் மாமா பெயர்.

இதே தான்.'

இறங்கி, டாக்ஸிக்குப் பணத்தைக் கொடுக்கப் போனவள், கொஞ்சம் யோசனையுடன் ''வெய்டிங்ல இருக்க முடியுமா?'' என்றாள்.

''எத்தனை நாழி ஆவும்?''

''கால் மணி, மிஞ்சி போனா அரை மணி?''

''அஞ்சு ரூபா போட்டுக் கொடுங்க, இருக்கேன்'

காயத்ரி சாமான்கள் அடங்கிய பையை எடுத்துக் கொண்டாள். கேட்டைத் திறந்து உள்ளே நுழைந்தாள்.

அவந்தரையாய் கிடந்த தோட்டம் கண்களை சட்டென்று உறுத்தியது.

பெருக்கி மாசம் ஆன நினுசில் குப்பல் குப்பலாய இலை சத்தை, சருகுகள்.



வெட்டப்படாமல் புதர் மண்டிக் கிடந்த புல் தரை,

சரியாக நீர் இல்லாமல் காய்ந்து வாடி நிற்கும் செடிகள்.

காயத்ரி நின்று நிதானித்தாள்.

முன்பு ஓரிரு முறை இந்த வீட்டுக்கு வந்தபோது பார்த்திருந்த தோட்டத்தின் குளுமை கண் முன் நிழலாடியது.

கேட்டிலிருந்து வீடு வரைக்கும் சென்ற நடை ஒரு இலை, தூசி இல்லாமல் பளிச்சென்று இருந்தது.

அடிக்கடி வெட்டிவிடப்பட்ட புல்வெளி, கவனிப்புடன் வளர்க்கப்படும் பணக்கார வீட்டுப்பையனின் தலை மாதிரி புஸுபுஸு வென்று கார்பெட்டாய் விரித்திருந்தது.

வரிசையாய் அடர்த்தியாய் நின்ற காசித் தும்பை, ஜீனியா, ஆஸ்டர் பூச்செடிகள்...

அந்தத் தோட்டமா இது?

ஏன் இப்படி கவனிப்பார் இல்லாமல் நாசமாகி விட்டது!

தோட்டக்காரன் நின்று விட்டானா?''

வேறு ஆள் யாரும் கிடைக்க வில்லையா?

சாருவுக்குத் தோட்டத்தில் நாட்டம் போய் விட்டதா?

யோசனையுடன் நடந்தவள் கண்ணில் போர்டிகோவை அடுத்து தரையில் கவிழ்ந்து கிடந்த சைக்கிளும், ஒருக்களித்துபுழுதிபடர்ந்திருந்தவிளையாட்டு மோட்டார் காரும் விழுந்தன.

இதழ்களில் ஒரு புன்னகை இளசாய் தோன்றியது.

குழந்தைகள்?

பிள்ளைகள் பிறந்து எக்கச்சக்கமாய் விஷய[...] செய்கின்றனவா?

அதுதான் வேறு எதையும் கவனிக்க இயலாதபடி சாருவின் நேரத்தை ஆக்ரமித்துக் கொள்கிறதா?

சிரிப்பு மாறாமல் படிகளில் ஏறினான்.

முன் கூடத்தில் யாராவது கண்களில் தென்படுகிறா[...]களா என்று பார்த்தான்.

ம்ஹூம் இல்லை—ஒருவரும் இல்லை.

வராந்தாவில் இருந்த பெல் ஸ்விட்சை அழுக்க கை நீட்டியபோது, உள்ளேயிருந்து பெரிசாய் ஒரு குழந்தையின் அழுகுரல் கேட்டது.

சன்ன த்வனியில் ஒரு பெண் பேசுவதும், உடனே குழந்தை ''மாட்டேன்...மாட்...டேன்...போ'' என்[...] உரக்க கத்துவதும் மீண்டும் கேட்டது.

காலை நேரம்...

எல்லாருக்கும் ஊர்ப்பட்ட வேலைகள் இருக்கும்.

சமையலைக் கவனித்து, குழந்தைகளைத் தயார் பண்ணி, பள்ளிக்கு அனுப்ப வென்று பிஸியாக இருக்கும் சமயத்தில் வந்து தொந்தரவு செய்கிறேனோ?''

''யாரும்மா அது?''

குரல் கேட்டு காயத்ரி திரும்பிப் பார்த்தாள்.

பனியன், அரை நிக்கருடன் ஒரு ஆள் நின்றிருந்தான்.

''மிஸ்டர் சுதாகர் வீடுதானே இது?''

''ஆமா''

''அவர் இருக்காரா?''

''இருக்கார். நீங்க யாரு?''



''தெரிஞ்சவங்க...''

நிக்கர் ஆள் அசிரத்தையுடன் அவனைப் பார்த்தான்.

''உள்ளே போய் உக்காருங்க. வருவாரு...''

அதோடு தன் வேலை முடிந்துவிட்ட மாதிரி அவன் வீட்டைச் சுற்றிக் கொண்டு பின்பக்கம் போனான்.

காயத்ரி கூடத்துக்கு வந்து ஒரு சோபாவில் உட்கார்ந்து கொண்டாள்.

கைப்பையை வைத்துவிட்டு சாய்ந்து கொண்ட போது, ஏதோ உறுத்த முன்னே சாய்ந்து என்னவென்று பார்த்தாள்,

நாலாக மடிந்து கிடந்த ஒரு பத்திரிகை.

எடுத்து அதை சர்பன்னி டேபிள் மேல் வைத்தபின் பார்வையைச் சுழற்றினாள்.

பக்கத்து நாற்காலியில் ஒரு தட்டு. மேஜைமேல் காபியோ, எதுவோ ஊற்றி உலர்ந்து போன டம்ளர், டபரா. கூடவே, என்றைக்கோ எப்பவோ வைத்து துடைக்காமல் விட்டதால் வட்டம் வட்டமாக டேபிள் பூராவும் காணப்பட்ட டிசைன்கள்.

கார்பெட்டில் விளையாட்டு சாமான்கள் வாரி இறைந்திருந்தன.

பேப்பர்கள் பிரிந்து ஜன்னல் மேல், டீபாய் மேல் படபடத்தன.

காயத்ரி ஒருவித அதிர்ச்சியுடன் தலையை மேலே தூக்கினாள்.

விட்டத்திலிருந்து ஆங்காங்கு ஒட்டடை தொங்கின.

ஊன்றிப் பார்க்கும்போது திரைச் சீலைகள் அழுக்காய் இருப்பதும், தரையில் ஓரங்களில் தூசியும், பிசுக்கும் மண்டி இருப்பதும் புரிந்தன.

மொத்தத்தில் வீடே தந்தர கோணமாய் இருப்பதை உணர முடிய, சாரு ஏன் வீட்டை இத்தனை ஊழலாக வைத்துக் கொண்டிருக்கிறாள் என்ற நினைப்பில் லேசாய் புருவம் உயர்ந்தது.

ஆபீஸுக்கு புருஷனையும், பள்ளிக்குப் பிள்ளைகளையும், அனுப்பின பிறகு கொஞ்சம் அக்கறையுடன் ஒழிக்கக் கூடாதா?

கிட்ட நின்று வேலைக்காரியை வேலை வாங்கக் கூடாதா?

என்னதான் இயலாமை இருந்தாலும் அடிப்படை சுத்தத்தைக் கடைப்பிடிப்பது கூடவா கஷ்டம்?

சுதாவுக்கு அழுக்கு, அசுத்தம் எல்லாம் பிடிக்காது... என்பது காயத்ரிக்கு ஞாபகம் வந்தது.

சட்டென்று வெளியில் கண்டபடி சாப்பிட மாட்டான். 'எந்தச் சூழ்நிலையில், எந்த எண்ணெய், தண்ணீர் உபயோகித்து செய்ததோ, வேண்டாம்' என்பான். கை கழுவாமல் எதையும் தொட்டுகூட பார்க்க மாட்டான். இரண்டு வேளை குளித்து, எப்போதும் ட்ரிம்மாக இருப்பான். பத்து நாட்களுக்கு ஒருமுறை நகம் வெட்டுவான். மாசா மாசம் தப்பாமல் க்ராப் செய்து கொண்டு, எந்த நேரத்திலும் துடைத்துவிட்ட மாதிரி ஜோராய் இருப்பான்.

அவனா இப்படி பெண்டாட்டி வீட்டை வைத்துக் கொள்ள அனுமதிக்கிறான்?

சாருவையும், முன்பு பார்த்திருந்த வீட்டையும் நினைத்துப் பார்க்கையில், அந்த சாருவா இப்படி அசமந்தமாக இருக்கிறாள் என்று நம்புவது கஷ்டமாக இருந்தது.

பளபளவென்று மின்னின மொஸைக்.

ப்ரஷ் செய்யப்பட்ட சுத்தமான கார்பெட்.



நேர்விசாய் கோணல்மாணல் இல்லாமல் சோபா நாற்காலிகள்.

பூ ஜாடியில் அன்று மலர்ந்த செப்பு விருட்சி கொத்துக்கள். கூடவே நாலைந்து பச்சை இலைகள், அழகை கூட்டிக் காட்ட....

மெல்லியதாய் காற்றில் கலந்திருந்த ஊதுபத்தி மணம்.

அத்தனைக்கும் மேலாய், பளிச்சென்று உடை உடுத்தி, முகமெல்லாம் சிரிப்பாய் நின்ற சாரு.

அவளா இப்படி மாறி விட்டாள்?

திடுமென்று உள்ளே இருந்து இது நாழிகை முணுமுணு வென்று கேட்ட குரல்கள் பெரியதாக ஒலித்தன.

"மணி எழரை. இன்னும் எழுந்திருக்க மாட்டேன்னா எப்படி?"

"மா...ட்...டேன்...போ..."

"ஸ்கூல் பஸ் வந்திடும்."

"நான் ஸ்கூலுக்குப் போ போறதில்லே..."

"அப்பா திட்டப் போறார்..."

"திட்டட்டும்..."

"இப்ப நீ எழுந்திருக்கப் போறயா இல்லியா?"

"மாட்...டேன்..."

சாருவும், பெண்ணுமா?

எழுந்திருக்க மாட்டேன் என்று அடம் பண்ணும் பெண்ணுடன் சாரு மன்றாடுகிறாளா?

"உங்கப்பா வந்தா என் மண்டையதான் போட்டு உருட்டுவார். எழுந்திரு..."

குரல் கடுமையாக ஒலிக்க...

''அ... அம்மா... ஆ...... மாட்டேன்...போ'' என்று அழுகையுடன் குழந்தை கத்தியது.

என்ன செய்கிறாள்? பலவந்தமாய் எழுப்பி உட்கார வைக்கிறாளா?

அரை நிமிஷத்தில் அழுகை பலமானது.

''இந்தா ப்ரஷ்; போய் தேச்சிட்டு வா...ம்''

''விடு...என் கைய விடு...ஆ...ஐயோ...வலிக்கிறதே... விடு...''

''தினம் உன்னோட இது ஒரு ரோதனையா போச்சு... சனியன்...''

''நீதான் சனியன்...''

''வாயப்பாரு...பாட்டி வாய்...''

''உனக்குத்தான் பாட்டிவாய்......ஆ......அம்மா..... ஆ......''

கத்தியபடி ஒரு சின்ன பெண் அறையை விட்டு வெளியே கூடத்துக்கு ஓடிவந்தாள்.

சட்டி, ஷிம்மிஸ். அவிழ்ந்து, கலைந்த தலைமுடி...

ஐந்து வயசு இருக்கக்கூடிய அந்தப் பெண்ணைத் தொடர்ந்து, ஒரு பெண்மணி வெளிப்பட்டாள்.

நாற்பது, நாற்பத்தைந்து வயசு இருக்கலாம். பழைய நூல் புடைவை, கோடாலி முடிச்சு, கை, கழுத்தில் வெறுமை, நெற்றியில் விபூதி.

குழந்தை சுதாகரின் பெண் என்பதை காயத்ரியால் ஊகிக்க முடிந்தது.



அந்தப் பெண்மணி?

''எனக்கு இன்னும் ஒரு வேலை ஆகலை, சமையல், டிபன்னு அத்தனையும் இருக்கு...காலா காலத்துலே எழுந்து, பல் தேய்ச்சி, பால் சாப்பிடாம, என்ன அடம்? வந்துத் தொலைக்கப் போறயா இல்லையா?''

'ஓ'. சமயல் வேலை செய்பவரா?

''பல் தேக்க மாட்டேன்... பால் சாப்பிட மாட்டேன்...நீ போ. அ...அம்மா ஆ...''

அழுது அடம் பிடிப்பவளை, அந்த அம்மாள் எட்டிப் பிடித்து இழுக்க, கத்தல் அதிகமாக, ''என்ன அங்க கலாட்டா?'' என்று மாடியிலிருந்து எரிச்சலுடன் ஒரு ஆண் குரல் கேட்டது.

தொடர்ந்து தடதடவென்று வேகமாக இறங்கி வந்தவனைப் பார்த்த கணத்தில் காயத்ரிக்கு இருதயத் துடிப்பு நின்று மறுபடி தொடர்ந்தது.

சுதா...
சுதாவா...இது?
கறுத்து. இளைத்து...

கண்களடியில் கருவளையமும், அழுக்கு வேட்டி, பனியனுமாய் நிற்பது சுதாவா?

''என்ன சத்தம் இங்க, ம்?''

''வேற என்ன; உங்க பொண்ணோட அடமும், அழுகையும் தான்...''

''அப்பா, மாமி அடிக்கறாப்பா, கிள்ளறாப்பா...''

''பொய்யப்பாரு...நான் எங்கடீ உன்னை தொட்டேன்?''

"சரி...சரி...தினம் கால வேளைல இது என்ன அமர்க்களம்?"

"எனக்கு கணக்குப் பார்த்து அனுப்பிடுங்கோ... இவனாலே ஒரு நாளைப்போல நான் திட்டு வாங்க றேன்...எனக்கு சரிபடாது..."

"இருங்கோ மாமி...துக்குணா கணக்குப் பாருனு பிடிவாதம் பண்ணா எப்படி? ஏய்...மது வா...இங்க... என்ன கலாட்டா தினமும்! ஒழுங்கா எழுந்து பால் குடிச்சு...ஸ்கூலுக்கு கிளப்பாம அடமா பண்றே...வா இங்க...உன்னை..."

கோபத்துடன் மகனை கிட்டத்தில் இழுத்து ஒரு அறை விட, அவன் ஹாவென்று அலற, நீங்கள் ஆயிற்று, உங்கள் பெண் ஆயிற்று என்று மாமி உள்ளே போய்விட, அழும் மகனை வேதனையுடன் பார்த்து, பரிதவித்து "ஸாரிடா ஸாரி மது...ஏதோ கோவம்டா...வலிக்கறதா... ஸாரிம்மா..." என்று வேகமாய் பேசி, சமாதானம் செய்து அங்கேயே மண்டியிட்டு அமர்ந்து அவனை சுதாகர் இறுக அணைத்துக் கொள்ள...

காயத்ரி ஸ்தம்பித்து உட்கார்ந்திருந்தாள்.
என்ன நடக்கிறது இந்த வீட்டில்?
இவர்களுக்கு எல்லாம் என்ன ஆயிற்று?

இனியும் இத்தனையும் பார்த்தபடி சும்மா உட்கார்ந் திருப்பது தவறு என்று தோன்ற, காயத்ரி மெதுவாக எழுந்து நின்றாள்.

"சுதா..."

மெல்லிய குரலில் அவள் அழைக்க, சுதாகர் சட்டென்று தலை நிமிர்ந்தான்.

விசும்பும் பெண்ணை வாரி அணைத்து தூக்கியபடி எழுந்து கிட்டத்தில் வந்தான்.



தலையிய கண்களில் எக்கச்சக்க பரபரப்பு...

அழுத்த பார்த்து இவளை புரிந்து கொண்டதும்...ஓ... காட்...ஓ...காட் என்று முனகி, கால்களை இடுமென்று தொய்ந்து விட்ட நிருதில் சோபாவில் பெண்ணுடன் சரிந்தான்.

"நா...நான் இங்லாண்ட்லேந்து வந்து ஒரு வார மாச்சு சுதா...உன்னை உங்களை...இன்னிக்கு...வந்து" சோர்வையாய் பேச முடியாது தவித்தவன் இறுக்கத்தை தளர்த்தும் உத்தேசத்துடன், "மெனி ஹாப்பி ரிடர்ன்ஸ் ஆஃப் த டே சுதா... சாரு... எங்கே... கூப்பிடு...நான் வாழ்த்தணும்" என்று கூற, காயத்ரி, காயத்ரி என்று அரற்றி மகளை இறுக அணைத்துக் கொள்ள, சுதாகரின் கண்களிலிருந்து பெருகிய கண்ணீர் கன்னத்தில் கோடு போட்டுக் கொண்டு இறங்கி, பனியனில் தெறித்தது.

## காயத்ரி-4

கூடம் ரொம்ப நிசப்தமாயிருந்தது.

எங்கோ யாரோ தினமாய் ஒருதரம் இருமும் சப்தம்.

உள்ளுக்குள் கரண்டி ஒன்று கீழே விழுந்து ஜிங்கிட் என்று ஓசை எழுப்பியது.

ஜன்னலில் உட்கார்ந்திருந்த குருவி டாச் டாச் என்று கத்திவிட்டுப் பறந்து போனது.

காயத்ரி அதிர்ந்து போயிருந்தாள்.

வயிற்றில் சட்டென்று அமிலம் அதிகமாய் கொப்பளித்தது.

காதோரத்தில் வியர்வை துளிர்த்து வழிந்தது.

கண்கள் மசமசத்தன.

குனிந்து இரண்டு விரல்களால் கண்களை அழுத்தி மூடிக் கொண்டாள்.

நிஜமா?

சுதா சொன்னது அத்தனையும் நிஜம்தானா?

ஏன்?

ஐயோ, கடவுளே, ஏன்?



அந்த சாரு செய்த பாவம் என்ன இப்படி அகாலமாய் போக?

வாட் அபௌட் சுதா?

முகமும், கண்ணும் என்னேரமும் சிரிக்க, சின்ன பையனாய் வளைய வந்த சுதா இன்று இப்படி அடிபட்டு சிதைந்து போக வேண்டிய அவசியம் என்ன?

என்னவென்று சொல்லுவேன்?

எப்படி சுதாவைத் தேற்றுவேன்?

கடவுளே......கடவுளே......

எதுவும் புரியாமல் பிரமையுடன் அமர்ந்திருந்தவளின் காதுகளில் விடாது ஒலித்த ஹாரன் சப்தம் விழ, கண்களைத் திறந்தாள்.

டாக்ஸிக்காரர் ஓசை கொடுத்து நாழிகையாகி விட்டதைத் தெரிவிக்கிறார்; கிளம்ப வேண்டும்.

இப்போது நிதானமாக, சரியான வார்த்தைகளைத் தேடிப் பிடித்து சுதாவிடம் அனுதாபத்தைத் தெரிவிப்பது என்பது இயலாத காரியம்.

புறப்பட்டுவிடலாம். அப்புறமாய், சாயங்காலமோ இல்லை நாளைக்கோ சுதா கொஞ்சம் நிதானத்துக்கு வந்து, நானும் நிலைமையை சரிவர உணர்ந்து யோசனை பண்ண பிறகு திரும்ப சந்திக்கலாம்.

யோசனையுடன் காயத்ரி தலை நிமிர, உள்ளேயிருந்து சமையல்கார அம்மா எட்டிப் பார்த்தாள்.

''நாழிகையாகலையா? மணி எட்டு...இன்னும் மது பல்தேச்சு, பால்கூட குடிக்கலை. பஸ் வந்திடுத்துன்னா, ''ஏன் மாமி அவனை தயார் பண்ணலை'ன்னு என்னை கோச்சுக்காதீங்கோ...''

மகனை மார்போடு அணைத்து, தோட்டத்தை வெறித்தபடி அமர்ந்திருந்த சுதாகர், சற்றே முன்னால் சாய்ந்தான். கலைந்திருந்த தலைமுடியை கோதிவிட்டுக் கொண்டான்.

காயத்ரியை ஏறிட்டான்.

"வேற எதைப்பத்தியோ பேசிண்டு இருக்கறதுல, முக்கியமான இன்னொண்ணை உன்கிட்ட சொல்ல மறந்திட்டேன். காயத்ரி, இதான் என் ஒரே பெண் மாதவி, மதுகுட்டி. எங்க இப்படித் திரும்பி ஆன்டிக்கு ஹலோ சொல்லு...இது யார் தெரியுமாடா? அப்பாவோட பெஸ்ட் ஸ்நேகிதி...ரொம்ப கெட்டிக்கார ஆன்ட்டி... நன்னா பாடுவா... இங்லாண்ட்லே படிச்சிட்டு வந்திருக்கா... எங்கே, ஸே, ஹலோ டார்லிங்."

மாதவி அப்பாவின் மார்பில் பதித்திருந்த முகத்தைத் திருப்பினாள்.

கண்ணீர் காய்ந்து கன்னம் சொர சொரத்துப் போயிருக்க, சின்ன குரலில் 'ஹல்லோ' என்றாள்.

கிட்டத்திலிருந்து பார்க்கையில் சுதாவின் அச்சாக அவள் பிறந்திருப்பது புரிந்தது.

அதே கண்கள், அதே வளைவு கொண்ட புருவங்கள், மெல்லிய உதடுகள். சற்றே அகன்ற மூக்கு மட்டும்தான் கொஞ்சம் வித்தியாசமாய் இருந்தது.

"ஹலோ மது" என்று பதிலுக்கு விஷ் செய்த காயத்ரி, சூழ்நிலையின் கனத்தைக் குறைக்க வேண்டி, "இங்க வாம்மா...உனக்காக ஆன்ட்டி லண்டன்லேந்து என்ன வாங்கிண்டு வந்திருக்கேன்னு பாக்கறியா?" என்றாள் மெதுவாக.

மது அப்பாவைப் பார்த்தாள்.



"போடா நம்ம ஆன்ட்டிதான்"

அப்பாவின் பிடியிலிருந்து விடுபட்டு மாதவி மெள்ள காயத்ரியிடம் வந்தாள். பிளாஸ்டிக் பையிலிருந்து எடுத்து நீட்டிய எலக்ட்ரானிக் ரயில் பொம்மை, சாக்லெட் டப்பாக்களை வாங்கிக் கொண்டாள்.

"எல்லாம் எனக்கா ஆன்ட்டி."

"உனக்குதான்; பிடிச்சிருக்கா?"

"ஆன்ட்டிக்கு என்ன சொல்லணும் மது?"

"தாங்க்ஸ் ஆன்ட்டி..."

வெட்கத்துடன் பேசிய மாதவி, அப்பாவிடம் ஒட்டிக் கொள்ள, அதை வாசலிலேயே நின்று அத்தனையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த மாமி "நாழி ஆச்சு" என்றாள் உரக்க.

"இதோ அனுப்பறேன்...மது...ப்ளீஸ்டா போ... ராஜா..."

மாதவியின் முகத்தில் பழைய பிடிவாதம் ஏறி உட்கார்ந்து கொண்டது.

"மாட்டேன்...ஸ்கூல் வேண்டாம்...நா போ மாட்டேன்."

"ஏன்டா ராஜா? நன்னா படிச்சாதானே நாளைக்கு இந்த ஆன்ட்டி மாதிரி லண்டனுக்குப் போகலாம்."

"லண்டனுக்குப் போ வேண்டாம். எனக்கு ஸ்கூல் பிடிக்கலை, டீச்சர் அடிக்கறா...அப்பா...நா ஸ்கூலுக்குப் போ மாட்டேன்...போ மாட்டேன்..."

அடங்கி இருந்த அழுகை மீண்டும் பிரவகித்தது.

"ஓ. கே...ஓ. கே. நீ ஸ்கூலுக்குப் போகவேண்டாம்... உள்ளே போய் பல்தேய்ச்சு பால் மட்டும் குடிச்சிட்டு வந்துடு..."

எழுந்த வேகத்திலேயே அழுகை அடங்கியது.

''நிஜமா?''

''நிஜமா''

''காட் பிராமிஸ்?''

''காட் ப்ராமிஸ்''

காயத்ரி கொண்டுவந்த சாமான்களை மேஜைமேல் வைத்துவிட்டு, ஓட்டமாய் மாதவி உள்ளே ஓடினாள்.

சுதாகர் நீளமாய் பெருமூச்சுவிட்டான். நான் என்ன செய்வேன். என்கிற தினுசில் தோளைக்குலுக்கி, தலையை அசைத்தான்.

''தினமும் இதே ரகளைதான். விளையாட்டுப் போல ஏழுமாசம் ஓடியாச்சு...இன்னமும் இவளை வழிக்கு கொண்டுவர எனக்குத் தெரியலை...இவ அடம் ஜாஸ்தியானா, கோபம் மட்டும் வந்துடறது. கை நீட்டி அடிச்சுடறேன். தென் ஐ ஹேட் மை செல்ஃப் நா...நா...''

மேற்கொண்டு எதும் பேசத் தெரியாத விதத்தில், கைகளில் முகத்தை சுதாகர் பதித்துக்கொள்ள காயத்ரியின் விழி விளிம்புகளில் ஜல முத்துகள் உற்பத்தி ஆயின.

உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

கர்ச்சிப்பினால் அவசரமாய் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

வாசலில் மீண்டும் டாக்ஸியின் ஹாரன் சப்தம் கேட்டது.

சுதாகருக்கு அந்த ஹாரன் ஒலி கேட்டிருக்க வேண்டும்.

புருவங்களை உயர்த்தி, ''யார் அது, வாசல்ல?'' என்றான்.



''நான் வந்த டாக்ஸி, சுதா. அரை மணியிலே வந்திடறேன்னு சொல்லி வெய்டிங்ல இருக்கச் சொல்லி இருந்தேன். நாழியாச்சு...நான் கிளம்பட்டுமா?''

பேசியவளைப் பரிதாபமாக சுதாகர் எதிட்டான்.

''அதுக்குள்ளயா காயத்ரி? ஓ. நோ...ப்ளீஸ் போகாதேயேன். உன்கிட்ட நான் இன்னும் ஒண்ணுமே பேசலை. உன்னைப் பத்தி, இத்தனை வருஷங்களா நீ என்ன பண்ணினேங்கறதைப் பத்தி, எதுவுமே சொல்லலியே...டாக்ஸியை அனுப்பிடலாம். நான் உன்னை ட்ராப் பண்ணறேன்...ப்ளீஸ்...ப்ளீஸ் காயத்ரி.''

அந்த ப்ளீஸையும், அந்தக்குரலையும் தட்டமுடியாமல் காயத்ரி தலை அசைக்க, சுதாகர் வாசலுக்குச் சென்று 'ராமு' என்று குரல் கொடுத்தான்.

வந்து நின்ற அரை நிக்கர் ஆளிடம் ''வாசல்ல நிக்கற டாக்ஸி டிரைவர்கிட்ட எவ்வளவு கொடுக்கணும் கேட்டு, மாடிக்குப் போய் என் டேபிளிலேந்து பணம் எடுத்திட்டு வந்து கொடுத்து போகச் சொல்லு'' என்றான்.

உள்ளே வந்து 'மாமி' என்று அழைத்தான்,

'என்ன?' என்ற சமையல்கார அம்மாளிடம் ''இவா எனக்கு ரொம்ப வேண்டியவர். இன்னிக்கு இங்க என்னோட டிபன் சாப்பிடப் போறார். என்ன டிபன்?'' என்று கேட்டு, அவர் ''இட்லி''என்று சொல்ல, ''டேபிளை துடைச்சு, இரண்டு தட்டு வைச்சுட்டு கூப்பிடுங்கோ'' என்று கூறினான்.

மீண்டும் காயத்ரிக்கு எதிரில் வந்து அமர்ந்து கொண்டான்.

''சொல்லு இப்ப, உன்னைப்பத்தி விவரமா சொல்லு''

''பிரமாதமா ஒண்ணும் இல்லே சுதா. அவிகார் யுனிவர்ஸிடிலே லெக்சரர் ஜாப் எடுத்துண்டு போனேனா,

அங்கே நல்ல பொரிசு கிடைச்சதால, ஆறு மாசத்துக்குள்ள ஆக்ஸ்ஃபோர்ட் யுனிவர்ஸிடிலே பி. எச். டி. பண்ண அட்மிஷன் கிடைச்சது. ஸ்காலர்ஷிப் கொடுத்து கூப்பிட்டா கசக்கறதா? போனேன். மூணரை வருஷத்திலே முடிச்சேன். மான்செஸ்டர்லே ரீஸர்ச் அஸிஸ்டண்ட்டா ஒரு வருஷம் வேலை பார்த்தேன். சொந்த ஊருக்கு வரணும்னு தோணித்து. இங்க சில வேலைகளுக்கு அப்ளை பண்ணினேன். 'ரே பார்மஸூடிகல்ஸ்'- கேள்விப்பட்டிருக்கே இல்லியா? ம், புதுசா ஆரம்பிக்கறானே அதுதான், அதுலே ரிஸர்ச் ஆபிஸர் போஸ்ட் கிடைச்சது. மெட்ராஸ். நல்ல வேலை. சம்பளம் ஒத்துண்டு வந்திட்டேன். அவ்வளவுதான்.''

''தனியா யு. கே. லே. இத்தனை வருஷம் இருக்க உங்கம்மா எப்படி சம்மதிச்சு அனுப்பினா காயத்ரி?''

இது என்ன கேள்வி என்கிற ரீதியில் காயத்ரி சிரித்தாள்.

''அம்மா எப்படி இருக்கா?''

காயத்ரி அடி உதட்டைக் கடித்துக் கொண்டாள். எச்சிலைக் கூட்டி விழுங்கினாள்.

''அம்மா போய் இரண்டு வருஷம் ஆச்சு சுதா?''

''ஹும் ஸாரி...உனக்குனு இருந்தவர் அவர் ஒருத்தர் தான். ம்...அவரும் போயிட்டாரா? ஐம் ரியலி ஸாரி காயத்ரி...இதுகூட எனக்குத் தெரிவிக்கலை பார்த்தியா!''

''......''

இரண்டு நிமிஷங்கள் மௌனமாய் நகர்ந்தன.

''டிபன் ரெடி. வரேளா?'' மாமி வந்து அழைக்க, எழுந்தார்கள்.

டைனிங் ஹாலில் நுழையப் போன சுதாகர் தயங்கினான்.



''என் மாமாவ, சாருவோட அப்பாவ உனக்கு ஞாபகம் இருக்கா? அவரை ஒரு நிமிஷம் பார்க்கலாம் வரியா?''

''அட, நானும் மறந்தே போயிட்டேன். சுதா, சாருவோட பேரன்ஸ் எப்படி இருக்கா? அவாளும் இங்கதான் இருக்காளா?''

''மாமி போய் நாலு வருஷத்துக்கும் மேலேயே ஆச்சு. மாமா ஹார்ட் பேஷண்ட். கண்ணுக்கெதிரே பெண் சுட்டுக் கொல்லப்பட்டு செத்ததைப் பார்த்து ஷாக் ஆகி, பத்துநாள் பிரமை பிடிச்சாப்பல இருந்தார். அப்புறம் ஒரு பக்கமா ப்ராலிஸிஸ் வந்து, இப்ப படுத்த படுக்கையா தான் இருக்கார்...''

காயத்ரி சுவரில் சாய்ந்து தன்னை நிதானப்படுத்திக் கொண்டாள்.

எதை நினைத்து அதிர்வது. எந்த இழப்பை நினைத்து வருந்துவது!

''இப்படி வா.''

மாடிக்குச் சென்றார்கள்.

காற்றோட்டமான முன்அறையில் மாமா ஈஸி சேரில் உட்கார்ந்திருந்தார். கூடவே ஒரு ஆள்.

''என்கூட படிச்ச காயத்ரி, அடையாளம் புரியறதா மாமா? லண்டன்ல டாக்டரேட் வாங்கிட்டு, போன வாரம் வந்து இங்க ரே பார்மஸூடிகல்ஸ்ல சேர்ந்திருக்கா.''

மாமா கஷ்டப்பட்டு புன்னகைத்தார்.

எச்சில் சொட்ட கோணிக் கோணிப் போன வாயால் என்னமோ சொல்ல முயற்சித்தார்.

ஸ்வாதீனமுள்ள கையைத் தூக்கி சாப்பிட பாவனை செய்தார்; மகளின் நினைப்பு வந்து கண் கலங்கினார்.

ஐந்து நிமிஷங்கள் போல நின்று பேசிவிட்டு ''டிபன் சாப்பிட்டதும் இவளைக் கொண்டு விட்டுட்டு ஆபீஸ் போறேன்'' என்று சொல்லி, காயத்ரி பின்தொடர சுதாகர் கீழே வந்தான்.

சாப்பாட்டு அறையும் மஹா கஜமுலாகத்தான் இருந்தது.

ஒரு பக்கமாய் மளிகை சாமான்கள் நிறைந்து கிடந்த டப்பாக்கள் இன்னும் என்னென்னமோ...

''ஸ்டோர் ரூம்ல வைக்க வேண்டியதை இங்க பரத்தா நீங்கோ மாமி...''

''நேத்திக்குதான் மளிகை சாமான்கள் வந்தது; புடைச்சு உள்ளே வைக்கணும்.''

பெண் இல்லாத வீடு என்பது துல்லியமாய் புரிய, வேதனையை அடக்கிக் கொண்டு காயத்ரி சாப்பிட்டாள். காபி குடித்ததும் ஹாலுக்கு வந்தார்கள்.

''உடனே புறப்படணுமா காயத்ரி?''

''ஆமா சுதா...வேலை இருக்கு...திரும்ப பார்க்காமலா போயிடறப் போறோம்.''

''நீ அந்த முடிவோட இருந்தாலும் நான் விடறதா இல்லை. ஆமா, பாட்டை வைச்சுண்டு இருக்கியா?''

''கொஞ்சம் கொஞ்சம்.''

''நீ பாடி நான் கேட்கணும். எத்தனை வருஷமாச்சு...''

அவளை அங்கே உட்காரச் சொல்லிவிட்டு சுதாகர் மாடிக்குப் போய் உடை மாற்றிக் கொண்டு வந்தான். பெண்ணையும் கூட்டிக் கொண்டு, காரில் காயத்ரியை வேளச்சேரிக்கு அழைத்துச் சென்றான்.



இறங்கு முன் அவளுக்காக தான் வாங்கி வந்த காக்கு லெட்டரை எடுத்து காயத்ரி நீட்டினாள்.

''எதுக்கு காயத்ரி இதெல்லாம்!''

பதில் கூறாமல் புன்னகைத்த காயத்ரி ''அப்புறம் மீட் பண்ணலாம் சுதா—பை மதுக்குட்டி'' என்று மட்டும் சன்ன குரலில் சொல்லி கதவைத் திறந்து கொண்டு இறங்கினாள்.

# காயத்ரி-5

ரயில் டுட்டுவாட் என்ற குரல் எடுத்து கத்தியது. இடது பக்கம் திரும்பியது. பிரேக் போட்டது. வலது பக்கம் வளைந்து ஓடியது. ரிவர்ஸில் நகர்ந்தது. திரும்ப ஆனந்தமாய் டுவாட் என்று கத்திக் கொண்ட கிளம்பியது.

கையில் ரிமோட் கண்ட்ரோலை வைத்துக் கொண்டு அதை இஷ்டப்படி இயக்கின மாதவிக்கு குஷியான குஷி.

"இங்க பாருங்கோ ஆண்ட்டி...இது லெஃப்டுல திரும்பறது..."

"இப்ப நிறுத்திடப் போறேன்..."

"ம்ம்...அப்படித்தான்...சமத்தா பின்னால வா..."

"ஆண்ட்டி...வண்டி டெல்லிக்குப் போகப் போறது. நீங்களும் வறேளா?"

பக்கத்தில் அமர்ந்து அந்தக் குழந்தையின் பரவசத்தை ரசித்துக் கொண்டிருந்த காயத்ரி சின்ன சிரிப்புடன் "வரேன்" என்றாள்.

"டிக்கெட் வாங்கிக்கோங்கோ...சீக்கிரம்... புறப் படப்போறது...பணம் குடுங்கோ..."



அருகில் கிடந்த நியூஸ் பேப்பரை துளி கிழித்து "இந்தா" என்று காயத்ரி கூற, அதே பேப்பரை இன்னும் கொஞ்சம் கிழித்து "இந்தாங்கோ டிக்கெட்" என்றாள் மாதவி.

"ரெடியா? புறப்படலாமா?"

"ஓ யெஸ், நான் ரெடி..."

"கார்ட் பச்சைக் கொடி காட்டிட்டார்...கிளம்பி யாச்சு..."

வெள்ளை பட்டனை அமுக்க, ரயில் டுட் டுட் என்று இரண்டு தரம் கத்திவிட்டு வேகமாகக் கிளம்பி சுற்றி வந்தது.

மூன்றாவது ரவுண்டில் அதை நிறுத்தி "டெல்லி வந்தாச்சு. இறங்கிக்கோங்கோ" என்று கூற காயத்ரி வாய்விட்டுச் சிரித்தாள்.

"பிரயாணம் ஏ ஒன்னால். கொஞ்சம் கூட டயர்டா இல்லே...தாங்க்ஸ்..." என்றவள் "மது—ரயில் விளையாட்டு போதும்மா. வாயேன், வாசலுக்குப் போகலாம்" என்று அழைக்க, கவனம் ரயிலிலேயே இருக்க, 'எதுக்கு ஆண்ட்டி' என்றாள் மாதவி.

"சும்மா...அப்பா வர வரைக்கும் வாச லான்ல உலாத்திண்டு இருக்கலாம். காத்து ஜோரா வீசறது... வாம்மா...ப்ளீஸ்..."

அவளுடன் பழகும் இந்த ஒரு மாசமாய் அதட்டலுக்கு பணிய மறுத்து, ப்ளீஸ் என்றால் உருகி விடும் ஸ்வபாவத்தை நன்கு புரிந்து கொண்டிருப்பதால் கையைப் பற்றி 'ப்ளீஸ் மது' என்றாள் திரும்ப.

மாதவி கண்ட்ரோல் பெட்டியை கீழே வைத்தாள். காயத்ரியின் கையைப் பிடித்துக் கொண்டு எழுந்து நின்றாள்.

இருவரும் வாசலுக்கு வந்தார்கள்.

நாலு வார கால இடைவெளிக்குள் அந்த வீட்டில் உண்டாகி இருந்த சின்னச் சின்ன மாற்றங்களை காயத்ரியால் நன்றாகப் புரிந்து கொள்ள முடிந்தது.

பெருக்கப்பட்டு, தண்ணீர் விடப்பட்ட தோட்டம்.

டபரா, டம்ளர், பத்திரிகை வாரி இறையாத அறைகள்.

அழுகை, கத்தல் ஓரளவுக்கு குறைந்த மாதவி.

ஷேவ் செய்யாத முகம், சிடுசிடுப்பு பேச்சு அறவே மறைந்து விட்ட சுதாகர்.

இந்த ஒரு மாசத்தில் நித்தமும் இல்லாவிட்டாலும், முடிந்த போதெல்லாம் மாலை வேளைகளில் இங்கு வர காயத்ரி பழகி விட்டாள்.

இன்ன நேரத்துக்கு வருவாள் என்று இல்லை, வேலையைப் பொறுத்து ஐந்துக்கும் வருவாள், இல்லை எட்டுக்கும் படி ஏறுவாள்.

டாக்ஸியில் வருபவள், தப்பாமல் மாதவிக்காக என்று சாக்லெட்.. காமிக்ஸ், ஸ்னேக் அண்ட் தி லாடர் விளையாட்டு என்று எதையாவது வாங்கி வருவாள். சுதாகர், மாதவி, இவள் மூன்று பேருமாய் சேர்ந்து வீட்டிலேயே பேசி, விளையாடி சாப்பிடுவார்கள். இல்லையென்றால் பீச்சுக்குப் போய் தண்ணீரில் அளைந்த பின் வரும் வழியில் ட்ரைவ் இன்னில் சாப்பிட்டு இவளை கெஸ்ட் ஹவுஸில் இறக்கிவிட்டு அவர்கள் வீடு திரும்புவார்கள்.

ஓரளவுக்கு மாதவியை நெருங்க முடிந்ததும் பக்குவமாய் நல்ல வார்த்தைகளைச் சொல்லி அவளை வழிக்குக் கொண்டு வர காயத்ரி முயற்சிக்கத் தொடங்கினாள்.



சாப்பிட மறுப்பவளை, காமிக்ஸ் கதை படித்துக் காட்டி சாப்பிட வைத்து சட்டென்று கோபம் வந்து அழ முற்படுபவளை விளையாட்டுக் காட்டி மனசை மாற்றி என்று துளி துளியாய் மாதவியைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதை சமயம் கிடைத்தபோதெல்லாம் சொல்லி மகிழ சுதாகர் தவறுவதில்லை.

முதல் நாள் மாலையில்கூட மாதவி கிட்டத்தில் இல்லாத நிமிஷத்தில் இது விஷயமாய் சுதாகர் அவளிடம் பேசவே செய்தான்.

"மதுகிட்ட உண்டாகியிருக்கற சேஞ்ஜைப் பார்த்தா நம்பறதுகூட கஷ்டமா இருக்கு. சமர்த்தா சாப்பிடறா... கேட்ட கேள்விக்கு ஒழுங்கா பதில் சொல்றா. அடம், கத்தல் இல்லாமல் இருக்கா... எல்லாம் சரி; ஆனா, ஸ்கூலுக்கு போறதுனா மட்டும் இன்னும் பெரிய ரகளை தான். சாயங்காலம் வர்ற மாதிரி, நீ கார்த்தாலயும் வர முடிஞ்சா ரொம்ப நன்னா இருக்கும்னே தோணறது. ஐம் ஸாரி, செல்...பிஷா பேசறேன்னு நினைக்காதே. தினமும் கார்த்தால மாமி, இவ சண்டையை தீர்த்து ஸ்கூலுக்கு தயார் பண்ணறதுக்குள்ள போதும் போதும்னு ஆயிடறது. பொறுமை போய் கோபம் வந்து இன்னிக்குக் கூட அடிச்சிட்டேன்... வாட் கேன் ஐ டூ? ஒண்ணும் புரியலை காயத்ரி..."

அப்போது பதில் சொல்லாமல் இருந்த காயத்ரி இரவு தனக்குத்தானே யோசனை பண்ணியவளாய் இன்றைக்கு வேலைகளை சீக்கிரமாய் முடித்து நாலு மணிக்கெல்லாம் சுதாகரின் வீட்டுக்கு வந்திருக்கிறாள்.

சமையல்கார மாமியுடன் எதற்காகவோ சண்டை போட்டுவிட்டு சோபாவில் சட்டி முகத்துடன் படுத்திருந்த மாதவி இவளைக் கண்டதும் தலையைத் தூக்கினாள்.

"ஹை—ஆன்ட்டி..."

கோபத்தை மறந்து, எழுந்து ஓடி வந்து கட்டிக் கொண்டவளின் யூனிஃபார்ம், உடம்பில் ஏக அழுக்கு, கண்களில் சிகப்பு. கன்னத்தில் காய்ந்த கண்ணீரின் சொரசொரப்பு.

குரல் கேட்டு மாமி எட்டிப் பார்த்தாள்.

''நீங்களா? நல்ல நேரத்துக்கு வந்தேள். மதியானம் சாப்பாடு அனுப்பினா ஆளோட இவ வீட்டுக்குவந்துட்டா. அப்புறம் ஸ்கூலுக்குப் போகலை. சாப்பாடும் சாப்பிடலை, கேட்டா வாள்ளு கத்தறா...''

காயத்ரி எதுவும் பேசாமல் மாதவியைப் பார்க்க, அவள் தலையைக் குனிந்து கொண்டு நின்றாள்.

''ஏம்மா சாப்பிடலை''

''எனக்குப் பசிக்கலை...''

''பசிக்காம எப்படிம்மா இருக்கும்? ம்?...ஆன்ட்டி சாப்பாடு போடட்டுமா? சாப்பிடறியா?''

''ம்ஹூம், மாட்டேன்''

''எனக்குப் பசிக்கறது மது... நீ சாப்பிட்டா நானும் சாப்பிடறேன். இல்லாட்டா வேண்டாம்...''

மாதவி கண்களை உயர்த்தி அவளைப் பார்க்க, காயத்ரி இதமாய் புன்னகைத்தாள்.

''சரி, சாப்பாடு வேண்டாம். டிபன் சாப்பிடலாமா? ப்ளீஸ் மது...ப்ளீஸ்...''

அவள் பேசாமல் இருக்க, காயத்ரி மாமி பக்கம் திரும்பினாள்.

''டிபன் ஏதாவது இருக்கா மாமி?''

''தோசை மாவு இருக்கு''



''தோசையும், பாலும் கொண்டு வரோனா?''

''உங்களுக்கு?''

''காபி மட்டும் போதும்''

''இல்லே, நீங்க தோசை சாப்பிட்டாதான் நானும் சாப்பிடுவேன்.''

''ஓ. கே...மாமி எனக்கும் தட்டு வைச்சிட்டு கூப்பிடுங்கோ...''

ஐந்து நிமிஷத்தில் மாமி அழைக்க, மாதவியுடன் உள்ளே போய் ஒரு காமிக்ஸ் படித்துக் காட்டிக் கொண்டே அவளைச் சாப்பிட வைத்து, தானும் சாப்பிட்டாள்.

கூடத்துக்கு வந்து கொஞ்ச நேரம் ரயிலை ஓட்டி விளையாடிய பின் அவளுடன் பேச எண்ணி வாசலுக்கு அழைத்துக் கொண்டு வந்திருக்கிறாள்.

ஐந்து மணி வெயில் உடம்புக்கு இதமாக இருந்தது.

மஞ்சளாய் இரண்டு பட்டாம் பூச்சிகள் பறந்தன.

ஓரமாய் ஒரு ஓணான் உட்கார்ந்து மார்பைத்தழைத்து நிமிர்த்திக் கொண்டிருந்தது.

''அது என்ன பண்றது ஆண்ட்டி?''

''எது?''

''அந்த ஓணான்''

''அதுவா? ம்ம்ம்...அந்த மாதிரி செய்யறது அதோட ஸ்வபாவம் மது.''

''ஸ்வபாவம்னா?''

''குணம்''

''குணம்னா...''

காயத்ரி ஒரு நொடி யோசித்தாள்.

''ஒணான் தெம்பா இருக்க எக்ஸர்ஸைஸ் பண்ணறது மது...''

''ஓ!''

''நாம எல்லாம் கேம்ஸ் விளையாடறதில்லியா, அது மாதிரிதான் இதுவும்...''

''அப்ப, அணில், குருவி இதெல்லாம் ஏன் எக்ஸர்ஸைஸ் பண்ணறதில்லே?''

காயத்ரி கொஞ்சம் விழித்தாள். பின், சிரிப்புடன் சமாளித்தாள்.

''அணில் வேகமா இங்கயும் அங்கயும் ஓடறது. கிளைல தாவறது. குருவி உசரத்திலே பறக்கறது. இதெல்லாமே எக்ஸர்ஸைஸ் தானே! இந்த ஒணான் கொஞ்சம் அசமஞ்சம். நிதானமான பிராணி. அதனால நின்ன இடத்திலேந்தே பயிற்சி பண்ணறது...''

''ஓ?''

காயத்ரியின் விளக்கம் சரியானதாகத் தோன்ற மாதவி புல்லில் சில நிமிஷங்களுக்கு ஸ்கிப் செய்தாள். காயத்ரியைச் சுற்றி சுற்றி ஓடி வந்தாள். சட்டென்று நின்றாள். கிட்டத்தில் வந்து இடுப்பை அணைத்துக் கொண்டு பேசினாள்.

''ஆண்ட்டி...உங்களை எனக்கு ஏன் பிடிக்கறது தெரியுமா, நீங்க பாக்கி எல்லார் மாதிரியும் சிடுசிடுங்காம அழகா பேசறேள். அதான் அப்பாகிட்ட, இல்ல, மாமி கிட்ட ஏதாவது கேட்டா, 'சும்மா தொண தொணங் காதே'ன்னு வைவா...ஏன் ஆண்ட்டி, நான் தொண தொணக்கறேனா?''

''சீச்சீ. நீ ரொம்ப புத்திசாலியாச்சே...மது...''

''நிஜமாவா?''



''நிஜமா?''

''காட் ப்ராமிஸ்?''

''காட் ப்ராமிஸ்''

மாதவியின் அணைப்பு இறுகியது.

''எனக்கு உங்களை ரொம்ம்ப பிடிக்கறது ஆண்ட்டி...எங்கம்மா கூட இப்படித்தான் நான் கேக்கறத் துக்கெல்லாம் நன்னா பதில் சொல்லுவா ... வையலே மாட்டா...''

காயத்ரி மண்டி இட்டு அமர்ந்து கொண்டாள். மாதவியை மடியில் உட்கார வைத்துக் கொண்டாள்.

''மதும்மா...''

''என்ன ஆண்ட்டி?''

''உனக்கு ஆண்ட்டியை நிஜமா ரொம்ப பிடிச்சிருக்கா!''

''நிஜம்மா''

''காட் ப்ராமிஸ்?''

''காட் ப்ராமிஸ்''

அவள் வழியிலேயே காயத்ரி பேசவும் மாதவி சந்தோஷத்தோடு கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

''அப்ப ஆண்ட்டி கேக்கறத்துக்குச் சரியா பதில் சொல்லுவியா?''

''ம்''

''ஏம்மா, ஸ்கூலுக்கு ஒழுங்கா போக மாட்டேங்கறே? ...இன்னிக்கு கூட மத்தியானம் ஏன் வந்துட்டே?''

''.........''

''சொல்லு கண்ணம்மா...ஆண்ட்டியை உனக்குப் பிடிக்கும்னா நீ பதில் சொல்லித்தான் ஆகணும்...''

''வந்து...''

''வந்து''

''எங்க மிஸ்க்கு என்னைக் கண்டாப் பிடிக்கறதே யில்லே...சும்மா சும்மா அடிப்பாங்க...''

''வேணும்னு யாராவது அடிப்பாளாம்மா? நீ என்ன தப்பு பண்ணினே?''

''நான் ஒண்ணுமே பண்ணலை. ரமாவோட புஸ்த கத்தை கிழிச்சிட்டேன்னு மிஸ் திட்டினாங்க...''

''நீ கிழிச்சது நிஜம் தானா?''

''சும்மா புரட்டிப் பார்த்தேன். டர்னு கிழிஞ்சு போச்சு...''

காயத்ரி மாதவியைத் தன் பக்கம் திருப்பினாள்.

''போனாப் போறது...தெரியாம தானே கிழிச்சுட்டே நாளைக்கு புது புஸ்தகம் வாங்கி ரமா கிட்ட கொடுத்துட லாம்...ஓ.கே.?''

''அப்புறம் வந்து ஆண்ட்டி...''

''சொல்லும்மா...''

''ஹோம் வொர்க் பண்ணறதில்லேன்னு மிஸ் தினம் அடிக்கறாங்க''

''நீ ஏன் செய்யாம போறே மது?''

''அப்பா ராத்திரி வரார். மாமிக்கு சொல்லிக் கொடுக்கத் தெரியலை...நான் யார்கிட்ட கத்துக்கறது? எனக்கும் படிக்கவே பிடிக்கலை ஆண்ட்டி...''

கலைந்திருந்த முடியை காயத்ரி கோதி விட்டாள். அன்புடன் பேசினாள்.

''நான் ஹோம் வொர்க் சொல்லிக் கொடுத்தா, நீ கத்துக்கறியா? நாளைலேந்து நான் தினம் வரேன்... சரியா?''

''.........''



''நீ நன்னா படிச்சாதானே அப்பாக்கு சந்தோஷமா இருக்கும் மது?...நாளைக்கு எல்லாரும்! ஹேய்—இந்த மாதவியப்பாரு...இவனுக்கு உடம்பு பூரா 'டானைட்' ஐ மூக்கிலே விரலை வைக்க வேண்டாமா?...என்னம்மா...? ப்ளீஸ்''

''.........''

''இஷ்டமில்லாத சமாசாரத்தை மேற்கொண்டு வற்புறுத்த விரும்பாமல் காயத்ரி அவசரத்துடன் பேச்சை மாற்றினாள்.

''நீ ஜூ பாத்திருக்கியோ மது?''

மாதவி சட்டென்று கலகலத்தாள்.

''ஓ! எங்கம்மாவோட போயிருக்கேனே''

''ஸ்னேக் பார்க்?''

''ம்ஹூம்''

''லைட் ஹவுஸ்?''

''ம்ஹூம்''

''மஹாபலிபுரம்?''

''இல்லே—ஆண்ட்டி. ஆண்ட்டி, என் ப்ரெண்ட் சுரேஷ் போன வாரம் மஹாபலிபுரம் போயிருந்தானாம். பீச்சிலே குளிச்சேன். நிறைய்ய கிளிஞ்சல் பொறுக்கி னேன்னு பீத்திக்கறான். நாமளும் போலாம் ஆண்ட்டி...''

காயத்ரி அவன் முகத்தைக் கையில் ஏந்திக் கொண்டாள்.

''நிச்சயம் போலாம்...வாரா வாரம் ஒரு இடத்துக்குப் போலாம். ஆனா, நீ தினம் சமர்த்தா ஸ்கூலுக்குப் போறேன்; படிக்கறேன்னு சொல்லணும்...அப்பத்தான்...''

மாதவி புருவங்களை நெருக்கி கூர்ந்து பார்த்தாள்.

''நிஜமா கூட்டிண்டு போவேளா?''

''நிஜம்மா?''

''காட் ப்ராமிஸ்?''

''காட் ப்ராமிஸ்''

அந்த வார்த்தைகளில் நம்பிக்கை வர, ''இனிமே படுத்தாம ஸ்கூலுக்குப் போறேன் ஆண்ட்டி'' என்று மாதவி சொன்ன நிமிஷத்தில் சுதாகரின் கார் கேட்டில் நுழைந்தது.

## சுதாகர்-1

காயத்ரி 'பேல்' தயாரிக்கும் மும்முரத்தில் இருந்தாள்.

வேக வைத்திருந்த நாலு உருளைக்கிழங்குகளின் தோலை உரித்து, உதிர்த்து ஒரு பக்கமாய் வைத்தாள்.

பத்து பேரிச்சம்பழம், ஒரு உருண்டை வெல்லம், சிட்டிகை உப்பை தித்திப்பு சட்டினிக்காகவும், நாலு பச்சை மிளகாய், பெரிய கட்டு பச்சை கொத்தமல்லி, சின்ன கட்டு புதினா, எலுமிச்சங்காய் அளவு புளி, உப்பு இலைகளைக் கார சட்னிக்காகவும் தனித்தனியாய் மிக்ஸியில் போட்டு அரைத்தாள்.

இரண்டு பெரிய வெங்காயம், கொத்தமல்லி தழைதளை பொடியாய், நறுக்கினாள்.

முதல் நாள் வாங்கி வந்திருந்த அரிசிப் பொரி, ஓமப் பொடி வகையறாக்கள் மொறு மொறுப்பாக இருக்கின்றனவா என்று வாயில் போட்டுப் பார்த்தாள்.

ஒரு கப் மைதா மாவில் துளி உப்பு சேர்த்து, ஜலம் விட்டு கெட்டியாய் பிசைந்து, உள்ளங்கை சைஸில் மெல்லிய அப்பளங்களாய் இட்டு, எண்ணெயில் மொறுமொறுவென்று பொரித்து வைத்தாள்.

'பேலை' போட்டு கலந்து சாப்பிட வாய் அகன்ற கிண்ணங்கள், டேபிள் ஸ்பூன்களை எடுத்து வைத்த நிமிஷத்தில் வாசல் மணி அடித்தது. சுதாகரும், மாதவியும் தான்...

"ஹாய் ஆன்ட்டி...."

ஆறு மாசமாய் பிரிந்திருந்த தாபத்துடன் மாதவ் அவளைத் தாவி அணைத்துக் கொள்ள, காயத்ரியும் குனிந்து அவனை முத்தமிட்டு 'ஹலோ மது குட்டி' என்றாள்.

இந்த காட்சியை ரசிக்கும் நினைவில் ஒரு புன்னகையுடன் உள்ளே வந்த சுதாகர், டைனிங் டேபிள் மேல் பரத்தி இருந்த சாப்பாட்டுப் பொருட்களைக் கண்டு சின்னதாய் விசில் அடித்தான்.

"இன்னிக்கு என்ன விசேஷம்? ரொம்ப அமர்க்களப் படறது!"

"முத்தா நான் ஃபைனல் டெஸ்டுலே நான் பர்ஸ்டா வந்தா, ஆன்ட்டி எனக்கு பேனும், ஸ்பெஷல் பீச்மெல்பா ஐஸ்க்ரீமும் பண்ணித் தரதா சொன்னாப்பா... நான் முதல் மார்க் வாங்கிட்டேன்னு நேத்திக்கு போன்லே சொன்னேன்... இன்னிக்கு ட்ரீட்...."

மாதவ் முகத்தில் மஹா சந்தோஷம், பெருமை.

சுதாகர் மெதுவாக நடந்து சோபாவில் உட்கார்ந்து கொண்டான்.

ஆறு மாச காலத்தில் நடந்துவிட்ட பல சமாசாரங்களை நினைத்துப் பார்க்கையில் மனசுக்குள் பன்னீர் சாரலடித்தது.

முக்கியமாய் மாதவ்...

எந்நேரமும் அடமும், அழுகையும், அழுக்குமாய் நின்றிருந்த மாதவ் இன்றைக்கு வகுப்பில் முதல், எல்லோரிடமும் படுசுட்டி, சமர்த்து என்று பேர் வாங்குகிறான். ஒரு சில சமயங்களில் வயசுக்கு மீறின முதிர்ச்சியுடன் ரொம்ப இதமாககூட நடந்து கொள்ள முயற்சிக்கிறான்.

இத்தனைக்கும் காரணம்...காயத்ரி.



அந்தச் சிரிப்பு, நிதானம், பொறுமை, அத்தனைக்கும் மேலாய் அவன் செலுத்தும் பரிபூரண அன்பு......

காயத்ரி...வாட் எ நைஸ் பர்ஸன் யு ஆர்?

கண்களைத் திருப்பி டைனிங் டேபிளிடம் நின்றவளைப் பார்க்கையில் கவிஞர் வைரமுத்து சொல்வது போல பாரிஜாத வாசம் நேரம் பார்த்து வீசுகிற மாதிரி தோன்றியது.

காயத்ரி சென்னைக்கு வந்து முழுசாய் ஆறு மாசங்கள் ஆகிவிட்டதென்றால் நம்புவது கஷ்டமாகவே இருந்தது.

ஏன்? சாரு போய் ஒரு வருஷம் முடிந்து ஒரு மாசம் கூட ஓடி......

வேண்டாம்...சாரு பற்றின நினைப்பும், தொடர்ந்து எழும் அவஸ்தையும் இப்போது வேண்டாம்...நோ...

பலவந்தமாக எண்ணங்களை மீண்டும் காயத்ரியைச் சுற்றி கட்டியபோது இத்தாண்டு வீட்டை எத்தனை அழகாக இவள் வைத்திருக்கிறாள் என்று எப்போதும் உண்டாகும் பிரமிப்பு இப்போதும் உண்டாயிற்று.

முதல் ஒரு மாசத்துக்கு கெஸ்ட் ஹவுஸில் இருந்தவள் அப்புறம் தனக்கென்று ஒரு வீடு வேட்டையில் இறங்கினாள்.

அப்பா வீட்டை விற்று போட்ட பணம் அப்படியே இருந்தது. பணமாக இருப்பதைச் சொத்தாக மாற்றி விட்டால்?

சுதாகர் அவள் கருத்தை ஆமோதித்தான்.

அடுத்து வந்த நாட்களில் பேப்பரும் கையுமாய் அத்தனைத் தரகர் அலுவலகங்களையும் ஏறி இறங்கினார்கள்.

காயத்ரி அதிருஷ்டக்காரிதான்.

ராஜ்பவனுக்கு எதிரில், ஸ்ரீ நகர் காலனியில் அவன் மனசுக்குப் பிடித்த ரீதியில் ஒற்றை படுக்கை அறையோடு ஒரு கிரவுண்டில், நிறைய தோட்டத்தோடு கட்டப்பட்ட குட்டி வீடு ஒன்று வகையாய் அகப்பட்டது.

''இது கொஞ்சம் தள்ளி இல்லையா, காயத்ரி?''

''ம்ஹூம்...வேளச்சேரிக்கு கிட்டக்க; தவிர எனக்கு இந்தக் காலனி ரொம்ப பிடிச்சிருக்கு...ப்யூடிஃபுல் ஸ்ப்னெஸ்...''

ரிஜிஸ்ட்ரேஷன் ஆகி, காயத்ரி இந்த வீட்டுக்குக் குடி புகுந்து மூன்று மாசங்கள் ஆகிவிட்டதற்குச் சாட்சியாய் வாசலில் இப்போது கானா வாழையும், காசித் தும்பையும் வாடாமல்லியும் கலர் கலராய் பச்சை புல்வெளியைச் சுற்றி சிரிக்கின்றன.

''சுதா—என்ன யோசனை, கூப்பிடறது காதுல விழாமா?''

''ஸாரி''

சுதாகர் எழுந்து சாப்பாட்டு டேபிளிடம் வந்தான்.

காயத்ரி, பீங்கான் கிண்ணங்களில் முதலில் இரண்டு பிடி அரிசி பொரியைப் போட்டாள். அடுத்து ஒரு கை ஓமப் பொடி. அதற்கு மேலே உதிர்த்த உருளைக் கிழங்கு, நொறுக்கிய பூரி துண்டுகள். அப்புறம் ஒரு கை நறுக்கின பச்சை வெங்காய, கொத்தமல்லி கலவை. உச்சந்தலையில் நாலு ஸ்பூன் தித்திப்பு, கார சட்னி.

''ஹேய்...ஹேய்...என்ன இது! அம்பாரமா இத்தனை குமிச்சி குடுத்தா எப்படி சாப்பிடறது?''

''பார்க்கறத்துக்கு இவ்வளோ இருக்கே தவிர. சாப்பிட்டா, இன்னும் இந்த மாதிரி இரண்டு பங்கு சாப்பிடலாம்ப்பா...''



ஆர்வத்துடன் பேசிய மாதவி தன் கிண்ணத்தை கையில் எடுத்துக் கொண்டு ஸ்பூனால் கலந்து சாப்பிடத் துவங்கினாள்.

''எனக்கு இன்னும் கொஞ்சம் ஸ்வீட் சட்னி...ம்ம்... ஆண்ட்டி...திஸ் ஈஸ் வெரி டேஸ்ட்டி...''

''உங்களுக்குக் கார சட்னி வேணுமா சுதா? தயிர் இரண்டு ஸ்பூன் போட்டுண்டா நன்னா இருக்கும்... வேணுமா? தக்காளியை பொடியா நறுக்கிக் கூட கலந்துக் கலாம்...''

ஒரு வாய் சாப்பிட்டு விட்டு ''ம்ம்'' என்று பாராட்டிய சுதாகர் ''இதெல்லாம் நீ எங்க கத்துண்ட காயத்ரி?'' என்று அதிசயித்தான்.

''பிரமாதமா சொல்ல இதுல என்ன இருக்கு? நார்த் இண்டியால தடுக்கி விழுந்தா 'பேல்' தான்...உங்களுக்குப் பிடிச்சா சரி...ஏதாவது பாட்டு போடட்டுமா சுதா?''

அவன் பதிலுக்காகக் காத்திராமல் எழுந்து சென்று மஹாராஜபுரம் சந்தானம் டேப்பைச் சுழல விட்டு வந்தாள்.

மோஹனம் வெகு சுகத்தோடு கிளம்பியது.

''அப்பா மோஹன ராக எக்ஸ்பர்ட். அவரைப் போலவே இவரும் இந்த ராகத்தை பிச்சு உதறிடறார்.''

பாட்டை ரசித்துக் கொண்டே பேலைச் சாப்பிட்டதும் உயரமான க்ளாஸ் டம்ளர்களில் முதலில் ஃப்ரூட் சாலட். அடுத்து ஜெல்லி, மேலே ஐஸ்க்ரீம், அதை ஒட்டி பீச் பழத் துண்டங்கள், அதற்கும் மேல் மொத்தையாய் க்ரீம், பொடித்த வால்நட், முந்திரிப் பருப்புகள், உச்சி பொட்டாய் ஒற்றை சிகப்பு செர்ரி பழம் என்ற அதிரூப மேக்கப்போடு பீச்மெல்பா வந்தது.

மாதவி கையைக் கொட்டிக் கொண்டு குதித்தாள். சுதாகர் கண்களை விரித்தான்.

''ஐஸ்க்ரீம் பார்லர் லேந்து வாங்கிண்டு வந்து வைச்சிருக்கியா?''

காயத்ரி புன்னகைத்தாள்.

''ஐஸ்க்ரீம் பண்ண நேரமில்லே...அதனால் அதை மட்டும் வாங்கிண்டு வந்தேன். மத்தபடி ஜெல்லி, பழங்கள் எல்லாத்தையும் தயாரிக்கறது ரொம்ப சுலபம். அலங்காரமா கொடுக்கறதுல தான் ட்ரிக் இருக்கு...'

''யம்மாடி...என்னால இன்னிக்கு இங்கேயிருந்து நகர முடியாதும்மா. லோ ஃபுல்...''

சந்தானம் இப்போது ராகமாலிகை துக்கடா ஒன்றை எடுத்தார்.

துங்கா தீர விராஜம்—பஜமன...

ராகவேந்திர ஸ்வாமி மேல் பாடப்படும் பாடல். நிச்சிந்தையாய் கேட்டால் மந்த்ராலயமும், துங்க பத்ராவும் கண்முன் ப்ரத்யக்ஷமாகும். சத்தியம்.

ராகவேந்திரா...என்று இறுதியில் திரும்பத் திரும்ப சந்தானம் உருகிப் பாடிய போது உடம்பு பரபரத்துப் போனது. ''அப்பனே, இதோ நானே வந்து விட்டேன்; உன் அழைப்பைக் கேட்டுக் கொண்டு சும்மா எப்படி உட்கார முடியும்?' என்று ராகவேந்திரர் வந்து விடுவார் போல இருந்தது.

டேப் முடிந்து சில நிமிஷங்கள் ஆன பிறகு 'நீ ஏதாவது பாடு காயத்ரி'' என்றான் சுதாகர்.

மனசு நெகிழ்ந்து இருந்ததால் கனராக கீர்த்தனங்கள் எதையும் பாட மனமின்றி தம்புராவும் கையு



மாய் உட்கார்ந்து, 'ஹரி தும் ஹரோ ஜனகி பீர்' என்கிற பஜனை காயத்ரி எடுத்தாள்.

ஹே பிரபு—இந்த உலகத்து ஜனங்கள் அத்தனை துயரையும் நீ தீர்த்துவிட மாட்டாயா...?

சரணத்தைப் பாடி முதல் வரிக்கு மெதுவாக காயத்ரி நிறுத்தியபோது அவள் கண்கள் பனித்திருந்தன.

சுதாகர் முன்னால் சாய்ந்து உட்கார்ந்தான். கைகளை சப்தமில்லாமல் தட்டினான்.

''சூபர்ப்... ரியலி ஃபென்டாஸ்டிக்... இந்த பஜனுக்குப் பின்னால இருக்கற குட்டி கதை ஒன்னை உனக்குச் சொல்லட்டுமா; 1947ம் வருஷம் காந்திஜிக்கு எம். எஸ். சுப்புலக்ஷ்மி பஜன்களைப் பாடி கேக்கணும்னு ஆசை வந்திருந்தாம். அவர் பிறந்த நாளான அக்டோபர் இரண்டாம் தேதி எம். எஸ். பாடின சில பஜன்களை ஆல் இண்டியா ரேடியோல ஒலிபரப்ப முடிவு பண்ணி ரிகார்ட் பண்ணுவானாம். [illegible] காந்திஜி 'ஹரி தும் ஹரோ' பஜனைக் கேட்க விரும்பறதா தகவல் வர, அது எம். எஸ்ஸுக்கு பாடம் இல்லாததால 'வேற யாரையாவது பாடச் சொல்லலாமானு' கேட்டதுக்கு காந்திஜி, 'வேற யாராவது பாடி கேக்கறதைவிட, எம். எஸ். இந்த பஜனை படிக்கறதை கூட தான் விரும்பறேன்'ன்னாராம். இதைக் கேள்விப் பட்டதும் உடனே இதுக்கு ட்யூன் போட்டுப்பட்டு ராத்திரி இரண்டு மணிக்குப் பாடி பஜனை டேப் பண்ணி எம். எஸ். அனுப்பினாராம் நீ வேணா உன்னிச்சு கேளு காயத்ரி...'ஹரி தும் ஹரோ' பஜனைப் பாடறப்போ எம். எஸ். எப்பவுமே அலாதி லயிப்போட தான் பாடுவார்...''

அன்றைக்கு சுதாகர் வீட்டுக்குக் கிளம்பும்போது மணி ஒன்பது என்றது.

''நாளைக்கு சனிக்கிழமை தானே! மது என் கூட இருக்கட்டும்'' என்று காயத்ரி சொல்ல, இப்படி சனி,

ஞாயிறுகளில் பெண்ணை காயத்ரியிடம் விட்டுச் செல்லும் வழக்கம் உண்டென்பதால் அவன் மட்டும் கிளம்பிப் போனான்.

மறுநாள் காலை ஐந்து மணி சுமாருக்கு காயத்ரியின் வீட்டுக்கு வந்தவன், கையில் சதுரமாய் காகித கவர்.

''மது, இதை ஆன்ட்டி கிட்ட குடு...''

''என்ன சுதா?'' என்றபடி குழந்தையிடமிருந்து கவரை வாங்கி, காயத்ரி பிரித்தாள்.

வாணி ஜெயராமின்—மோக்ஷ—கே-மோதி ரெகார்ட்.

''எதுக்கு இது சுதா?''

''நேத்து நீ அத்தனை அழகா பஜன் பாடினதுக்கு என்னோட சின்ன பரிசு. ஏதாவது வாங்கித்தரணும் போல இருந்தது...கடைக்குப் போய் தேடினேன். இந்த ரெகார்ட் உன் கிட்ட இல்லேனு தோணித்து...வாங்கிட் டேன்...வையேன் கேக்கலாம்...''

சுதாகருக்கு காபி கலந்து கொடுத்த பின், ரிகார்டை காயத்ரி சுழல விட்டாள்.

இரண்டு பக்க ஸ்பீகரிலிருந்தும் கணீரென்று, பிசிறில் லாத வாணியின் குரல் பொங்கி வழிந்தது.

''கண் இல்லாத உடலும்,
சந்திரன் இல்லாத வானமும்,
விளக்கு இல்லாத கோவிலும்,
வேதம் அறியாத பண்டிதனும்,
ஹரி நாமம் சொல்லாத ஜன்மமும்—
இருந்து என்ன பயன்...''

குருநானக்கின் பக்தி வாணியின் ஸ்பஷ்டமான உச் சரிப்பில் தெறித்து விழுந்து மனசை ஆக்கிரமிக்க, இமை ஓரங்களில் முத்துகள் கட்டின.



என்ன ஸ்வானுபாவம்...என்ன குழைவு...

''எப்படி இருக்கு காயத்ரி பிடிச்சிருக்கா?''

காயத்ரி கண்களைக் கசக்கிக் கொண்டாள். ''தாங்க்ஸ் சுதா'' என்றாள்.

ரிகார்ட் ஓடி முடிந்தபிறகு, 'ஒரு ட்ரைவ் போயிட்டு வரலாமா?'' என்று சுதாகர் கேட்க, மூவரும் கிளம்பி பெஸன்ட் நகருக்குப் போனார்கள்.

அலைகள் அடித்து ஓயும் மேட்டில் சர மண்ணில் கொஞ்ச தூரத்துக்கு எதுவும் பேசாமல் நடந்தார்கள். கிளிஞ்சல்களை மாதவி பொறுக்கிய நாழிகையில் இவர்கள் ஓரிடத்தில் உட்கார்ந்தார்கள்.

வீடு திரும்பும் கட்டு மரங்கள்.

தண்ணீரில் பயமில்லாமல் விளையாடும் கோவ ணாண்டி பையன்கள்.

கொடுக்குகளைத் தூக்கிக் கொண்டு ஓடும் நண்டுகள்.

ஃபான்டா ஆரஞ்சு நிற வானம்.

காயத்ரி நீளமாய் பெருமூச்சு விட்டாள்.

''என்ன காயத்ரி''

விழிகளைத் திருப்பி கேள்வி கேட்டவனைப் பார்த் தாள்.

''ஒன்றுமில்லே சுதா''

''ஏன், பேசாம இருக்கே?''

''நல்ல சங்கீதத்தைக் கேட்டப்புறம் அதுலே மனசுலே உழன்றுண்டு இருக்கறதுல எதுவுமே பேசத் தோணலை சுதா...''

அதுவும் சரிதான்.

எத்தனை முறை சுதாகரும் அனுபவித்த சமாசாரம் அது.

கைகளைப் பின்னால் கோர்த்து தலைகாணி மாதிரி வைத்துக் கொண்டு, மணலில் படுத்த சுதாகர் மெதுவாக 'காயத்ரி' என்றான்.

''ம்?''

''ரொம்ப நாளா உன்கிட்ட ஒண்ணுகேட்கணும்னு.''

''என்ன சுதா?''

சுதாகர் கொஞ்சம் தயங்கினான். அப்புறம் மென்மையாய் கேட்டான்.

''நீ ஏன் கல்யாணமே பண்ணிக்கலை காயத்ரி?''

16978
3294704

## சுதாகர்-2

'சும்மா இருந்தா, என்ன அர்த்தம் காயத்ரி?''

''என்ன சொல்லணும் சுதா?''

''நீ ஏன் இன்னும் கல்யாணம் பண்ணிக்கலை?''

காயத்ரி பதில் சொல்லாமல் சிரித்தாள். 'இது என்ன கேள்வி சுதா?''—என்கிற பார்வையாய் பார்த்தாள்.

சுதாகர் எழுந்து உட்கார்ந்து கொண்டான்.

கையில் ஒட்டிக் கொண்டு இருந்த மணலைத் தட்டினான்.

''சொல்ல இஷ்டம் இல்லாட்டா வேண்டாம்...''

''சின்னக் குழந்தை மாதிரி பேசினா எனக்குச் சிரிப்பு தான் வர்றது. குறிப்பிட்டுச் சொல்லும்படி எதுவும் இல்லே... பண்ணிக்கத் தோணலை — பண்ணிக்கலை, தட்ஸ் ஆல்...''

''நிஜமாகவா?''

கல்யாணம் பண்ணிக்கொள்ளத் தோணவில்லையா?

ஒரு நிமிஷம் மௌனமாய் இருந்து விட்டு ''காயத்ரி... வந்து'' என்று அவன் துவங்கியபோது மாதவி ஓட்டத்தில் ஓடி வந்தாள்.

''இங்க பாருங்கோ...எவ்ளோ பெரிய்ய ஷெல்...''

உள்ளங்கை அகலத்துக்கு ஒரு கிளிஞ்சலை அவன் நீட்ட, காயத்ரி ''ஆமா! ரொம்பத்தான் பெரிசா இருக்கு...வெரி குட்'' என்றாள்.

''இன்னிக்கு நிறைய பொறுக்கியிருக்கேன் ஆன்ட்டி... இங்க பாருங்கோ...''

கையில் பிடித்திருந்த கர்ச்சிபை அவன் உதற, சின்னதும் பெரிசுமாய் கிளிஞ்சல்களும், ஊசி மாதிரி சங்குகளும் கொட்டின.

''பொம்மை பண்ணலாம்னு சொன்னேளே இது போதுமா?''

''ஏதேஷ்டம்...இந்த பெரிய ஷெல்லை பீடத்துக்கும் சங்குகளை கை, கால்களுக்கும் ஒட்டி, மத்ததை ட்ரெஸ் லாக்கி தடபுடலா லேடி பொம்மை பண்ணிடலாம்...''

''என்னிக்கு? இப்ப வீட்டுக்குப் போனதுமா?''

உற்சாகத்துடன் பேசியவளின் தலையில் செல்லமாக காயத்ரி குட்டினாள்.

''ஆசை...ஆசை...இன்னிக்கு ஆட்டம் க்ளோஸ் இவ்வளவுதான்...மணி ஏழாகப் போறது. வீட்டுக்குப் போய் அரை மணி பாக்கி இருக்கற ஹோம் வொர்க்கை பண்ணிட்டு, சமர்த்தா அப்பாவோட போகணும்; நாளைக்கு மண்டே, ஸ்கூல் இருக்கு...ஞாபகம் இல்லே...?''

''அப்ப, நாளைக்கு சாயங்காலம்?''

''முடியாது மதும்மா...வீக் டேஸ்ல ஹோம் வொர்க் பண்ணத்தான் நேரம் இருக்கும். அடுத்த சனி, ஞாயிறு வைச்சுக்கலாம்...''

''ப்ராமிஸ்?''



''காட் ப்ராமிஸ்.''



தன்னை முந்திக்கொண்டு ஆன்ட்டி 'காட் ப்ராமிஸ்' சொல்லிவிட சந்தோஷத்துடன் மாதவி அவன் மடியில் சாய்ந்து, கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

''ஹேய்...ஹேய்...இது பீச்...எல்லாரும் நம்பளையே வேடிக்கைப் பார்க்கறா...''

''பாக்கட்டும்...எங்க ஆன்ட்டி எனக்கு ஒசத்தி— கட்டிக்கறேன்...

அந்த அன்பில் குழைந்துபோய் காயத்ரி அவன் கன்னத்தில் முத்தமிட்டாள். அப்புறம் சுதாகர் பக்கம் திரும்பி ''நாழியாச்சு, கிளம்பலாமா?'' என்றாள்.

வீட்டுக்கு வந்ததும் மாதவியை கை கால் அலம்பச் சொல்லி, அவனோடு தானும் டைனிங் டேபிள் முன் உட்கார்ந்து, பாக்கி இருந்த ஒரு ஹோம் வொர்க்கை முடிக்க உதவினாள்.

குட்டி குட்டியாய் பத்து கணக்குகளைப் போட்டு, ஒரு ஆப்பிள் வரைந்து சிகப்பு கலர் பூச வேண்டும்.

அவர்கள் பாடங்களைக் கவனித்த நேரத்தில் சுதாகர் டேப்பில் அரியக்குடி ராமானுஜய்யங்கார் ஆண்டாள் பாசுரங்களை பாடியிருப்பதைப் போட்டுவிட்டு அதில் லயிக்க முயற்சித்தான்.

கவனம் பூரணமாய் அதில் ஊன்ற மறுத்தது. என்னமோ நெருடல்; இருப்புக் கொள்ளாமை...

காயத்ரி பக்கம் திரும்பினான்.

ஏதாவது அவளிடம் பேச வேண்டும் போல இருந்தது. ''இந்த டேப் எது காயத்ரி?''

''ரேடியோவேந்து முன்னே எப்பவோ ரிகார்ட் பண்ணது. எம். எல். வி. பாடற ராகங்கள் வேற...இவர் பாடறது வேற...சிலதை இவரோட சிஷ்யர் பி. ராஜம் அய்யர்கூட பாடியிருக்கார். நன்னா இருக்கும்... நீ கேட்டது, இல்லியா?''

''ம்ஹூம்—நாட் ஈபுல்லி...நான் எடுத்துண்டு போய் கேட்டுட்டுத் தரட்டுமா?''

''இது என்ன கேள்வி சுதா...ஓ. கே. சாப்பிட்டு போறேளா?...ஏதாவது பண்ணட்டுமா?''

சுதாகர் மணிக்கட்டைப் பார்த்தான்.

கைக் கடிகாரம் எட்டு என்றது.

''வேண்டாம் காயத்ரி; மாமா காத்துண்டு இருப்பார் —நாங்க புறப்படறோம். பேத்தியை அவர் பார்த்து இரண்டு நாள் ஆகப் போறதே...''

மூவரும் வெளியில் வந்தார்கள்.

''புக்ஸ் எல்லாம் எடுத்துண்டயா மது?''

''ம்...கிளிஞ்சல் இங்கேயே இருக்கட்டுமா ஆண்ட்டி?''

''இருக்கட்டும்—நான் க்ளீன் பண்ணி வைக்கறேன். குட்நைட் சுதா, குட்நைட் மதும்மா...''

காரில் ஏறிவிட்ட மாதவி ''கிட்ட வாங்கோ ஆண்ட்டி'' என்றாள்.

அருகில் வந்தவளை இழுத்து அழுந்த முத்தம் கொடுத்து ''குட் நைட் ஆண்ட்டி'' என்றாள்.

வீட்டுக்குப் போய் மாமாவிடம் கொஞ்சம் பேசி, மாதவியுடன் சாப்பிட்டு, அவளைப் படுக்க வைத்து, தானும் உடை மாற்றிக் கொண்டவன், காயத்ரியிடம் இருந்து எடுத்து வந்திருந்த டேப்பை இயக்கினான்.





விளக்குகளை அணைத்தான். ஈஸிசேரில் சாய்ந்த படி பாசுரங்களைக் கேட்டான்.

தன்னை ஆட்கொண்டுவிட்ட கண்ணனை அடைய வேண்டி, மார்கழி மாதத்தில் முப்பது நாட்களும், வைகறையில் துயில் எழுந்து, நீராடி, நெய், பால் உண்ணாமல், மை, மலர் அணியாமல், செய்யாதன செய்யாமல், தரி தரி என்று எந்நேரமும் அவனையே ஸ்மரித்து, நோன்பு நூற்ற ஆண்டாளின் பக்தி, சரணாகதி, காதல், ஒவ்வொரு பாசுரத்திலும் தேனாய் சொட்டி, தித்திப்பாய் இத்தித்தது.

—சிற்றஞ்சிறு காலை வந்துன்னைச் சேவித்து—

மலயமாருத ராக பாசுரம் சுழன்று சுழன்று ரத்த நாளங்களில் வியாபித்தது.

—எற்றைக்கும் ஏழ் ஏழ் பிறவிக்கும் உன் தன்னோடு உற்றோமே ஆவோம். உனக்கே நாம் ஆட் செய்வோம், மற்றை நம் காமங்கள் மாற்று—ஏலோர் எம்பாவாய்!

திருப்பித் திருப்பி கடைசி இரண்டு வரிகளையும் மனசில் அசை போட்டபோது திடுமென்று சுதாகருக்கு பரபரத்தது. அடிவயிற்றிலிருந்து என்னமோ சுருண்டு மேலே வந்து புரியவில்லையா, புரியவில்லையா—என்று முணு முணுத்தது.

வேகமாய் எழுந்து டேப்பை நிறுத்தினவன், கதவைத் திறந்து கொண்டு மொட்டை மாடிக்குச் சென்றான்.

தென்றல் மென்மையாய் வீசியது.

சந்திரன் தலைக்கு மேலே வட்டமாய் சிரித்தான்.

நித்யமல்லிகை, பாரிஜாதத்தின் மணம் நாசியை நிரப்பியது.

இது நாழிகை இருந்த பரபரப்பு அடங்கி, நெஞ்சில் பூக்கள் மலர முற்பட்டன.

லேசா?
இதுதானா?

இதுதான் காரணமா?

—என்றைக்கும் ஏழ் ஏழ் பிறவிக்கும் உன் தன்னோடு...

ஆண்டாள் கண்ணனுக்காக உருகின தினுசில் காயத்ரியும் எனக்காகக் காத்திருக்கிறாளா?

என்ன சொன்னாள்?

அன்று, ஏழு வருஷங்களுக்கு முன், அன்று, அந்த சரக்கொன்றை மரத்தடியில் என் கையைப் பற்றி, என்ன சொன்னாள்?

பிரயத்தனப்பட்டு ஞாபகத்தைக் கசக்க, அது ஒவ்வொரு வார்த்தையாய் எழுதியது.

—நான் —உன்னோட —ஆயுசு பர்யந்தம்—சேர்ந்து வாழ—விரும்பறேன்—சுதா...

இது தவறு, இது சரியில்லை, உண்மை இல்லாத சமாசாரம் என்று ஒதுக்கி, அழித்து விட்டிருந்த வார்த்தைகள் இன்று உயிர் பெற்று நின்ற போது விசுக்கென்று உள்ளுக்குள் ஒரு நீரூற்று உயரே கிளம்பியது.

காற்றும், நிலவும், பூமியும், வானமும், செடியும், கொடியும் நூறாயிரம் மடங்கு கவர்ச்சி பெற்றுவிட்ட மாதிரி தோன்ற, சின்ன பையனாய் ஓஹோய் என்று கூவிக்கொண்டு குதிக்க வேண்டும் போல தோன்றியது.

காயத்ரி...
**என் காயத்ரி...**



என் அருமை ஸ்நேகிதியே...

ஆக, இத்தனை வருஷங்களும் நீ எனக்காகத்தான் காத்திருந்தாயா?

என்னை நினைத்துதான் உருகிப் போனாயா?

அதுதான் இன்று மாலை நான் என் கல்யாணம் செய்து கொள்ளவில்லை'—என்றதும் சிரித்து, மழுப்பி சமாளிக்கப் பார்த்தாயா?

மடையா, இன்னுமா உனக்குப் புரியவில்லை என்று மனசுக்குள் நொந்து கொண்டாயா?

என்னவளே—

என் இனிய ஸ்நேகிதியே—

உன் மனம் புரிந்து போனதடீ—

எத்தனை வருஷங்கள்?

ஏழா? முழுசாய் ஏழா?

அன்று—75ல் துவங்கி, இன்று வரை, ஏழு வருஷங்களாய் நீ எனக்காகக் காத்திருக்—இல்லை, இல்லை, தவமிருக்கிறாயா?

தவம்...

எஸ்—தவம் தான்.

ஆண்டாளின் தவம் மாதிரி இதுவும் ஒரு தவம் தான்.

என்றைக்கும் ஏழ் ஏழ் பிறவிக்கும் உன் தன்னோடு...

இது நாட்கள் உணராத எத்தனை எத்தனையோ விஷயங்களைப் புரிந்து கொண்டு விட்ட தினுசில் ஹ்ருதயம் 'ஹோ, ஹோ' என்று ஆர்ப்பரிக்க, சுதாகர் உள்ளே வந்தான்.

காயத்ரி பாடி தான் டேப் செய்து வைத்துள்ள டேப்பைப் போட்டான்.

தேவகாந்தாரியில்—க்ஷீர சாகர சயனா...

த்விஜாவந்தியில்—அகிலாண்டேஸ்வரி...

ராகமாலிகையில்—நல்லதோர் வீணை செய்தே...

காயத்ரி கெஞ்சினாள், கொஞ்சினாள்...வருடிக் கொடுத்தாள். கம்பீரமாய், நளினமாய் நெஞ்சை நிறைத்தாள்.

படுக்கையில் படுத்து தூங்கிக் கொண்டிருந்த மாதவி புரண்டு 'ஆண்ட்டி' என்று உறக்கத்தில் முனக, சுதாகர் குனிந்து மகளை அணைத்து முத்தமிட்டான்.

ஆண்ட்டி, அம்மாவாக மாறி வீட்டோடு தங்க வந்து விட்டால் மாதவி எப்படித் தலைகால் புரியாமல் குதிப்பாள் என்று கற்பனை பண்ணிப் பார்த்தான்; உதடுகளைக் கீறிக் கொண்டு புன்னகை எழுந்தது.

உடனே, உடனே காயத்ரியைப் பார்க்க வேண்டும் போல உள்ளம் முரண்டு பண்ணியது.

படுக்கையில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டான்.

இந்த ஏழு மாச காலத்தில், மாதவியில் துவங்கி வீட்டின் அன்றாட காரியங்கள் வரை அத்தனையையும் ஒழுங்குபடுத்தி சீராக்க காயத்ரி தீவிரமாய் முனைந்து வெற்றி கண்டு விட்டதெல்லாம் ஒவ்வொன்றாய் மூடிய கண்களுக்குள் எட்டிப் பார்த்தன.

காயத்ரி...

காயத்ரி படித்தவள், அழகி, புத்திசாலி, விவேகி...

அவளுக்குப் பாடத் தெரியும், மற்றவர்களின் மனதை ஊடுருவிப் புரிந்து கொள்ளத் தெரியும்...



காயத்ரி எனக்கு மனைவியாய் வந்து விட்டால், இனி எதற்கும் கவலைப்பட வேண்டியதில்லை.

மாதவியை அக்கறையுடன் பேணி, மாமா, வீட்டை கவனித்து, எனக்கு அத்தனை விதத்திலும் உதவி செய்து...

ஏன்?

அலுவலக வேலைகளில் கூட பெருமளவில் ஆலோசனைகள் கூறி முன்னேற்றத்துக்கு அவள் உதவலாம்...அப்புறம்...அப்புறம்...

இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?

முதலில், அவள் எனக்காகக் காத்திருப்பதை நான் உணர்ந்து விட்டதை, உடனடியாய் அவளிடம் தெரிவித்து ஆவன செய்ய வேண்டும்.

உடனே...உடனே...உடனே...

மாறுநாள் காலை குளித்து தயாராகி யாரிடமும் எதுவும் சொல்லாமல் புறப்பட்டு, காயத்ரியின் வீட்டு வாச மணியை அவன் அழுத்தும்போது மணி ஆறரை.

காயத்ரி ஹவுஸ் கோட்டில் இருந்தாள்.

தூக்கி கட்டப்பட்ட உச்சிக் கொண்டை.

எண்ணையோ, க்ரீமோ தடவப்பட்ட முகம்.

''என்ன சுதா? இந்த காத்தால வேளைல! சன் எனிதிங் ராங்! மாமாக்கு ஒண்ணுமில்லையே! மது...?''

சுதாகர் வெட்கப்பட்டான்.

காதுகள் லேசாகச் சூடாக, சின்ன பையனாய் சிரித்தான்.

''ரிலாக்ஸ் காயத்ரி...ஒருத்தருக்கும் ஒண்ணும் இல்லே...சும்மா உன்னைப்பார்க்க நான் வரக்கூடாதா?''

காயத்ரி புருவங்களை உயர்த்தி ஒருகணம் வியந்தாள்.

''உள்ளே வா...காபி சாப்பிடறயா?''

''ம்''

அவள் காபி கலந்த நிமிஷத்தில் சுதாகர் உள்ளே போய் மேடையில் ஏறி அமர்ந்து கொண்டான்.

தலைமுடியைக் கோதி, முகவாயைத் தடவி, விரல்களை பின்னிப்பின்னி பிரிப்பது காயத்ரிக்கு புதுசாக இருந்தது.

''என்ன சுதா—எனி ப்ராப்ளம்?''

சுதாகர் விழிகளை உயர்த்தி அவளைப் பார்த்தான். தயக்கத்துடன் சிரித்தான்.

அந்த தயக்கமும், சிரிப்பும் ரொம்ப வினோதமாய் இருக்க, ''என்ன சுதா?'' என்று மீண்டும் வினவ, அவன் சட்டென்று முன்னால் சாய்ந்து அவள் கையைப் பிடித்தான்.

''காயத்ரி...வந்து...எனக்கு எப்படிச் சொல்றதுனு தெரியலை...லெட்மீ ட்ரை...நீ இங்க வந்துட்ட இந்த ஏழு மாசமா மாதவி ரொம்ப சந்தோஷமா இருக்கா, நீ எப்பவும் என்கூடவே இருந்தா, நானும் ரொம்ப நிம்மதியா இருப்பேன்னு நினைக்கிறேன். உன் மனசும் எனக்கும் புரிஞ்சு போச்சு...அதனால வந்து, வந்து...நாம கல்யாணம் பண்ணிக்கறதுதான் சரிங்கற முடிவுக்கு நான் வந்துட்டேன்...என்ன காயத்ரி, உனக்கு சந்தோஷம் தானே?''

## காயத்ரி-சுதாகர்-1

எதையும் யோசிக்க, சொல்ல முடியாத அளவுக்கு காயத்ரி மரத்துப் போய்விட்டு, அப்புறம் கொஞ்சம் கொஞ்சமாய் அதிர்ந்தாள்.

என்ன சொல்கிறான் சுதா?

நாம் கல்யாணம் பண்ணிக்கொள்ளலாம் என்றா?

இந்த தீர்மானத்தில் உனக்கு சந்தோஷம்தானே— என்றா?

என் நண்பன், இனிய, நெருங்கிய, நல்ல ஸ்நேகிதன், சுதாகரா?

உன் மனம் எனக்குப் புரிந்து விட்டது, என்றானே! புரிந்தா இந்த வார்த்தைகளைச் சொன்னான்?

சுதா விளையாடுகிறானா?

ஒரு க்ஷணம் நிமிர்ந்து அருகில் அமர்ந்திருந்தவனை வெறித்தபோது அந்த முகத்தில் பரவசமும், கண்களின் மலர்ச்சியும் இது விளையாட்டு இல்லை என்பதைத் தெளிவாக்க, கைகள் நடுங்குவதை சுதாகர் பார்க்கக் கூடாது என்று காயத்ரி பாலைக் கிளரும் பாவனையில் சற்றே திரும்பி நின்றாள்.

வியர்த்த கையை ஹவுஸ்கோட்டில் துடைத்துக் கொண்டு முரசு கொட்டின படபடப்பை அடக்கப் பார்த்தாள்.

குதிக்காதே...பதறாதே...தவிக்காதே...

நிதானம்...இப்போது தேவை நிதானம்...

ஏழு வருஷங்களாய் என்னை நானே நன்றாக உணர்ந்து, விவேகத்தை வளர்த்துக் கொண்டிருப்பது நிஜம் என்றால், மனமே ஆர்ப்பரிக்காதே... அடங்கு... அடங்கு...

முழுசாய் ஒரு நிமிஷம் போவதற்குள் தன்னை ஓரளவுக்கு நிதானப்படுத்திக் கொண்டுவிட்டவள், பாலை டம்ளரில் ஊற்றி, டிகாஷன், சர்க்கரை கலந்து சுதாக ரிடம் நீட்டினாள்.

அவளுடைய மௌனத்தையும், சின்னதாக வெளியில் தெரிந்த படபடப்பையும் தனக்குச் சாதகமாக எடுத்துக் கொண்ட சுதாகர் புன்னகைத்தான்.

''யூ ஆர் ஷாக்ட், இல்லே? விஷயத்தைக் கேட்டதும் நீ பிரமிச்சுப்போனது நான் எதிர்பார்த்ததுதான்.''

காபியை எடுத்து சுதாகர் உறிஞ்சினான்.

சந்தோஷத்தோடு, மேடையிலிருந்து இறங்கி சமையல் அறையில் இப்படியும் அப்படியும் உலாத்தினான்.

''நோ காயத்ரி—சொன்னா நீ நம்ப மாட்டே — இரண்டு நாள் முந்திகூட எனக்கு உன்கிட்ட இதுவிஷயமா பேசணும்னு தோணலைங்கறதுதான் நிஜம். நேத்து, அதுவும் பீச்சுலே 'நீ ஏன் கல்யாணம் பண்ணிக்கலை'னு உன்னைக் கேட்டேன் பாரு. அப்பத்தான் மனசிலே சின்னதா ஒரு கீறல்...நீ சரியா பதில் சொல்லாம சமாளிச்சே, ஞாபகம் இருக்கா...அப்ப ஒரு நெருடல்... தென், மது உன் மடிலே விழுந்து கட்டிண்டதும், நீயம் அவளும் எக்கச்சக்க அன்போட முத்தம் கொடுத் ததும் அந்த நெருடலை ஜாஸ்தி ஆக்கிடுத்து. ஒண்ணும் புரியலை... குழப்பத்தோடயே வீட்டுக்குப் போனேன்... ஆண்டாள் பாசுரத்தை ராத்திரி தனியே கேட்டப்பத்



தான் திடும்னு மின்னல் அடிச்ச மாதிரி நீ ஏன் கல்யாணம் பண்ணிக்கலைங்கறது புரிஞ்சுது... ரியலி காயத்ரி, யு ஆர் எ க்ரேட் பர்ஸன்...?'

காபி டம்ளரை கையில் வைத்துக் கொண்டு, நடப் பதை நிறுத்திய சுதாகர் அவளை கனிவுடன் ஏறிட்டான். மெல்ல கிட்ட வந்தான்.

''ஏழு வருஷமா தவம் செய்யற மாதிரி எனக்காக நீ காத்துண்டு இருக்கறது அப்பத்தான் புரிஞ்சுது... உடனே உன்னை வந்து பார்க்கணும்—எனக்கு உன் மனசு புரிஞ்சு போச்சுனு சொல்லணும்னு ஒரே துடிப்பு. அதான் கார்த் தால முதல் வேலையா...''

டம்ளரை மேடையில் வைத்துவிட்டு சுதாகர் காயத்ரி யின் கரங்களைப் பற்றிக் கொண்டான்.

''மதுகிட்ட நீ உண்டாக்கி இருக்கற சேஞ்ஜ் உனக்கே தெரியும்; அவளுக்கு ஒரு அம்மா உடனடியா, கண்டிப்பா, வேணும். அது நீயா இருந்தா நான் ரொம்ப சந்தோஷப்படுவேன். காயத்ரீ... மது மட்டுமில்லே... உண்மையைச் சொல்லணும்னா, நீ வந்ததிலேந்து என் வீடே கலகலப்பாயிடுத்து...இது சத்தியம்...அதனால நீ எப்பவும் எங்க கூடவே, அந்த வீட்டுலேயேஇருக்கணும்னு நான் விரும்பறேன்...ஏழு வருஷம் முன்னால நீ என்னை கேட்டப்போ உன் ஆசையை நிறைவேத்த முடியாத நிலைல நான் இருந்தேன். இப்ப ஐம் ரெடி...உனக்கு சந்தோஷம்தானே...என்ன காயத்ரீ, நான் பாட்டுக்கு பேசிண்டே போறேன், நீ எதுவுமே சொல்ல மாட்டேங் கறியே? ம்...?''

காயத்ரி கைகளை மெல்ல விடுவித்துக் கொண்டாள். கஷ்டப்பட்டு புன்னகைத்தாள்.

''நீ ஆரம்பத்திலே சொன்ன மாதிரி, ஐ'ம் ரியலி ஷாக்ட் சுதா...இந்த மாதிரி ஒரு பேச்சை நீ எடுப்பேனு நான் நிச்சயம் எதிர்பார்க்கலே...அதனாலே''

''அம்மா, போன் அடிக்குது...''

முன் ஹாலில் பெருக்கிக் கொண்டிருந்த வேலைக்காரி குரல் கொடுக்க, ஒருவித நிம்மதியுடன் பாதியிலேயே பேச்சை நிறுத்திவிட்டு, காயத்ரி அவசரமாய் கூடத்துக்கு வந்தாள்.

''ஹலோ...எஸ்...காயத்ரி ஹியர்...''

இரண்டு நிமிஷங்கள் பேசிவிட்டு ரிஸிவரை வைத்தாள்.

''லேப்லே ஒரு சின்ன எமர்ஜென்ஸியாம்; உடனே வந்தா தேவலைனு சொல்றா...''

சுதாகர் தோளைக் குலுக்கி கையை விரித்தான்.

''டேட்டி ஃபர்ஸ்ட்...நாம் அப்புறமா பேசிக்கலாம்...நீ கிளம்பு. நான் உன்னை ட்ராப் பண்ணறேன்.''

சில நிமிஷங்களில் குளித்து காயத்ரி தயாராக, தன் வண்டியில் அவளை ஆராய்ச்சிக் கூடத்துக்கு சுதாகர் அழைத்துச் சென்றான்.

இறங்கி, [கதவைச் சாற்றியவள் ஜன்னலிடம் குனிந்தாள்.

''ஸாரி சுதா—வந்து...''

''நோ ப்ராப்ளம்...நீ எங்கே போயிடறே—இல்லே நான்தான் எங்கே ஓடிடறேன்! சாயங்காலமா நிதானமா பேசலாம்...பை...''

அரைமணிக்கு முன் காணப்பட்ட சிறு பிள்ளைத்தனம் சற்றும் இல்லாமல் பொறுப்புடன் பேசிவிட்டு சுதாகர் போக, காயத்ரி உள்ளே சென்றாள்...

வேலையைக் கவனித்துவிட்டு, மறுபடி அவள் வெளியில் வந்தபோது தலைவலியும், சுதாகர் போன ஞாபகமும் சேர்ந்தே வந்தன.



முக்கிய வேலை ஏதும் இல்லை என்பதால் பன்னிரண்டு மணி சுமாருக்கு 'மதியம் வரமாட்டேன்—உடம்பு சரியில்லை' என்று சொல்லி, வீட்டுக்கு வந்தாள்.

காபி ஒரு டம்ளர் கலந்து கொண்டு சோபாவில் உட்கார்ந்தபோது, ஏனோ விழி ஓரங்கள் நமநமத்தன.

சுதாவா?

ஏன் அப்படிச் சொன்னான்?

தனக்குத்தானே எதையோ கற்பனை பண்ணிக் கொண்டுவிட்டு, பெரிசு பெரிசாய் என்னென்னமோ...

என்ன சொன்னான்?

தவம்...

நீ எனக்காக ஏழு வருஷங்களாய் செய்யும் தவம் புரிந்துவிட்டது—என்றுதானே!

சுதாவை நான் காதலிப்பதாக நினைத்தது உண்மை; ஆனால், அன்று அதை அவன் முளையிலேயே கிள்ளி எறிந்த பிறகு, நல்ல நட்பை வேண்டாத கற்பனையால் அழித்து விடாதே என்று சொன்ன பிறகு, ஆயுசுக்கும் உனக்கொரு நல்ல ஸ்நேகிதனாக நான் இருக்க விரும்புகிறேன் என்று அழுத்தமாய் கூறிய பிறகு அந்த எண்ணத்தை மாற்றி, அழித்துக் கொண்டு விட்டதுதானே உண்மை!

அப்புறம் இன்று வரை அவனை நெஞ்சில் ஒரு பீடத்தில் அமர்த்தி, விவேகம் நிறைந்த, அற்புதமான நண்பன் என்ற ஸ்தானத்தில் வைத்திருப்பதுதானே சத்தியம்?

இதை சுதா ஏன் உணரவில்லை?

படிப்பிலும், வேலையிலும் உள்ள நாட்டத்தின் காரணமாய் திருமணத்தைப் பற்றி நான் தீவிரமாக எண்ணாதது தானே நிஜம்?

பெண்ணாகப் பிறந்த அனைவரும் மணம் புரிந்து தான் தீர வேண்டுமா?

எதற்காக?

தனியாய், தான் உண்டு, தன் வேலை உண்டு, தனக்குப் பிடித்த நண்பர்கள் உண்டு என்று ஒருத்தி வாழக் கூடாதா?

சுதா அந்தக் கண்ணோட்டத்தில் என்னை ஏன் பார்க்கவில்லை?

தவம்...

ஏன்...ஒரு விதத்தில் எங்கள் நட்பின் புனிதத்தை காக்க நான் தீவிரமாய் முனைந்ததை தவம் என்று குறிப்பிடலாம்தான்...

சுதாவின் ஸ்நேகிதத்தை எப்பாடு பட்டாவது காப்பேன் என்று உறுதி பூண்டு, அவன் மேல் எவ்வளவு கோபம், ஏமாற்றம் வராமல் இருக்க நான் மேற்கொண்டது ஒரு விதத்தில் தவம்தான்...

ஆனாலும்?

ஓ! சுதா...

நீயா அவசரப்பட்டு பேசி விட்டாய்?

ஏன், சுதா? ஐயோ, ஏ-ன்?

அழுகை சின்னதாக எட்டிப்பார்க்க காபி கோப்பையை மேஜை மேல் வைத்துவிட்டு கைகளில் காயத்ரி முகத்தைப் பதித்துக் கொண்டாள்.



சுதாகர் காலையில் பேசிய பேச்சுகள் ஒவ்வொன்றாய் மனசுக்குள் எட்டிப் பார்த்தன.

கூடவே, ஒரு தரம், ஒரே ஒரு தரம் கூட ஐ லவ் யூ காயத்ரி, நீ எனக்கு வேண்டும்' என்று சுதாகர் சொல்லாததும் ஞாபகத்துக்கு வந்தது.

மதுவுக்கு ஒரு அம்மா வேண்டும்.

என் வீடு உன் வரவால் கலகலப்பாய் இருக்கிறது—இது என்றும் தொடர வேண்டும்.

ஸோ—

மாதவிக்கு ஒரு அம்மா வேண்டும் என்பதும், வீட்டை ஒழுங்காய் கவனிக்க ஒருபெண் வேண்டும் என்பதும்தான், இப்போதைய நிலைமை என்று சுதா சொல்லாமல் சொல்லி விட்டானா?

அவ்வளவுதானா?

ஆக, சுதாகரும் ஒரு சராசரி ஆணைப்போல, சுயநலம் நிறைந்த சந்தர்ப்பவாதிதானா?

அதுவும்...அதுவும்...

சாரு மறைந்து ஒரு வருஷம், ஒரு மாசமே ஆன லையில்...

கடவுளே கடவுளே...

இப்போது அழுகை வெடித்துக்கொண்டு எழ, காயத்ரி ந ய்விட்டு விசும்பினாள்.

விவேகம் நிறைந்தவன், தக்க சமயத்தில் சரியான வார்த்தைகளைச் சொல்லி குழம்பி இருக்கும் மனதை தெளிய வைப்பவன், நிதானமாய் யோசித்து பேசுபவன்—என்று சுதாகரைப் பற்றி இறுமார்ந்திருந்ததெல்லாம் இடிந்து விழுந்துவிட்ட மாதிரி கொஞ்ச நேரத்துக்கு, அந்த வலி தாளாமல் அழுதாள்.

அப்புறம், சே—சின்ன குழந்தைபோல என்ன அழுகை இது—என்று தன்னைத்தானே அதட்டிக் கொண்டு, காலை நீட்டி கொஞ்சம் படுத்துத் தூங்கப் பார்க்கலாம் என்ற நினைப்புடன் படுக்கை அறையில் நுழைந்தபோது போன் கூப்பிட்டது.

''ஹலோ?''

''காயத்ரி?'' நான்தான் சுதாகர். லேப்புக்கு போன் பண்ணேன். உடம்பு சரியில்லேனு நீ வீட்டுக்குப் போயிட்டதா சொன்னா...என்ன காயத்ரி?''

''ஒண்ணுமில்லே சுதா...தலைவலி''

''நான் இப்ப அங்க வரட்டுமா? அரை மணிலே வந்துடுவேன்...''

காயத்ரி சில கணங்கள் மௌனித்தாள். யோசித்தாள். தீர்மானத்தைச்சொல்லிவிடுவது நல்லது என்று மெதுவாய் பேசினாள்.

''வேண்டாம் சுதா...இப்ப நீ இங்க வரவேண்டாம்.. இன்ஃபாக்ட் கொஞ்ச நாழி கழிச்சு நானே உனக்கு போன் பண்ணறதா இருந்தேன்...நேரே சொல்றதைவிட போன்ல பேசறது சுலபமா இருக்கு...சுதா—நீ எனக்கு



ரொம்ப ஸ்பெஷலானவன். இது உனக்கே தெரியும். இன்னும் சரியா சொல்லப் போனா, ஐ லவ் யூ...என், ஐ லவ் யூ, பட் இன் மை ஓன் வே...மதுமேல நான் வைச்சிருக்கற அன்பும் ரொம்ப அலாதியானது. ஆனா... ஆனா...சுதா...நான் என்னிக்கும் உனக்கு நல்ல ஸ்நேகிதியாவும், மதுக்கு அன்பான ஆன்ட்டியாவும் தான் இருக்க முடியும்...வேற எப்படியும் இருக்கறது சாத்தியம் இல்லே...அன்னிக்கு, நீ காட்டிக் கொடுத்த வழில நான் நடக்க ஆரம்பிச்சுட்டேன். என்னால இப்போ வேற எப்படியும்...எந்த விதமாயும்...''

''அனாவசியமா உன்னைக் குழப்பிண்டு என்னென்னமோ பேசறே, காயத்ரி...லிஸன்—நான் இப்ப அங்க வரேன்...வந்து...''

பேசத் தொடங்கியவனை காயத்ரி அவசரமாய் தடுத்தாள்.

''வேண்டாம்...வராதே...ப்ளீஸ், நன்னா யோசனை பண்ணி தெளிஞ்சப்புறம் கண்டிப்பா வா...நாட் நௌ... இப்ப போன்ல அவசரப்பட்டு எதையும் பேசிடாதே... ப்ளீஸ் சுதா...ஏழு வருஷம் முன்னால நீ என்ன சொன்னே ஞாபகம் இருக்கா? 'அனாவசியமா எதையாவது சொல்லி அற்புதமான நம்ம நட்பைக் கெடுத்துடாதே காயத்ரி'னு சொன்னயே நினைவு இருக்கா? அதையே தான் இப்ப நான் சொல்ல விரும்பறேன். நீ எனக்கு ஸ்பெஷல்...உன் நட்பு ரொம்ப ஸ்பெஷல்...இந்த மாதிரி நட்பு அமையறது அபூர்வம்...வேண்டாம் சுதா...ப்ளீஸ், ப்ளீஸ்...''

அடக்க மாட்டாமல் தேவல்கள் எழ, அதை மறைக்க இயலாமல் ரிஸீவரை காயத்ரி வைத்துவிட்டு, டேபிள் மேல் கவிழ்ந்து ரொம்ப நேரத்துக்கு அழுதாள்.

அப்புறம் மெதுவாகத் தன்னை ஆஸ்வாசப் படுத்திக் கொண்டு எழுந்தாள். குளிர்ந்த நீரில் முகத்தை கழுவின போது மனசு அத்தனை கனக்காத மாதிரி தோன்றியது.

கூடத்துக்கு வந்தாள். கண்ணாடி அலமாரியிலிருந்து தம்பூராவை எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்தாள்.

ப—ஸ்ஸ்—ஸ

தந்திகளைத் தொடர்ந்து மீட்ட, மெள்ள மெள்ள ஓங்காரமாய் நாதம். அறையை ஆக்கிரமித்தது.

ஸ—ப—ஸ் சொல்லி, 'மைத்ரீம் பஜத அகில ஹ்ருஜேத்ரீம்'—உலகத்திலுள்ள அத்தனை பேர்களையும் நண்பர்களாக நினைத்துவிடு—என்ற காஞ்சி பெரியவரின் பாடலை மென்மையாய், கண்களை மூடிக் கொண்டு பாடத் துவங்குகையில்—

என் நண்பன் சுதா விவேகி. யோசித்தால் நிலைமையைப் புரிந்து கொள்வான். ஆயுசு பர்யந்தம் எங்கள் நட்பு அழகாக நிலைப்பது நிச்சயம்—என்ற எண்ணம் மனசுக்குள் தீர்மானமாய் பளபளப்பது அவளுக்குப் புரிந்தது.

16978
329470

முற்றும்